
# ஒரு சருகுக்குள்ளே கசியும் ஈரங்கள்

முதல் பாகம்



ஜோர்ஜ் சந்திரசேகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-11-2000
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-11-2000
LIBRARY

517684

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சருகுக்குள்ளே
# கூசியும் ஈரங்கள்

**முதல் பாகம்**

**ஜோர்ஜ் சந்திரசேகரன்**
**11/1** இசை ஒழுங்கை,
தாமரைக்கேணி,
மட்டக்களப்பு

517684

517684

பூபாலசிங்கம் புத்தகசாலை,
டிரஸ்ட் காம்ப்ளக்ஸ்
**340,** செட்டியார் தெரு,
கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் தலைப்பு : ஒரு சருகுக்குள்ளே கசியும் ஈரங்கள்

(முதல் பாகம்)

முதற் பதிப்பு : நவம்பர் 1995

பக்கங்கள் : 168- 172

விலை :

தயாரிப்பு : சிறுகூடல்பட்டி
முத்துப்பழனியப்பன்

அச்சிட்டோர் : ஸ்ரீ சூர்ய சந்திரா அச்சகம்
57, முத்து முதலி தெரு,
ராயப்பேட்டை,
சென்னை-600 014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-11-2000
LIBRARY

# சமர்ப்பணம்

தமிழைப் படியாதே. ஆங்கிலத்தைப் படியென்று கட்டாயப்படுத்தியதால் என் தமிழ் ஆர்வத்தை தன்னையறியாமலே வளர்த்தவரும், ஆங்கில அறிவையும் சேர்த்து வளர்த்தவருமான என் தந்தை ஜோசப்பிள்ளை அவர்களுக்கும் என் முதல் ரசிகையான என் தாயார் கனகம்மாள் ஜோசப் பிள்ளை அவர்களுக்கும்...

இவர்கள் இருவரும் திருமணபந்தத்தில் ஒன்று சேராது போயிருந்தால் நான் எங்கே? இந்தப் புத்தகம் தானெங்கே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோர்ஜ் சந்திரசேகரனும் அவரது

## ''ஒரு சருகுக்குள்ளே, கசியும் சுரங்கள்''

என்றும் நூலும்

எம். ஏ. நுஃமான்

UNIVERSITY OF PERADENIYA LIBRARY 22-11-2000

1960 களின் நடுப்பகுதி என்று நினைக்கிறேன். கொழும்பில், ரெயின்போ அச்சகத்தில் ஜோர்ஜ் சந்திர சேகரனை இரண்டொரு முறை பார்த்த ஞாபகம் இருக்கிறது. அப்போது அவர் இளைஞர், 25 வயது தாண்டி இருக்காது. இப்போது போல் அன்றி, முகம் நிறையத் தாடியும் தலைநிறைய முடியும் இருந்தது. நான் அவரைவிட நாலுவயது குறைந்தவன்; அப்போதுதான் இலக்கிய உலகில் தவழ் நடை பயின்று எழும்பி நிற்கத் தொடங்கியிருந்தேன். அவரோடு முகப் பழக்கம்தான்; நெருங்கிப் பழகி உறவாடிய ஞாபகம் இல்லை.

பின்னர் நீண்ட காலமாக அவரைக் காணும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆயினும் இடைக்கிடை, அவரது தடித்த, கம்பீரமான குரலை வானொலியில் கேட்டிருக்கிறேன். நான் அறுபதுகளில் பார்த்த அந்த வாலிபத்தை அப்போதெல்லாம் அவரது கம்பீரமான சாரீரம் நினைவூட்டும். கனகாலத்துக்குப் பிறகு மிகச் சமீபத்தில்தான், இலங்கை வானொலியில் ஒரு ஒலிப்பதிவுக்குச் சென்றிருந்த போது அவரை மீண்டும் நேரில் சந்திக்கக் கிடைத்தது. வற்றி மெலிந்த உடலும் வழுக்கை விழுந்த தலையுமாக, அரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டையும் மேலும் நான்கு ஆண்டுகளையும் கடந்து வந்த முதிர்ச்சியின் நிதானத்தோடு வானொலி நிலையத் தேனீர்ச் சாலையில் பல விசயங்களைப் பற்றியும் உரையாடிக் கொண்டிருந்தபோது தான் தனது கலை இலக்கிய அனுபவங்கள் பற்றி தான் எழுதிய நினைவுக் குறிப்புகளின் பிரதியைத் தந்து அதற்கு ஒரு முன்னுரை எழுதித் தருமாறு கேட்டுக் கொண்டார். கடந்த சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளாக இலக்கிய உலகில் அவரது சகபயணி என்ற ஒரே ஒரு தகுதியோடு நான் அதை ஏற்றுக் கொண்டேன்.

ஜோர்ஜ் சந்திரசேகரன் 1960 களில், தான் எழுதத் தொடங்கிய காலத்திலேயே, பலரது கவனத்தைக் கவர்ந்த முக்கியமான சிறுகதை எழுத்தாளர்களுள் ஒருவர். இருபது முதல் முப்பது வயதுக்குள் அவர் தனது பெரும் பாலான சிறுகதைகளை எழுதிவிட்டார் என்று நினைக்கின்றேன். 1970க்குப் பிறகு இலக்கிய உலகில் அவர் பெரும்பாலும் அஞ்ஞாத வாசத்தை மேற் கொண்டார் என்றுதான் சொல்லவேண்டும். ஆயினும் வானொலியில் அவரது பங்களிப்பு இன்று வரை தொடர்கின்றது. சில மாதங்களுக்கு முன்புதான் (ஜூன் 1994) அவரது 12 சிறுகதைகளைக் கொண்ட தொகுதி ஒன்று அவரது முதலாவது நூலாக வெளி வந்துள்ளது. இலங்கையில் வெளி வந்துள்ள குறிப்பிடத் தகுந்த சிறுகதைத் தொகுதிகளுள் அதற்கும் ஓர் இடம் ஏற்பட்டு விட்டது.

1960 களில் நானும் ஓர் ஆரம்ப எழுத்தாளனாக இருந்த காலத்தில் ஜோர்ஜின் சிறுகதைகளை ஆர்வத்தோடு விரும்பிப் படித்து வந்திருக்கிறேன். 1962ல் கல்முனை எழுத்தாளர் சங்கம் இலங்கையர் கோன் நினைவாக ஒரு சிறுகதைப் போட்டி நடத்தியது. அதில் ஜோர்ஜ் எழுதிய 'குண்டு மாமா' என்ற கதைக்கு இரண்டாம் பரிசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. அப்போது நானும் கல்முனை எழுத்தாளர் சங்கத்தில் ஓர் உறுப்பினனாக இருந்தேன். அதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு என்று நினைக்கிறேன் 'ரசிகர் குழு' நடத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் அவரது 'மோகம்' என்ற கதைக்கு மூன்றாம் பரிசு கிடைத்தது. அந்தப் போட்டிக்கு நானும் ஒரு சிறுகதை அனுப்பியிருந்தேன். அதற்குப் பரிசு எதுவும் கிடைக்கவில்லை. எனினும் பிரசுரிக்கத் தகுந்த கதைகளுள் ஒன்றாக தெரிந்து 'போட்டிக்கதைகள்' என்ற பெயரில் தான் வெளியிட்ட தொகுப்பில் அதை சேர்த்திருந்தார் எம். ஏ. ரஹ்மான். இப்போது படித்துப் பார்க்கும்போது அது பிரசுரிக்கத்தகாத ஒரு சிறுகதை என்று தெரிகின்றது. ஆனால் ஜோர்ஜ் சந்திரசேகரனின் கதை இன்றும் புதுமையாகவே இருக்கின்றது. எனது சொந்த அனுபவத்தையே அவர் எழுதியிருப்பது போல் உணர்கின்றேன். அது அவரது சொந்த அனுபவமாகவும் இருந்திருக்க வேண்டும். சந்திரசேகரன் எழுதத் தொடங்கிய காலத்திலேயே தன் உண்மை அனுபவத்துக்கு விசுவாசமாக இருந்து நல்ல இலக்கியம் படைத்திருக்கிறார் என்பது இன்று அவரது கதைகளைத் திரும்பப் படிக்கும் போது தெரிகின்றது.

ஜோர்ஜ் சந்திரசேகரன் ஒரு நல்ல நாவலாசிரியராகவும் பிரகாசித்திருக்க வேண்டியவர். 60களின் பிற்பகுதியில் அவர் எழுதிய 'பொம்மலாட்டம்' நாவலை 'செய்தி' பத்திரிகையில் தொடராகப் படித்து ரசித்திருக்கிறேன். அது கட்டாயம் நூல் உருவாக வேண்டிய படைப்பு, அதை விடப் பெரிய, நல்ல நாவல்களை எழுதும் திறமை சந்திர சேகரனிடம் இருக்கின்றது. அவர் முயற்சிப்பாராயின் இலங்கைத் தமிழ் நாவலின் தலைவிதி பற்றி திருப்திப்படக் கூட்டிய இரண்டொரு படைப்புக்களாவது அவர்மூலம் நமக்குக் கிடைக்கக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், படைப்பு முயற்சிகளையெல்லாம் விட்டு விட்டு அவர் இப்போது தனது கலை இலக்கிய அனுபவத் துளிகளையே நமக்குத் தந்துள்ளார். இது அப்படி ஒன்றும் முக்கியத்துவம் அற்ற முயற்சியல்ல. சிலவேளை புனைகதை களைவிட சுவையானவையாகவும் பிரயோசனமானவை யாகவும் இத்தகைய முயற்சிகள் அமைந்துவிடுகின்றன. அவரது சிறுகதைகளைப் படித்த அதே ஆர்வத்தோடு அவரது அனுபவத் துளிகளையும் படித்தேன். தமிழில் இத்தகைய எழுத்துக்கள் சில வெளிவந்துள்ளன. ஆயினும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் எழுத்தாளர்களுள் பலர் தங்களைச் சுற்றி ஒரு ஒளி வட்டத்தைப் பிரகாசமாக எரியச் செய்வதற்கே முயன்றுள்ளனர். அவர்களது அனுபவங்கள் பல கற்பனையானவையும் இட்டுக் கட்டியவையாகவும் பொய் கலந்தவையாகவும் இருக்கும்.

ஒரு உதாரணத்தை இங்கு சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். சில ஆண்டுகளுக்கு முன் எனது நண்பர் ஒருவர் தனது மறக்க முடியாத இலக்கிய நினைவுகளை ஒரு புத்தகமாக வெளியிட்டார். அதில் நான் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி பற்றி பொய்யான தகவல் கொடுத்துள்ளார். சம்பவம் இதுதான். 1970களின் தொடக்கத்தில் ஆண்டு சரியாக ஞாபகம் இல்லை. கவிஞர் அப்துல் ரகுமான் இலங்கைக்கு வந்திருந்தார் அவரது வருகையைப் பயன்படுத்தி இலங்கை. வானொலி முஸ்லிம் நிகழ்ச்சி அவரது தலைமையில் ஒரு கவியரங்கை ஏற்பாடு செய்திருந்தது. கலையகத்தில் பார்வையாளர் முன்னிலையில் கவியரங்கு நடை பெற்றது. 'சொல்லத்தான் நினைக்கின்றேன்' என்பது தலைப்பு. நான், புரட்சிக் கமால், கலைவாதி கலீல் முதலியோர் கவிதை வாசித்தோம். கவியரங்கு முடிவில் எல்லாருக்கும் தேநீர் உபசாரம் நடை பெற்று நிகழ்ச்சி முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய கவியரங்குக்கு அழைக்கப்பட்டிருந்த சபையினரில் பலர் இலக்கியத் தொடர்பு அற்றவர்கள். சமூகப் பிரமுகர்கள். நானோ 70 களில் தீவிர இடது சாரிச் சிந்தனை வயப்பட்டிருந்தவன். சமூகத்தில் அங்கீகரிக்கப் பட்டிருந்த கருத்துக்களைப் பற்றியே எழுதி கைதட்டு வாங்கும் கவிஞர்களை எனது கவிதையில் சாடியிருந்தேன். சில தீவிரமான சமூக விமர்சனங்களை முன் வைத்திருந்தேன். நான் எதிர் பார்த்தது போலவே எனது சில கருத்துக்களும் வார்த்தைப் பிரயோகங்களும் சபையினர் சிலருக்குப் பிடிக்கவில்லை. கவியரங்கைத் தொடர்ந்து வந்த சில நாட்களில் நானும் எனது கவிதையும் கொழும்பில் ஆங்காங்கே தீவிரமாக விமர்சிக்கப்பட்டதாக அறிந்தேன்.

அப்போது முஸ்லிம் நிகழ்ச்சிக்குப் பொறுப்பாக இருந்தவர் எனது மதிப்புக்குரிய வி. ஏ. கபூர் அவர்கள். எனது கவிதை காரணமாக கவியரங்கக் கவிதைகளை முஸ்லிம் நிகழ்ச்சியில் ஒலிபரப்புவதில் அவருக்குச் சில சங்கடங்கள் இருந்தன. அவர் ஒரு நாள் என்னைத் தனது வீட்டுக்கு அழைத்து இது பற்றிப் பேசினார். எனது கவிதையில் சில பகுதிகளை நீக்கி விட்டால் நிகழ்ச்சி முழுவதையும் ஒலிபரப்பலாம் என்று சொன்னார். அவருக்குப் பிரச்சினை இல்லாத வகையில் எவ்வளவை நீக்க வேண்டுமோ அவ்வளவையும் நீக்கிவிட்டு ஒலிபரப்புவதற்கு நான் அனுமதித்தேன். ஆயினும் என்ன காரணத்தினாலோ அந்த நிகழ்ச்சி பின்னர் ஒலிபரப்பப் படவே இல்லை.

இந்தச் சம்பவம் பற்றி தனது மறக்க முடியாத நினைவு களில் எழுதிய நண்பர் தானும் அந்தக் கவியரங்கில் கவிதை படிக்க இருந்ததாகவும் ஆனால் எனது கவிதை காரணமாக கவியரங்கம் குழப்பத்தில் முடிந்ததால் தன்னால் கவிதை படிக்க முடியாது போய்விட்டது என்றும் குறைபட்டு முற்றிலும் பொய்யான தகவலைத் தந்துள்ளார். சம்பந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவர்கள் எல்லாரும் உயிருடன் இருக்கும் போதே அவர் இவ்வாறு எழுதியுள்ளது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆயினும் மறதியில் நினைவுக் குறிப்புகள் எழுதும் இத்தகைய வேடிக்கை மனிதர்களைக் கண்டு சிரிக்கப் பழகிக் கொண்ட தால் நான் அதுபற்றி அலட்டிக் கொள்ளவில்லை. பொருத்தம் கருதியே அதுபற்றி இங்கு முதல்முதல் பிரஸ் தாபிக்கின்றேன்.

ஜோர்ஜ் சந்திரசேகரனின் கலை இலக்கிய அனுபவத் துளிகளில் இத்தகைய பொய்மைகள் எவையும் இருக்க முடியாது என்பது வாசிக்கும் போது தெரிகிறது. அவர் தன்னைச்சுற்றி ஒரு ஒளிவட்டத்தைப் பிரகாசிக்கச் செய்யும் நோக்கத்துடன் இதனை எழுதவில்லை. உண்மையில் இது அவரைப் பற்றி அன்றி அவரது நண்பர்கள், அவரது சூழல், அவரை உருவாக்கிய மனிதர்கள், அவர் நடந்து வந்த பாதை என்பன பற்றியதாகவே உள்ளது. ஒரு சாதாரண எளிய குடும்பத்தில் பிறந்த ஜோர்ஜ் சந்திரசேகரன் என்ற சிறுவன் ஒரு கலைஞனாக, எழுத்தாளனாக உருவாகிய சூழலை இது நமக்குக் காட்டுகின்றது. இது ஜோர்ஜ் சந்திர சேகரன் என்ற கொம்பு முளைத்த ஒரு எழுத்தாளனின் சுய தம்பட்டம் அல்ல. நம் போன்ற ஒரு சாதாரண மனிதனின், ஒரு சாதாரண கலைஞனின் இளமைக்கால அனுபவங்களின் உண்மையான பதிவு. இதுதான் இந்த நூலின் முதன்மையான சிறப்பு என்று நான் கருதுகின்றேன்.

இதன் பிறிதொரு சிறப்பு நமது அனுபவத்தையும் இது வளப்படுத்துவதாகும். 1950, 60 களில் ஈழத்துக் கலாசார வாழ்வின் ஒரு பகுதியை இந்நூல் நமது அனுபவமாக்கித் தருகின்றது. அன்றைய நாடகம், அன்றைய சினிமா, அன்றைய வானொலி, அன்றையப் பத்திரிகை, அன்றையக் கலைஞர்கள் முதலானவை பற்றிய பல அறிய தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன. நடராஜ சிவம். ஜோக்கிம் பெர்னாண்டோ, கனகரெத்தினம் என நாம் மேலோட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக அறிந்த எத்தனையோ மனிதர்களின், கலைஞர்களின் ஆளுமை பற்றிய அனுபவச் சித்திரங்கள் இதில் நமக்குக் கிடைக்கின்றன. பேராசிரியர் சிவத்தம்பி பற்றி நாம் அறிந்திராத பல தகவல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. அவ்வகையில் நமது கலாசார வாழ்வின் சில அம்சங்கள், சில மனிதர்கள் பற்றிய பெறுமதிமிக்க பதிவுகளாக இந்நூல் அமைகின்றது.

உண்மைக்கு உண்மையான இத்தகைய அல்-புனை கதை எழுத்துக்கள் Non fictional writings தமிழில் மிகவும் குறைவாகும். உண்மை வாழ்க்கை அனுபவங்களைக் கொச்சைப்படுத்தி பொய்யான கற்பனைக் கதைகளை எழுதி இலக்கிய வியாபாரம் நடத்தும் எழுத்தாளர்கள் மலிந்துள்ள இன்றையச் சூழலில் இத்தகைய எழுத்துக்கள் நமக்கு மன ஆறுதல் தருவன. திறமையும் அடக்கமான ஆளுமையும் கொண்ட நண்பர் ஜோர்ஜ் சந்திரசேகரன் தன் மிகுதி அனுபவங்களையும் எழுத்தில் கொண்டு வரவேண்டும், அதோடு நின்று விடாமல் உண்மை வாழ்க்கைக்கு விசுவாசமான புனைகதைகளையும் படைத்துத் தரவேண்டும் என்ற வேண்டுகோளுடன் இந்தக் குறிப்பை நிறைவு செய்கிறேன்.

கலாநிதி எம். ஏ. நுஃமான்

சிரேஷ்ட விரிவுரையாளர்

தமிழ்த்துறை

பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராதனை

இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

என் வாழ்வில் நிகழ்ந்த மற்றெல்லா நிகழ்வுகளைப் போல, இந்தப் புத்தகமும் ஒரு விபத்துதான். 1983ஆம் ஆண்டு ஜுலை மாதம், கலவரங்களினால் கொழும்பு நகர் அல்லோலகல்லோலப்பட்டது. இதன் பின், தமிழன் என்று கூறிக்கொண்டு வெளியே நடமாட முடியவில்லை. எனவே, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குப் போக முடியவில்லை. எத்தனையோ தமிழர்களான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது.

கலவரங்கள் அடங்கிய சுமார் ஒரு வார காலத்தில் நான் ரெயிலில் மட்டக்களப்பிற்குச் சென்றுவிட்டேன்.

சுமார் இரண்டு மாதங்களுக்குப்பின், வானொலியிலும், ரூபவாஹினியிலும், தமிழ் அரசாங்க ஊழியர்கள் வேலைக்குத் திரும்பும்படி அறிவிக்கப்பட்டது. இதைக் கேட்டு வேலைக்குத் திரும்பினேன். இப்படி வேலைக்குத் திரும்பிய பல தமிழ் ஊழியர்களில் சிலர் கட்டாய லீவில் திருப்பி அனுப்பப்பட்டார்கள். மிகக்குறைவான தமிழ் ஊழியர்களே அனுமதிக்கப்பட்டார்கள். இப்படி அனுமதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். ஆனால் வேறு தமிழர்கள் யாரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாதென்று மேலிடத்தின் உத்தரவு. இதனால் எந்த நிகழ்ச்சியையும் தயாரிக்க முடியாத நிலை.

காலையில் 8½ மணிக்கு ஆபிசுக்கு வந்தால் 4½ மணிக்கு வெளியேறும்வரை ஒரு வேலையுமே இருக்காது. ஒலிபரப்பான ஒலிப்பதிவு நாடாக்களையே மறு ஒலிபரப்புச் செய்துகொண்டு எத்தனை நாளைக்குத்தான் பேசாமல் உட்கார்ந்திருப்பது? வீணாகக் கழியும் பொழுதை ஏதாவது பிரயோசனமான காரியத்தில் செலவிட்டால் என்னவென்று தோன்றியது.

எனக்குத் தெரிந்த பிரயோசனமான காரியமென்றால் அது எழுத்தைத் தவிர வேறென்னவாக இருக்க முடியும்? முதலில் சிறுகதைகள் எழுத முனைந்தேன். ஆனால் அன்றிருந்த என் மனோ நிலை அதற்கு இடங்கொடுக்க வில்லை. எனவே என்ன எழுதுவதென்று யோசித்துக் கொண்டிருந்தபோது, என் பழைய ஞாபகங்களை எழுத்து மூலம் மீட்டிப் பார்க்கலாம் என்று எண்ணினேன். எழுதத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

, நடராஜ சிவம் வசனங்களைப் பேசத் தொடங்க, எனக்குத் 'திக்' என்றது. பேசுவது சிவாஜி கணேசனா அல்லது நடராஜ சிவமா என்பது புரியவில்லை. ஓரளவு சிவாஜி கணேசனின் குரலும் நடராஜ சிவத்திற்கு அமைந்திருந்ததால், அவரது நடிப்பு அப்பட்டமாக சிவாஜி கணேசன் நடிப்பது போலவே இருந்தது.

நாடகத்தின் கதாநாயகன் நடராஜ சிவம். எனவே, இவரை வைத்துக் கொண்டு எப்படி நாடகத்தை நெறியாள்வது என்று எனக்குப் புரியவில்லை. அன்றைய ஒத்திகை ஒருபடியாக முடிந்தது.

மறுநாள், 'லிபர்ட்டி' தியேட்டரில் ஒரு ஆங்கிலப் படம் பார்த்தேன். Peter O' Tool நடித்த Becket. இதுவே இலங்கையில் காண்பிக்கப்பட்ட பீட்டர் ஓ டூலின் முதற்படம். ஆனால் அவர் நடித்த முதற்படம் Lawrence of Arebia. இது பின்னரே இங்கு காண்பிக்கப்பட்டது.

Becket திரைப்படத்தில் Peter O' Tool இன் நடிப்பு வெகுவெகு பிரமாதமாக இருந்தது. தியேட்டரை விட்டு வெளியே வந்ததும், வார்த்தைகளால் வர்ணிக்க முடியாததோர் பரவசம் என் உள்ளமெல்லாம் நிறைந்து பரவியது. அத்துடன் இன்னுமோர் எண்ணமும் உதித்தது. அது நடராஜ சிவத்தைப் பற்றியது. அவர் ஒரு திறமைமிக்க நடிகர் என்பதை முதல் நாள் ஒத்திகையின் போதே நான் புரிந்து கொண்டேன். ஆனால் சிவாஜி கணேசனின் பிடியிலிருந்து அவரை எப்படி விடுவிப்பதென்றுதான் எனக்குப் புரியவில்லை. ஆனால் Peter O' Tool இன் நடிப்பைப் பார்த்தபின் எனக்கொரு யோசனை தோன்றியது.

'லிபர்ட்டி' தியேட்டரிலிருந்து நேராக ஒத்திகைக்கு வந்து சேர்ந்தேன். தயாரிப்பாளர் சி. சண்முகமும் நடிகர்களும் எனக்காகக் காத்திருந்தார்கள். ஒத்திகை, வழக்கமாக மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை நடைபெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திகையை ஆரம்பிப்பதற்கு முன்னரே தயாரிப்பாளரிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். அதாவது, அன்றைய ஒத்திகையை 8½ மணிக்கே முடித்துவிட அனுமதி கேட்டேன். அவர் 'ஏன்?' என்றார். இரவு 9½ மணிக் காட்சித் திரைப்படம் ஒன்று பார்க்கப் போவதாகச் சொன்னேன். அத்துடன் இந்த நாடகத்தில் நடிக்கும் சில நடிகர்களையும் அழைத்துச் செல்லப் போவதாகவும் சொன்னேன். அவரும் சம்மதித்தார். ஒத்திகை முடிந்ததும், நடராஜ சிவம், ஜோக்கிம் பர்னாந்து, செல்வசேகரன் ஆகியோர் என்னுடன் திரைப்படத்திற்கு வரச் சம்மதித்தார்கள்.

நால்வருமாகப் போய் Becket திரைப்படம் பார்த்தோம். படம் பார்த்துவிட்டு வெளியே வந்ததும், நடராஜ சிவம் கூறிய முதல் வார்த்தைகள், ''சிவாஜி கணேசன் என்ன நடிகன், Peter O' Tool க்குக் கிட்டக்கூட வரமுடியாது.''

எனக்கு ஒரே மகிழ்ச்சி. எனது முயற்சி வெற்றியளித்து விட்டது என்ற சந்தோஷம். நாடராஜ சிவத்தை சிவாஜி கணேசனின் பிடியிலிருந்து விடுவித்து விட்டேன் என்ற பெருமிதம்.

''இந்த வார்த்தைகளைக் கேட்பதற்காகத்தான் உம்மை இந்தத் திரைப்படத்திற்கு அழைத்து வந்தேன்,'' என்று சொன்னேன்.

இதன் பின், நடராஜ சிவம் தனது நடிப்பின் பாணியையே மாற்றிக் கொண்டார். 'கடவுள் எங்கே?' மேடை நாடகத்தில் வெகு திறமையாக நடித்துப் பலரது பாராட்டையும் பெற்றார்.

'கடவுள் எங்கே' நாடகம் 1966 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் 25ஆம் தேதிகளில் 'லயனல் வென்ற்' அரங்கில் மேடையேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரத்தக் கண்ணீர் ராதா

Peter O' Tool ஐப் பற்றி எழுதும்போது, இவரைப் போலவே, தனது நடிப்பால் என்னைப் பரவசப் படச்செய்த தென்னிந்திய தமிழ்ந் திரைப்பட நடிகர் ஒருவரின் ஞாபகமும் வருகிறது. அவர்தான் 'ரத்தக் கண்ணீரில்' நடித்த எம். ஆர். ராதா.

'ரத்தக் கண்ணீர்' ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதுகளில் இலங்கையில் திரையிடப்பட்டது. ஆண்டு சரியாக ஞாபகமில்லை. அப்போது நான் கொட்டாஞ் சேனை அர்ச். பெனடிக்ஸ் கல்லூரியில் எட்டாம் வகுப்பிலோ ஒன்பதாம் வகுப்பிலோ படித்துக் கொண்டிருந்தேன்.

பதினேழு தடவைகள் இந்தத் திரைப்படத்தைப் பார்த் திருக்கிறேன். நான் என் வாழ்க்கையில் அதிகமான தடவைகள் பார்த்த திரைப்படம் இதுதான். அப்போதெல் லாம் ரத்தக் கண்ணீர் திரைப்பட வசனங்கள் யாவுமே எனக்கு மனப்பாடம். எம். ஆர். ராதா பேசும் வசனங்களை அவரைப்போல குரலை மாற்றிப் பேசுவேன். இதற்கு அப்போது நான் 50 சதத்திற்கு வாங்கிய ரத்தக் கண்ணீர் கதைவசனப் புத்தகம் பெரிதும் உதவியது.

முதற்தடவை நான் ரத்தக் கண்ணீர் திரைப்படம் பார்த்தது ஒரு சுவையான சம்பவம்.

## ஐந்து சத விவகாரம்

நானும் என் நண்பன் ஜோக்கிம் பர்னாந்துவும், ஒரே கல்லூரியில் ஒரே வகுப்பில் அப்போது படித்துக் கொண் டிருந்தோம். எனக்கும் என் நண்பன் ஜோக்கிமுக்கும் இடையே, பல ஒற்றுமைகள் உள. நானும் என் குடும்பத்தில் ஒரே பிள்ளை. அவனும் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. இருவரும் 1940 ஆம் ஆண்டு பிறந்தோம். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதியிலும், நான் டிசம்பர் மாதம் 16 ஆம் திகதியிலும் பிறந்தோம். வகுப்பில் அவனும் நானும் பக்கத்தில் பக்கத்தில்தான் உட்கார்ந்திருப்போம். எங்கள் வகுப்பாசிரியராக இருந்த 'பிரதர்' கொண்ராட் என்பவர், எங்களை 'லவ் பேட்ஸ்' என்றே அழைப்பார்.

ஞாயிற்றுக் கிழமைகளில் Sunday School லுக்கு 'கட்' அடித்துவிட்டு, நானும் என் நண்பனும் சினிமா பார்க்கப் போவது வழக்கம்.

அந்த நாட்களில் sunday school லுக்குப் போவதானால் வீட்டிலிருந்து பத்துச்சதம் கிடைக்கும். அப்போது பத்துச் சதத்தில் நிறையக் காரியங்கள் செய்யலாம். ஆனால் 'கெலரி'யிலிருந்து படம் பார்ப்பதானால் 50 சதம் தேவை. எனவே, ஞாயிற்றுக்கிழமைகளில், காலையில் 'மார்க்கெட்'டுக்குப் போகும்போது, ஒவ்வொரு மரக்கறியிலும் 5 சதம், 10 சதம் என்று மிச்சம் பிடித்து, பகலாகுமுன் 50 சதம் சேர்த்து விடுவோம்.

அந்த ஞாயிற்றுக்கிழமை, பகல், ஜோக்கிம் என் வீட்டுக்கு வந்ததும், இருவருமாக கிங்ஸ்லி தியேட்டருக்குப் புறப்பட்டோம். வழியில், தான் 50 சதத்திற்கு மேலதிகமாக ஐந்து சதம் தேடிவிட்டதாகப் பெருமையுடன் கூறி சில்லறைக் காசுகளையெல்லாம் என் கையில் தந்தான் ஜோக்கிம். நானும் அவற்றை வாங்கி, நான் சேர்த்து வைத்திருந்த சில்லறைக் காசுகளுடன் பொக்கட்டில் போட்டுக் கொண்டேன்.

பகல் ஒரு மணி. வெய்யில் கொழுத்துகிறது. என் நண்பனும் நானும் கிங்ஸ்லி தியேட்டர் வாசலில் நீண்டு நிற்கும் 'கலரி கியூவில்' நிற்கிறோம். தான் ஐந்து சதம் அதிகமாகப் பெற்றதற்கான காரணத்தை விளக்கிக்கூறிய நண்பன், 'எக்ஸ்ட்ரா' வாக இருக்கும் ஐந்து சதத்திற்கு ஏதாவது இனிப்பு வாங்கிச் சாப்பிடுவோம் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் சரியென்று பொக்கெட்டிலிருந்து 5 சதத்தை எடுத்துக் கொடுத்தேன்.

அந்தக் காலத்தில், தோடம்பழச் சுளைகளைப் போன்ற வடிவத்திலமைந்த 'நாராம்பீக்' என்ற இனிப்பு ஒரு சதத்திற்கு இரண்டு தருவார்கள். பக்கத்திலிருந்த கடைக்கு ஓடிப் போய் இனிப்பு வாங்கி வந்து என்னிடம் தந்தான் ஜோக்கிம். அந்தச் சிறிய பொட்டலத்தை என் அரைக் கால் சட்டைப் பொக்கட்டிற்குள் திணித்துக் கொண்டேன் நான்.

ஏதேதோ கதைத்துக் கொண்டு 'கியூ' வில் நின்றோம்.

சுமார் 5 நிமிடங்களின் பின், ''ஆளுக்கொரு இனிப்பை எடுத்து வாயில் போட்டுக் கொள்வோமா?'' என்று கேட்டான் ஜோக்கிம்.

''வேண்டாம். தியேட்டருக்குள் போனதும் சாப்பிடலாம்,'' என்றேன் நான். நண்பனும் ஒப்புக் கொண்டான்.

ஒன்றரை மணியாகியதும் டிக்கட் கொடுக்கத் தொடங்கினார்கள். 'கியூ' நகரத் தொடங்கியது.

நான் பொக்கட்டில் இருந்த சில்லறைகளை எடுத்து எண்ணத் தொடங்கினேன். 95 சதம் தான் இருந்தது. மீண்டும் எண்ணினேன். 95 சதம்தான். ஜோக்கிமிடம் கொடுத்து எண்ணச் சொன்னேன். அவனும் எண்ணிப் பார்த்தான். 95 சதம்தான் இருந்தது. இருவரும் மாறி மாறிப் பலமுறை எண்ணியும் பலனில்லை. 95 சதம்தான்.

ஒரு ரூபாய் இல்லாமல் இரண்டு டிக்கட்டுகள் தர மாட்டானே! ஐந்து சதம் எப்படிப் போயிற்று? கீழே எங்கும் விழுந்து விட்டதா?

இப்படியே, நகரும் 'கியூ'வில் பல வித ஐயப்பாடுகளுடன் நகர்ந்து கொண்டிருந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்போது என்ன செய்வது?'' என்று கேட்டான் ஜோக்கிம்.

''இனிப்பைக் கொடுத்து விட்டு, 5 சதத்தை வாங்கிக் கொண்டு வா'', என்றேன்.

''கடைக்காரன் இனிப்பைத் திரும்ப வாங்குவானா?''

''வேறு வழியில்லை, ட்ரை பண்ணிப் பார்,'' என்று கூறி, பொக்கட்டிலிருந்த இனிப்புப் பொட்டலத்தை எடுத்து, அவன் கையில் கொடுத்தேன். வாங்கிக் கொண்டு கடையை நோக்கி ஓடினான் நண்பன்.

'கியூ' நகர்ந்து கொண்டிருந்தது. எனது மனம் 'பக் பக்'கென்று அடித்துக் கொண்டது. கடைக்காரன் இனிப்பைத் திருப்பி எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டால் என்ன செய்வது? படம் பார்க்க முடியாமற் போய்விடுமே!

''கடவுளே, கடைக்காரன் இனிப்பைத் திரும்ப வாங்கிக்கொள்ள வேண்டும்' என்று பிராத்தனை செய்தபடி 'கியூ'வில் நகர்ந்துகொண்டிருந்தேன்.

இப்போது எனக்கு முன்னால் 'கியூ'வில் இரண்டு பேர் தான் நின்று கொண்டிருந்தார்கள். 'கடவுளே, கடவுளே' என்று மனம் அடித்துக் கொண்டது.

நாலுகால் பாய்ச்சலில் ஓடி வந்த நண்பன், என் கையில் 5 சதத்தைத் தந்தான். அந்தக் கணத்தில் நான் அடைந்த மகிழ்ச்சி, இன்றும் என் மனத்தில் பசுமையாக இருக்கிறது.

''இனிப்பைத் திரும்ப வாங்கிக் கொண்டானா?' என்றேன்.

''கடைக்காரனைச் சிந்திக்கவே நான் விடவில்லை. இனிப்பு வேண்டாம். காசைத் தாங்க என்று மிகவும் அவசரமாகக் கேட்டேன். முதலில் என்னை ஆச்சரியமாகப் பார்த்தான். பின் தந்து விட்டான். காசு கிடைத்ததும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிக்கூடப் பார்க்காமல் ஓடிவந்து விட்டேன்,'' என்று பெருமையாகச் சொன்னான் நண்பன்.

## என் முதல் ரேடியோ அனுபவம்

1956ஆம் ஆண்டு. நான் அர்ச். பெனடிக்ஸ் கல்லூரியில் 9ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த சமயம். என் வகுப்பு மாணவர்கள் சிலர் அடிக்கடி ரேடியோ சிலோனுக்குப் போய், பொது அறிவுப் போட்டி (Do you know contest) யில் பங்கு பற்றி வந்தார்கள், சிலர் பரிசு கூட வாங்கியதுண்டு.

ரேடியோ சிலோனுக்குப் போய் இந்த நிகழ்ச்சி நடைபெறுவதைப் பார்க்கவேண்டும் என்று எனக்கு நெடு நாளாக ஆசை. ஆனால் அங்கு போனால் நம்மிடமும் ஏதாவது கேள்வி கேட்டு விடுவார்களோ என்ற பயத்தால் பலமுறை என் வகுப்பு நண்பர்கள் அழைத்தும் நான் போகவில்லை. என்றாலும், ரேடியோ சிலோனுக்குப் போய், நிகழ்ச்சிகள் நடைபெறுவதைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை, நாளுக்கு நாள், என்னையறியாமலே என்னுள் வளர்ந்து வந்தது.

'பொது அறிவு வினாவிடை' நிகழ்ச்சிக்குப் போகும் எல்லோரிடமும் கேள்வி கேட்பார்களா, என்று பலமுறை என் நண்பர்களை விசாரித்தேன். 'எல்லோரிடமும் கேட்க மாட்டார்கள். முன்னால் உள்ள நாலு பேரிடம்தான் கேட்பார்கள். மற்றவர்கள் எல்லாரும் இந்த நாலு பேருக்கும் பின்னால்தான் இருக்க வேண்டும். முன்னால் இருப்பவர்கள் பதில் சொல்லாவிட்டால்தான் பின்னால் இருப்பவர்களிடம் கேட்பார்கள். அதுவும், பின்னால் இருப்பவர்கள் கையை உயர்த்தினால் தான் அவர்களிடம் கேட்பார்கள்' என்று, ரேடியோ சிலோனுக்கு ஏற்கனவே போய்வந்த அனுபவமுள்ள என் நண்பர்கள் பலர் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வகுப்பிலே எனக்கு மிகவும் நெருங்கிய நண்பராக இருந்தவர் மகேசன். படிப்பிலே மிகவும் கெட்டிக்காரர். அவரது சகோதரர்களும் அப்படியே. ஆனால் அவர்கள் வேறு வகுப்புக்களில் படித்தார்கள்.

ஒரு நாள், தானும் தனது இளைய சகோதரரும் வேறு சில பள்ளித் தோழர்களும் பள்ளிக்கூடம் முடிந்ததும் ரேடியோ சிலோனுக்குப் போகப் போவதாக மகேசன் சொன்னார். ''நானும் வரலாமா'', என்று கேட்டேன்.'' ''தாராளமாக வரலாம்'' என்றார் மகேசன். ''ஆனால் என்னிடம் ஏதும் கேள்வி கேட்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்''. என்றேன். ''அதெல்லாம் செய்யலாம், எங்களோடு வாரும்,'' என்றார் மகேசன்.

அன்று பகல் சாப்பாட்டிற்கு வீட்டுக்குப் போன நான், ரேடியோ சிலோனுக்குப் போவதாகக் கூறிப் பணமும் வாங்கிக்கொண்டு வந்தேன். பிற்பகல் 3 45க்குப் பள்ளிக் கூடம் விட்டதும், நண்பர்கள் ஐந்தாறுபேர் சேர்ந்து ரேடியோ சிலோனுக்குப் புறப்பட்டோம்.

அந்த நாட்களில், கொட்டாஞ்சேனையிலிருந்து ரேடியோ சிலோனுக்குப் போய் வர 50 சதம் போதும்.

பொரல்லையில் பஸ்ஸில் வந்திறங்கி, அங்கிருந்து நடந்தே ரேடியோ சிலோனுக்குப் போனோம்.

நாம் கலந்து கொள்ளப்போன Do you know contest நிகழ்ச்சி, 5½ மணிக்கோ 6½ மணிக்கோ என்பது எனக்கு இப்போது ஞாபகமில்லை.

அப்போதெல்லாம் நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப் படுவதில்லை. 'நற்சிந்தனை' போன்ற நிகழ்ச்சிகள் தவிர ஏனைய நிகழ்ச்சிகள் யாவும் நேரடியாகவே (உடனுக்குடன்) ஒலிபரப்பப்பட்டு வந்தன. ஆங்கிலத்தில் சொல்வதானால் 'Live broadcast.'

ரேடியோ சிலோனுக்கு வந்து சேர்ந்து விட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாட்களில் யார் வேண்டுமானாலும், எந்த நேரமும் ரேடியோ சிலோனுக்குள் போய் வரலாம். இப்போது உள்ளதைப்போல் 'பாதுகாப்பு உத்தியோகத் தர்களோ' (Security guards) 'கலையகச் சேவையாளர் களோ') (Studio service) அப்போது இல்லை. ஒரே ஒரு வரவேற்பாளர் மட்டும் (Receptionist) முன் கூடத்தில் அமர்ந்திருப்பார். அவரும், நாம் ஏதும் கேட்டால்தான் பதில் சொல்வார். 'ஏன் உள்ளே போகிறாய்? யாரைப் பார்க்கப் போகிறாய்?' என்றெல்லாம் கேட்கமாட்டார்.

எனது நண்பர்கள் பலமுறை ரேடியோ சிலோனுக்கு வந்து அனுபவப்பட்டவர்கள் என்றபடியால் நேராக உள்ளே சென்றார்கள். நானும் அவர்களுடன் உள்ளே சென்றேன்.

முதலாம் இலக்கக் கலையகத்திற்கு சென்றோம். அங்கே, எங்களைப்போல, வேறு பல பள்ளிக்கூடங்களி லிருந்து பல மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள் வதற்காக வந்து குழுமி இருந்தார்கள்.

நிகழ்ச்சியை நடத்தும் அறிவிப்பாளர் 'டை'யும் கட்டிக்கொண்டு, மிகவும் 'டிப்டொப்' பாகக் காட்சியளித் தார். சற்றுக்குட்டையான சதைப்பிடிப்பான உருவம். களை பொருந்திய முகம். 'கணீ'ரென்ற குரலில் கதைத்துக் கொண்டு, மிகவும் சுறுசுறுப்பாகக் காணப்பட்டார். சற்று அப்பால், பாரிய சரீரத்தை உடைய ஒருவர் அதே போன்ற கம்பீர சாரீரத்துடன் உட்கார்ந்திருந்தார். அன்று, எனக்கு இவர்கள் இருவருமே யார் என்பது தெரியாது. அத்துடன், இவர்களில் ஒருவர், என் கலை உலக வாழ்க்கையில், என்னை வெகுதூரம் இட்டுச் சொல்லப்போகிறார் என்பதும் எனக்குத் தெரியாது. (பின்னர்தான் தெரிந்துகொண்டேன் 'டை'யுடன் நின்ற அறிவிப்பாளர்; அன்றிருந்த இலங்கை வானொலி நிரந்தர அறிவிப்பாளர்களில் ஒருவரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வி. சுந்தரலிங்கம். பாரிய சரீரமும் கம்பீர சாரீரமுமாக அமர்ந்திருந்தவர் திரு. கா. சிவத்தம்பி என்று)

நாம் கலையகத்திற்குள் சென்ற ஒரு நிமிடம் கூட ஆகி இருக்காது. எமக்காகவே காத்திருந்ததைப் போல, பாரிய சரீரத்துடன் இருந்தவர், பல கடதாசித் துண்டுகளை ஒரு தொப்பிக்குள் சுருட்டிப்போட்டு, எல்லோரிடமும் தொப்பியைக் கொண்டுவந்து நீட்டி, ஒன்றை எடுக்கச் சொன்னார். நானும் ஒன்றை எடுத்தேன்.

திறந்து பார்த்ததும் இலக்கம் இரண்டு என்று துண்டிலே எழுதி இருந்தது. இதற்கிடையில், ''முதலாவது இலக்கம் யார்?'' என்று கம்பீர சாரீரம் கேட்டது. முதலாம் இலக்கச் சீட்டை எடுத்த மாணவர், கம்பீர சாரீரத்திடம் போய், தனது பெயரையும் தான் கல்வி கற்கும் பள்ளிக்கூடத்தின் பெயரையும் கொடுத்தார். இரண்டாம் இலக்கச் சீட்டைக் கையிலே வைத்திருக்கும் என் இதயம் சற்று வேகமாக அடிக்கத் தொடங்கியது. பக்கத்திலிருந்த மாணவர்களிடம் இரண்டாம் இலக்கத்தைக் கொடுத்து இலக்கம் ஏதும் எழுதப்படாத வெள்ளைச் சீட்டை மாற்றிக் கொள்ளலாமா என்று பார்த்தேன். ஒருவருமே சம்மதிக்கவில்லை.

''இரண்டாவது இலக்கம் யார்?'' என்று கம்பீர சாரீரம் ஒலித்தது. என் இதயம் மேலும் வேகமாகப் படபடக்கத் தொடங்கியது. நான் மற்ற மாணவர்களுக்குப் பின்னால், சற்று மறைந்து நிற்கப் பார்த்தேன். ஆனால் என் கையில் இரண்டாம் இலக்கச் சீட்டு இருப்பதைப் பார்த்துவிட்ட மற்ற மாணவர்கள், ''இவர்தான் இரண்டாம் இலக்கம்,'' என்று என்னைக் கொண்டுபோய் பருத்த சரீரத்திடம் விட்டுவிட்டார்கள்.

''உம்மட பேர் என்ன?''

''ஜி. சந்திரசேகரன்.''

''எந்த ஸ்கூலில படிக்கிறீர்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சென். பெனடிக்ஸ் கொலேஜ்.''

கலையகத்தின் நடுவிலே ஓர் ஒலிவாங்கி நிறுத்திவைக்கப் பட்டிருந்தது. ஒலிவாங்கியைச் சுற்றிவளைத்தாற்போல், கால் வட்டமாக ஒரு 'குஷன் பெஞ்ச்' போடப்பட்டிருந்தது. இதில்தான் ஒன்று முதல் நான்குவரை உள்ள இலக்கச் சீட்டுகளை எடுத்தவர்கள் முறையாக அமரவேண்டும்.

இப்பொழுது நால்வரும் அமர்ந்தாகிவிட்டது. முதலாம், மூன்றாம் இலக்கச் சீட்டுக்களை எடுத்தவர்களை இப்போது எனக்கு ஞாபகமில்லை. ஆனால் நான்காவது இலக்கச் சீட்டை எடுத்தவரை மட்டும் நன்றாக ஞாபகமிருக்கிறது. அவர் என் நண்பர் மகேசனின் குட்டித்தம்பி. அப்பொழுது ஐந்தோ ஆறோ வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். ஆளும் பார்ப்பதற்கு ஒரு குழந்தைப்பிள்ளை போலத்தான் இருப்பார்.

மற்றவர்கள் எல்லோருக்கும் எமது கால்வட்ட 'குஷன் பெஞ்ச்'சுக்குப் பின்னால் தனித்தனி நாற்காலிகள் போடப் பட்டிருந்தன.

எல்லோரும் தத்தமக்குரிய ஆசனங்களில் அமர்ந்து கொள்ளுமாறு நிகழ்ச்சியை நடத்தும் அறிவிப்பாளர் கூறினார்.

அமர்ந்தாகிவிட்டது.

குறிப்பிட்ட நேரத்திற்கு நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று.

அறிவிப்பாளர் ஒலிவாங்கியின் முன் நின்றுகொண்டு, முதலாம் இலக்க மாணவனை ஒலிவாங்கியின் முன்னால் வந்து நிற்கும்படி கூறினார்.

அவரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அவர் சரியான பதிலைச் சொல்லிவிட்டார். எல்லோரும் கைதட்டினார்கள். அவருக்கு ஒரு 'புள்ளி' கிடைத்தது. அதாவது கால்வட்ட பெஞ்சில் அமர்ந்திருப்பவர் சரியாகப் பதில் அளித்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு ஒரு 'புள்ளி'. அவரால் பதிலளிக்க முடியா விட்டால், அதே கேள்வி பின்னால் அமர்ந்திருப்பவர்களுக்கு விடப்படும். அவர்கள் பதிலளித்தால், 'அரைப்புள்ளி'

அறிவிப்பாளர் ஒலிவாங்கிக்கு முன் வரும்படி என்னை அழைக்கிறார்.

எனக்குக் கை கால்களெல்லாம் நடுங்குகின்றன. எப்படியோ தைரியமாக எழுந்து ஒலிவாங்கிக்கு முன் வந்துவிட்டேன்.

''உம்முடைய பெயரென்ன?''

''ஜி. சந்திரசேகரன்.''

''சற்றுப் பலமாகச் சொல்லவேண்டும். அப்போதுதான் கேட்டுக் கொண்டிருக்கும் நேயர்களுக்குச் சரியாக விளங்கும்.''

நான் தலையை ஆட்டுகிறேன்.

''எந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறீர்?''

''சென். பெனடிக்ஸ் கொலேஜ்.''

எந்த வகுப்பில் படிக்கிறீர், என்னென்ன பாடங்கள் படிக்கிறீர், போன்ற என்னைப் பற்றிய தனிப்பட்ட கேள்விகள் பலவற்றைக் கேட்டுவிட்டு, நிகழ்ச்சிக்குரிய கேள்வியைக் கேட்கிறார் அறிவிப்பாளர்.

நான் தெரியாது என்பதற்கு அடையாளமாகத் தலையைமட்டும் ஆட்டுகிறேன்.

''இப்படித் தலையை ஆட்டினால் நேயர்கள் எப்படிப் புரிந்து கொள்வார்கள். தெரியாதென்றால், தெரியாதென்று வாயைத் திறந்து சொல்ல வேண்டும்.''

''தெரியாது,'' என்று சற்றுப் பலமாகவே கூறுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி பின்னால் இருப்பவர்களிடம் விடப்படுகிறது. சிலர் பதிலளிக்கிறார்கள்.

நான் என் இடத்தில் வந்து அமர்கிறேன். கை கால்கள் 'வெடவெட'வென்று நடுங்குகின்றன. ஒருவாறாகப் படபடக்கும் இதயத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டு அமர்ந்திருக்கிறேன். 'கலையகமே இடிந்து விழுந்து இந்த இக்கட்டிலிருந்து நம்மைக் காப்பாற்றி விடாதா,' என்ற எண்ணம் பளிச்சிடுகிறது.

மூன்றாம் இலக்கத்தை முடித்துக்கொண்டு அறிவிப்பாளர் நான்காம் இலக்கத்தை அழைக்கிறார். மகேசனின் குட்டித்தம்பி. ஒலி வாங்கி கூட எட்டவில்லை. இதைப் பற்றிச் சற்று நகைச்சுவையாகக் கூறிவிட்டு, ஒரு சுலபமான கேள்வியையே அறிவிப்பாளர் கேட்கிறார். பதிலும் கிடைத்துவிடுகிறது.

மீண்டும், இரண்டாவது சுற்று ஆரம்பமாகிறது.

என்முறை வந்ததும் ஒலிவாங்கியின் முன் சென்றேன். அறிவிப்பாளர் கேள்வியைக் கேட்டு முடிப்பதற்குள்ளேயே 'தெரியாது' என்று கூறிவிட்டு வந்து அமர்ந்து கொள்கிறேன்.

மூன்றாவது சுற்று.

''யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் யார்?''

யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசித் தமிழ்மன்னன் 'சங்கிலியன்' என்பது எனக்குத் தெரியும். என்றாலும் ஒருவேளை பிழையாக இருக்குமோ என்றொரு சந்தேகம். பிழையாக இருந்தால் எல்லோரும் சிரிப்பார்களே என்ற அச்சம்.

''தெரியாது.''

''பின்னால் திரும்பிப் பாரும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிப் பார்க்கிறேன்.

என்னைத் தவிர மற்ற எல்லோருமே கையை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். என் முகத்தில் அசடு வழிகிறது.

''இந்தக் கேள்விக்கு உம்மைத் தவிர மற்ற எல்லாருக்குமே பதில் தெரிகிறது.''

வெட்கம் பிடுங்கித் தின்கிறது. எப்போது நிகழ்ச்சி முடியும், வெளியே ஓடுவோம் என்ற ஏக்கம்.

வழக்கமாக மூன்று சுற்றுக்கள் தான் நடைபெறுமாம். அன்று நேரம் இருந்தபடியால் மேலும் ஒரு சுற்று கேட்கப் போகிறார்களாம். எனக்குத் தலையே சுற்றுகிறது.

ஒலிவாங்கியின் முன்னால் நிற்கிறேன் - தெரியாது என்று சொல்வதற்குத் தயாராக.

''இந்தியாவிலிருந்து 'ஹொலிவுட்' சென்று, ஆங்கிலத் திரைப்படங்களில் நடித்துப் புகழ்பெற்றவரின் பெயரென்ன?''

''சாபு.''

சூழ இருப்பவர்கள் கைதட்டுவது கேட்கிறது.

பொது அறிவில் மிகவும் குறைவாக இருந்தாலும் அந்த நாட்களில் திரைப்படங்களில் எனக்கு அளவு கடந்த மோகம். தமிழ், சிங்களம், ஆங்கிலம். இந்த மூன்று மொழிகளிலும் திரையிடப்படும் படங்களைப் பார்த்து விடுவேன். அத்துடன் சினிமாப் பத்திரிகைகளும் நிறைய வாசிப்பேன்.

சினிமா பற்றிய அறிவு இந்த அளவிற்காவது எனக்குக் கைகொடுத்ததே என்று சந்தோஷப்பட்டேன்.

இந்த முதல் அனுபவத்தோடு ரேடியோ சிலோனுக்குப் போகும் ஆசையை நான் விட்டு விட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரேடியோ சிலோனைக் காணவில்லை

இது நடந்து ஒன்றரை ஆண்டிற்குப்பின், அப்போது வானொலியில் ஒலிபரப்பான 'இளைஞர் மன்றம்' நிகழ்ச்சியில் பங்குபற்றும் ஆசை எனக்கும் எனது நண்பன் ஜோக்கிம் பர்னாந்துவுக்கும் ஏற்பட்டது. இருவரும் சேர்ந்து ஒருநாள் ரேடியோ சிலோனுக்குப் புறப்பட்டோம். 'இளைஞர் மன்றம்' நிகழ்ச்சி மாலை 5.30 இல் இருந்து 6.00 மணிவரை ஒலிபரப்பப்படுவதை வானொலியில் கேட்டதால் சுமார் 4 மணிக்குக் கொட்டாஞ்சேனையிலிருந்து புறப்பட்டோம்.

வெகுநேரம் 'பஸ் ஸ்டேன்'டில் காத்திருந்தும், நேராக ரேடியோ சிலோனுக்குப் போகும் பஸ் வராததால், பொரல்லையில் இறங்கி அங்கிருந்து நடந்தே போய் விடலாம் என்று நான் கூறினேன்; என் முதல் அனுபவத்தை வைத்து.

இருவரும் பஸ்ஸில் வந்து பொரல்லைச் சந்தியில் இறங்கினோம். நான் வழிகாட்ட இருவரும் நடந்தோம்.

நடந்தோம் நடந்தோம் நடந்து கொண்டே இருந்தோம். ரேடியோ சிலோனைக் காணவில்லை.

எனக்கு இலேசாகச் சந்தேகம் தட்டியது. ''அன்று இவ்வளவு தூரம் நடக்கவில்லையே?'' என்று நண்பனிடம் கூறினேன். ஆனாலும் நடந்தோம்.

நடக்க நடக்க, சனநடமாட்டமற்ற வீதிவழியாக நடந்து கொண்டிருப்பது தெரிந்தது. கடைசியாக எதிரே வந்த ஒரு வயோதிகரிடம் 'ரேடியோ சிலோன் எங்கே இருக்கிறது?' என்று கேட்டோம்.

வயோதிகர் எங்களை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இது நாரஹென்பிட்டி. 'ரேடியோ சிலோன்' இங்கு எங்கிருக்கிறது. அதைக் கடந்து வெகு தூரம் வந்து விட்டீர்களே!'' என்று கூறினார்.

திரும்பி நடந்து மீண்டும் பொரல்லைச் சந்திக்கு வந்தோம். மணி ஆறைத் தாண்டிவிட்டிருந்தது. மிகுந்த வேதனையோடு பஸ் ஏறி கொட்டஞ்சேனைக்கு வந்து சேர்ந்தோம்.

மீண்டும் சுமார் ஒரு வருடம் கழிந்தது.

## ரேடியோ சிலோன் போய்ச் சேர்ந்தேன்

அந்த நாட்களில் எங்கள் வீட்டில் ரேடியோ கிடையாது. பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் இருக்கும் வீட்டில் ரேடியோ இருக்கக் கூடாதென்பது என் தந்தையாரின் அசைக்க முடியாத நம்பிக்கை. அதன்படி நான் வானொலி நிகழ்ச்சிகளை, சைவக்கடை, லோன்றி, சலூன் போன்ற இடங்களின் வாசலில் நின்று கேட்டுவந்தேன்.

அப்போது என் வகுப்பிலே கிறிஸ்டி தியாகராஜா என்றொரு நண்பன் படித்து வந்தான். கொட்டாஞ் சேனையில், என் வீட்டுக்குச் சுமார் 300 யார் தொலைவில் அவனது வீடு இருந்தது. சில வேளைகளில் அவனது வீட்டிற்குச் சென்றும் நான் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பதுண்டு.

ஒரு நாள் கிறிஸ்டி வீட்டிற்கு வந்தான். 'இளைஞர் மன்றத்தில்' நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி ஒன்றிற்குத் தானும் ஒரு கட்டுரை எழுதியனுப்பியதாகவும், அது ஏற்றுக் கொள்ளப்பட்டு, தன்னையே நிலையத்திற்கு வந்து அந்தக் கட்டுரையை வாசிக்கும்படி ரேடியோ சிலோனிலிருந்து அழைப்பு வந்திருப்பதாகவும் கூறிவிட்டு, ''நிலையத்திற்கு வர இரண்டு அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி இருக் கிறார்கள். நீரும் வாரீரா?'' என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
517684

எனக்குப் பெரிய 'திறிள்' உடனே சம்மதத்தைத் தெரிவித்து விட்டேன். என்றாலும், முதல் அனுபவத்தைக் கொண்டு, உள்ளூர ஒரு பயமும் இருந்தது. ஏதாவது கேள்விகள் கேட்டுவிட்டால் என்ன செய்வது? எனவே முன் கூட்டியே நண்பனிடம் அதுபற்றிக் கூறி, ''நான் வேண்டு மானால் உம்மோடு துணைக்கு வருகிறேன். ஆனால் நான் எதிலும் பங்குபற்ற மாட்டேன். வீணாக ஏதும் வம்பில் மாட்டி வைத்துவிடக்கூடாது,'' என்றேன்.

மாலை 5½ மணிக்கு ஒலிபரப்பாகும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக, பகல் 1½ மணிக்கே நிலையத்திற்கு வருமாறு பிரவேசப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நாங்கள் இருவரும் 12½ மணிக்கே நிலையத்திற்குச் சென்றுவிட்டோம். அது ஒரு சனிக்கிழமை என்று நினைக் கிறேன். பள்ளிக்கூட நாளாக இருந்தால் வீட்டில் அனுமதி கிடைத்திருக்காது.

## அன்னையும் தந்தையும் தானே

இந்த இடத்தில் என் தந்தையாரைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறிவைப்பது பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது.

இந்தியாவில், காரைக்காலில் பிறந்து, சிங்கப்பூரில் படித்து, இலங்கைக்கு வந்து என் எதிர்காலத் தாயாரை மணந்து எனக்குத் தந்தையானவர்.

தென்னிந்தியாவில் பிறந்த என் தந்தைக்கு தமிழ் எழுத, வாசிக்க-ஏன் சரியாகப் பேசக்கூடத் தெரியாது என்றால் யாரும் நம்பமாட்டார்கள்.

ஆனால் ஆங்கிலம், லத்தீன், பிரெஞ்ச் போன்ற பாஷைகளில் மகா சூரர், என் அம்மாவுக்கோ தமிழைத் தவிர வேறு பாஷைகள் தெரியாது. இலங்கையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் கொழும்பில் பிறந்து வளர்ந்ததால் சரளமாகச் சிங்களம் பேசவரும்.

என் அப்பாவுக்குத் தமிழ் பாஷையின் மேலும், கலைகளின் மேலும் ஒரு வெறுப்பு. அது எப்படி ஏற்பட்டதோ எனக்குத் தெரியாது.

வீட்டிலே அப்பா இருக்கும் சமயங்களில் தமிழில் வாசிப்பதற்கு எனக்குத் தடை. அது பள்ளிப்பாடமாக இருந்தாலும் படிக்க முடியாது. ஆனால் அம்மா, நிறைய தமிழ்க் கதைப்புத்தகங்கள் வாசிப்பார். கல்கியின் தியாக பூமி, அலை ஓசை, சிவகாமியின் சபதம் மற்றும் கருங்குயில் குன்றத்தின் கொலை, மாண்டிகிறிஸ்ரோ, மின்சார மாயவன் என்று எத்தனையோ நாவல்கள். அந்த நாட்களில் பல நடமாடும் வாசகசாலைகள் இருந்தன. தலையிலே புத்தகக் கட்டோடு ஒருவர் வருவார். எல்லாம் தமிழ்க் கதைப்புத்தகங்கள். ஒரு வாரத்திற்கு ஒரு முறை வருவார். இரண்டு நாவல்கள் எடுத்துக் கொள்ளலாம். அடுத்த வாரம் அவர் வரும்போது இரண்டையும் திருப்பிக் கொடுத்துவிட்டு, இன்னும் இரண்டு புத்தகங்கள் எடுத்துக் கொள்ளலாம். மாத முடிவில் இரண்டு ரூபாய் கொடுக்கவேண்டும்.

ஒரு வாரத்தில் இரண்டு நாவல்களையும் வாசித்து விட்டு புத்தகக்காரர் வர ஓரிரு நாட்கள் பிந்திவிட்டால், வாசிப்பதற்கு ஒன்றுமில்லையே என்று அம்மா அங்கலாய்ப்பது எனக்குத் தெரியும். இது தவிர வாரா வாரம் 'கல்கி'யும் வாங்குவார்.

ஆனால் எனக்குத்தான் தமிழில் ஏதும் படிப்பதற்குத் தடை. அந்த நாட்களிலிருந்தே சித்திரம் வரைவதிலும் எனக்கு ஆர்வம் அதிகம். ஆனால் அதற்கும் அப்பா தடைவிதித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, அப்பா வீட்டிலில்லாத நேரங்களில் 'கல்கி' யின் அட்டையில், 'மணியத்தின்' சித்திரங்களைப் பார்த்து வரைந்து வர்ணம் தீட்டி அம்மாவிடம் காட்டுவேன். என் சித்திரங்களின் ஒரே 'ரசிகை' என் அம்மாதான். வரைவதற்கு நிறைய உற்சாகம் தருவார். ஆனால் எல்லாமே அப்பா இல்லாத வேளைகளில்தான்.

இந்தச் சூழ்நிலையில், ரேடியோவில் தமிழ் நிகழ்ச்சியில் பங்குபற்றப் போகிறேன் என்பதை அப்பா அறிந்தால் வேறு வினையே வேண்டாம்.

எனவே அம்மாவிடம் மட்டும் இரகசியமாக உத்தரவும் பணமும் வாங்கிக்கொண்டு என் நண்பனுடன் ரேடியோ சிலோனுக்கு வந்து சேர்ந்தேன்.

## உலகத்தின் உச்சியில் நின்றேன்

எம்மைப் போல வேறு சில மாணவர்களும், இலங்கை வானொலி இளைப்பாற்றறையில் காத்திருந்தார்கள். வழக்கமாக வருபவர்களாம். அவர்களுடன் கதைத்ததில் 'வானொலி அண்ணா' 1½ மணிக்கு வருவார் என்று தெரிந்தது.

சரியாக 1½ மணிக்கு வானொலி அண்ணா வந்தார். அவரைப் பார்த்ததும் எனக்குத் 'திக்' என்றது. முதன் முறை நான் ரேடியோ சிலோனுக்குப் போனபோது, பாரிய சரீரமும், கம்பீர சாரீரமுமாக ஒருவர் இருந்தாரே, அவரே தான்.

''கட்டுரைப் போட்டியில், கட்டுரைகள் வாசிப்பதற்காக வந்திருக்கும் தம்பிமார் யார்?'' என்று வானொலி அண்ணா கேட்டார். என் நண்பன் கிறிஸ்டியுடன் இன்னும் இரண்டொருவர் வந்திருந்தார்கள். அவர்கள் அனுப்பி வைத்திருந்த கட்டுரைகள் அண்ணாவிடமே இருந்தபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால், அவற்றில் சில திருத்தங்களைச் செய்து அவர்களிடம் கொடுத்து வாசிக்கச் செய்தார். பின் என்னைப் பார்த்து, ''நீரும் கட்டுரை வாசிப்பதற்காகவா வந்திருக்கிறீர்?'' என்று கேட்டார். நான் உடனேயே இல்லையென்று தலையாட்டி விட்டேன்.

அன்றைய நிகழ்ச்சி ஒலிபரப்பாகி முடிந்தது.

நிகழ்ச்சி முடிந்ததும் எல்லோரையும் அண்ணா 'கென்டீ' னுக்கு அழைத்துச் சென்றார். விதம் விதமான தின்பண்டங்கள். எதுவேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துச் சாப்பிடச் சொன்னார்.

அப்போது தான் தெரிந்தது, சில தம்பிமார் இதற்காகவே நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகிறார்கள் என்று.

''நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும் தம்பிமார், தொடர்ந்து வரலாம். அனுமதிச்சீட்டுத் தேவையில்லை,'' என்று அண்ணா ஓர் அறிவித்தல் கொடுத்தார்.

வீட்டுக்குப் போகும்போதே, அடுத்த வாரமும் வருவதாக நானும் எனது நண்பனும் முடிவு செய்து கொண்டோம்.

அடுத்த வாரம் நிகழ்ச்சிக்கு வந்தபோது, அண்ணாவின் கண்களில் படாமல் அஞ்ஞாதவாசம் செய்து நான் தப்பித்துக்கொண்டேன்.

மூன்றாவது வாரம் முடியவில்லை. அண்ணா என்னைக் கூப்பிட்டார். அவர் அருகில் சென்றேன்.

''ஒவ்வொரு வாரமும் நிகழ்ச்சிக்கு வாரீர், ஒன்றிலுமே கலந்து கொள்கிறீர் இல்லை, ஏன்?'' என்றார்.

நான் அசடு வழிய நின்றேன். இதயம் வேறு 'படக் படக்' என்று அடித்துக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பெயர், நான் படிக்கும் கல்லூரி போன்ற விபரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டபின், ஒரு 'போஸ்ட் கார்டை'த் தந்து வாசிக்கச் சொன்னார். நான் வாசித்தேன். ஆனால் என் தமிழ் உச்சரிப்பிலே சில பிழைகள் இருந்தன. கொழும்பிலே பிறந்து வளர்ந்த படியாலோ என்னவோ, தமிழில் நன்றாக எழுதவும் வாசிக்கவும் தேர்ச்சி இருந்தபோதிலும், உச்சரிப்பிலே சில பிழைகள் இருந்தன. அவற்றையெல்லாம் அண்ணா திருத்தினார்.

எப்படியோ 'போஸ்ட் கார்ட்' இல் இருந்தவற்றை ஒலிவாங்கியின் முன் வாசித்துவிட்டேன். வாசித்து முடித்ததும், நாமும் வானொலியில் பேசிவிட்டோம், எத்தனை ஆயிரம்பேர் என் குரலைக் கேட்டிருப்பார்கள் என்ற எண்ணம் வரவே, மனம் துள்ளிக் குதித்தது. அது மட்டுமா? வாசிப்பவர் இன்னார் என்று என் பெயரைக்கூட அண்ணா சொல்லிவிட்டாரே. என் பெயர் உலகெங்கும் பிரபலமாகிவிட்டதைப் போன்றதொரு பிரமை. உலகத்தின் உச்சியில் நிற்பதைப்போன்றதோர் இன்பம். அதை வார்த்தைகளால் எப்படிச் சொல்வேன்!

## பிரசுரமான என் முதற் கவிதை

அந்த நாட்களில், கவிதை எழுதுவதில் எனக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. இந்த ஆர்வத்தை நெய்யூற்றி வளர்த்தவர் என் நண்பர் மகேசன்தான்.

என் வகுப்பில், என்னுடன் படித்த நண்பர்களைப் பற்றித்தான் முதலில் கவிதைகள் எழுதத் தொடங்கினேன். தன்னைப்பற்றி நான் எழுதிய கவிதையை வாசித்துவிட்டு என் வகுப்பு நண்பன் ஒருவன் என்னுடன் சண்டைக்கே வந்துவிட்டான். ஆனால் என் கவிதைகளை முதலில் ரசிக்கத் தொடங்கிய நண்பர் மகேசன். நான் எழுதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளை என் வகுப்புத் தோழர்களிடம் காட்டி மகிழ்ந்ததும், அதைக் கிழித்தெறிந்து விடுவேன். என் கவிதைகளை, நண்பர் வாசித்தபின் கிழித்தெறிவதற்குப் பதிலாகத் தன்னிடம் தரும்படி மகேசன் கேட்டார். அதன்படியே நான் எழுதும் கவிதைகளையெல்லாம் அவரிடமே கொடுத்து விடுவேன். இப்படியே, நண்பர்களைப் பற்றி ஆரம்பித்த கவிதைகள், பின்னர் நண்பர்களைக் கடந்து பல தரப்பட்ட விடயங்களையும் உள்ளடக்கத் தொடங்கின. எல்லாமே கடைசியில் நண்பர் மகேசனிடம் சரணடைந்தன.

அந்த வருடத்திற்கான college magazine வெளிவந்து விட்டதாகவும், வாங்க விரும்பும் மாணவர்கள் மூன்று ரூபாய் கொடுத்து வாங்கிக் கொள்ளலாம் என்றும் எங்கள் வகுப்பாசிரியர் ஒரு நாள் அறிவித்தார். அதை மூன்று ரூபாய் கொடுத்து வாங்க எனக்கு மனம் வரவில்லை. அதுவும், நம்மைப்பற்றி ஏதாவது வந்திருந்தால் வாங்கலாம். இல்லாவிட்டால் வாங்கி என்ன பிரயோசனம்?

மறுநாள் என் வகுப்பு மாணவர்கள் சிலர் magazine வாங்கி விட்டார்கள். ஒருவன் magazine உடன் என்னிடம் ஓடிவந்தான். ''உன் கவிதையும் கொலேஜ் மெகஸினில் வந்திருக்கிறது,'' என்றான். என்னால் நம்பமுடியவில்லை. வாங்கிப் பார்த்தேன். என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை. நான் எழுதிய கவிதைகளில் ஒன்று, என் பெயர், வகுப்பு இவற்றுடன் பிரசுரமாகி இருந்தது. நான் எழுதிய கவிதை 'கொலேஜ் மெகஸி'னில் எப்படிப் பிரசுரிக்கப்பட்டது என்பது எனக்குப் புரியவில்லை.

மகேசனிடம் இதுபற்றி நான் பிரஸ்தாபித்தபொழுது, என் கவிதையைத் தானே ஆசிரியரிடம் கொடுத்ததாகக் கூறினார்.

யாப்பருங்கலக் காரிகையோ நன்நூலோ படிப்பதற்கு முன், கவிதை இலக்கணம் என்றால் என்ன என்று தெரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுமுன், அப்படி ஓர் இலக்கணம் இருக்கிறது என்பதே தெரியாத வேளையில், நான் எழுதிய அந்தக் கவிதை இன்றும் என் மனத்தில் நீங்காது நிலைத்திருக்கிறது.

## நீங்களும் படித்துத்தான் பாருங்களேன்

### பதிபக்தி

தாரகையே தாரகையே
தன்னொளி பரப்பும் தாரகையே
தங்கத் தட்டாம் அம்புலியின்
தாரமாகிய தாரகையே - நீ
மின்னி மின்னி மறைவதேனோ
இன்முகம் காட்டிச் சிரிப்பதேனோ
காலைப்பொழுது நெருங்கிவிட்டால்
கடுகிச் சென்று மறைவதேனோ - உன்
காதலனில்லா வானத்திலே
கணமும் தங்கிட மாட்டாயோ
அடடா என்ன பதிபக்தி
மானிடர்க் கில்லா நற்பக்தி.

UNIVERSITY OF PERADENIYA LIBRARY 22-11-2000

## மணி பாகவதர் பாராட்டினார்

இப்படியாக எனது முதற்கவிதை கல்லூரி மலரில் பிரசுரமானத்திலிருந்து நான் பல கவிதைகளை எழுதித் தள்ளினேன். அவையெல்லாம் இப்போது ஞாபகத்தில் இல்லை.

இதை ஏன் இங்கு குறிப்பிட்டேனென்றால், 'இளைஞர் மன்றம்' நிகழ்ச்சிகளில் நான் பங்குபற்றத் தொடங்கியதிலிருந்து, பல கவிதைகளை எழுதி அண்ணாவிடம் கொடுத்து 'இளைஞர் மன்றத்'தில் ஒலிபரப்பி வந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதெல்லாம் நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப் படுவதில்லை. எல்லா நிகழ்ச்சிகளுமே நேரடியாகவே ஒலிபரப்பப்பட்டு வந்தன. எனவே, நாம் பங்குபற்றும் நிகழ்ச்சிகளை நாம் என்றுமே கேட்டதில்லை. ஆனால் இதற்கு விதிவிலக்காக ஒரு நிகழ்ச்சி ஒலிப்பதிவு செய்யப்பட்டது,

தீபாவளிக்கு ஒரு மாதத்திற்கு முன்பே, அண்ணா ஓர் அறிவித்தல் கொடுத்தார். தீபாவளிக்குக் கதை, கட்டுரை, கவிதைகள் எழுத விரும்புவோர், இரண்டு வாரங்களுக்கு முன்னதாக அவற்றை எழுதி அனுப்பிவிட வேண்டும் என்றார். ஏனென்றால் தீபாவளி விடுமுறைக்காக அவர் யாழ்ப்பாணம் செல்ல இருந்ததால், தீபாவளிக்கான நிகழ்ச்சியை ஒலிப்பதிவு செய்து வைத்துவிட்டுப் போக இருந்தார்.

நான் மறுவாரமே தீபாவளிக் கவிதை ஒன்றை எழுதி அண்ணாவிடம் கொண்டுவந்து கொடுத்தேன்.

தீபாவளி விசேஷ 'இளைஞர் மன்ற' நிகழ்ச்சி ஒலிப்பதிவு ஒரு சனிக்கிழமை காலையில் நடைபெற்றது. காலையில் பத்து மணிக்கெல்லாம் கலையகத்திற்கு வந்து விடும்படி முதல் வாரம் அண்ணா எங்கள் எல்லோருக்கும் சொல்லி அனுப்பினார்.

அப்பா வெளியே செல்லும்வரை காத்திருந்து, அம்மா விடம் பணம் வாங்கிக்கொண்டு புறப்படுவதற்குள் நேரமாகிவிட்டது. கிறிஸ்டியும் நானும் 10½ மணிக்குத்தான் இலங்கை வானொலிக்கு வந்து சேர்ந்தோம்.

அவசர அவசரமாக முதலாம் இலக்கக் கலையகத்துள் புகுந்ததும் பிரமித்துப் போனோம். என்றுமில்லாதவாறு அவ்வளவு கூட்டம்.

கலையகத்தின் நடுவே விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தில், வாத்தியக் கருவிகளுடன், அமர்ந்திருக்கும் இசைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்கள் மத்தியில் வாத்தியக் கோஷ்டித் தலைவர் மணிபாகவதர் அவர்களும் திருமதி கமலா ஹரிஹரஐயர் அவர்களும் அமர்ந்து, ஒரு பாடலை இசையுடன் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'இளைஞர் மன்ற' நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்திருந்த இளைஞர்கள் மூலைக்கொருவராக நின்று, தமது கைகளில் இருந்த நிகழ்ச்சிக்கான பிரதிகளையும், கடிதங்களையும் வாசித்து வாசித்து ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அண்ணாவைக் காணவில்லை. ஏதோ அவசரவேலையாகக் கலையகத்தைவிட்டு வெளியே சென்றிருக்க வேண்டும்.

உள்ளே புகுந்ததும் ஏற்பட்ட திகைப்பு சற்றேமாற பாடகர்கள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்த பாடல் தெளிவாகக் கேட்டது. திடீரென்று, அந்தப் பாடலை முன்பு எங்கோ கேட்டது போல் எனக்குத் தோன்றியது. எங்கென்றுதான் புரியவில்லை.

பாடலை உன்னிப்பாகக் கேட்டேன். என் காதுகளையே என்னால் நம்ப முடியவில்லை. நான் அண்ணாவிடம் எழுதிக் கொடுத்த பாடல்! என் இதயமே ஒரு கணம் நின்றுவிடும் போலிருந்தது. இதற்குள் அண்ணா கலையகத்திற்குள் வந்துவிட்டார். வந்தவர் என்னைக் கண்டு என்னிடம் வந்து, என்னை அழைத்துக்கொண்டு மணி பாகவதர் அவர்களிடம் சென்றார்.

''இவர்தான் இந்தப் பாடலை எழுதியவர்,'' என்றார்.

''அப்பிடியா? நல்லா எழுதி இருக்கிறீங்க தம்பி,'' என்றார் பாகவதர். நான் ஆகாயத்தில் மிதந்து கொண்டிருந்தேன்.

## கவிதை இலக்கணம்

இந்தக் காலகட்டத்தில் தான், கவிதைக்கு இலக்கணம் உண்டு என்பதை நான் தெரிந்து கொண்டேன். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இலக்கணத்தை எப்படிக் கற்பது? எந்தப் புத்தகத்தில் அது இருக்கிறதென்றெல்லாம் தெரியவில்லை. என் நண்பர்கள் பலரிடம் கேட்டுப் பார்த்தேன். ஒருவருக்குமே தெரியாது. அண்ணாவிடம் மட்டும் கேட்கவில்லை. 'கவிதை இலக்கணம் தெரியாமலா இவன் இவ்வளவு கவிதைகளை எழுதுகிறான்', என்று அவர் நினைத்து விடக் கூடாதே என்பதற்காகவே அவரிடம் கேட்கவில்லை.

அதிருஷ்ட வசமாக அப்போது எனக்கொரு இந்திய பேனா நண்பன் இருந்தான். அவனிடம், கவிதை எழுதுவதற்கான இலக்கணத்தை எப்படிக் கற்றுக் கொள்வது? அதற்கான புத்தகங்கள் ஏதாவதுண்டா, என்று கேட்டு எழுதினேன். யாப்பருங்கலக்காரிகை என்றொரு புத்தகத்தை அவன் அனுப்பி வைத்தான்.

புத்தகம் கிடைத்தாலும், அதை வாசித்துப் புரிந்து கொள்ள முடியவில்லை. 'சீர்' என்றும் 'அசை'யென்றும், 'நேர் அசை' 'நிரை அசை'யென்றும் 'கூவிளம்', கருவிளம்' என்றும் ஏதேதோ எழுதப்பட்டிருந்தது. ஒன்றுமே விளங்கவில்லை. என்றாலும், நானும் விடுவதாக இல்லை. பாரதியார் கவிதைகளை வைத்துக் கொண்டு, காரிகையில் கூறப்பட்டவற்றை அவற்றுடன் ஒப்பிட்டு, ஒருபடியாக கடைசியில் புரிந்து கொண்டேன். அதுமட்டுமல்ல, காரிகையில் ஆரம்பத்திலேயே எழுதப்பட்டிருந்த, 'காரிகை கற்றுக் கவிபாடுவதிலும், பேரிகை கொட்டிப் பெருவாழ்வு வாழலாமே', என்ற அடி என்னை மிகவும் கவர்ந்தது. இலக்கியத்திற்குத் தான் இலக்கணமே தவிர, இலக்கணத்தைக் கற்பதால் மட்டும் இலக்கியம் படைத்து விட முடியாதென்பதைப் புரிந்து கொண்டேன். ஓசை நயத்தோடு கவிதைகளை எழுதினால் இலக்கணம் தானாகவே அமைந்துவிடும் என்பதைப் புரிந்து கொண்டேன். ஆனாலும் யாப்பருங்கலக் காரிகையை முற்றாகப் படித்துப் புரிந்து கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அறிவோடு பல கவிதைகளை எழுதினேன். ஒரு முறை, பெண்மையைப் பற்றி ஒரு கவிதை எழுதி இளைஞர் மன்ற அண்ணாவிடம் கொடுத்தேன். அதைக் கொண்டு போய்ப் படித்துவிட்டு அடுத்தவாரம் ஒலிபரப்புவதாகக் கூறி அண்ணா அதை எடுத்துச் சென்றார்.

அடுத்த வாரம், கவிதையை வாசிக்கப் போகிறோம் என்ற ஆவலுடன் வந்த என்னிடம், என் கவிதையைக் கையில் வைத்துக்கொண்டு அண்ணா பல கேள்விகளைக் கேட்டார். அவர் கேட்ட தோரணை கூட எனக்கு என்னவோபோல் இருந்தது. ''யோகியாரின் கவிதைகள் ஏதும் படித்ததுண்டா,'' என்று கேட்டார். நான் ''இல்லை,'' என்றேன். கவிதையை அடுத்தவாரம் ஒலிபரப்புவதாகக் கூறி மீண்டும் எடுத்துச் சென்றுவிட்டார். எனக்கு எதுவுமே புரியவில்லை.

பொது நூலகத்திற்குப்போய் யோகியாரின் கவிதைத் தொகுதியை தேடிப் பிடித்தேன். ஒவ்வொரு கவிதையாகப் படித்துப் பார்த்தேன். என்ன ஆச்சரியம், நான் எழுதி அண்ணாவிடம் கொடுத்த கவிதையின் சாயலில் யோகியாரின் ஒரு கவிதை இருந்தது.

என் முதுகை நானே தட்டிக்கொடுக்கவேண்டும் போல் இருந்தது. யோகியாரைப் போல் என்னால் கவிதை எழுத முடிகிறதே!

இப்போதுதான், அண்ணா கேட்ட கேள்விகளுக்கும், அவரது சந்தேகப் பார்வைக்கும் எனக்கு அர்த்தம் புரிந்தது.

பல வருடங்களுக்குப் பின்னர், கலாநிதி கா. சிவத்தம்பி அவர்கள் இந்தக் கவிதை பற்றி என்னிடம் குறிப்பிடும் போது, 'யோகியாரின் அந்தக் கவிதை தன் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்ட கவிதையென்றும், என் கவிதையை வாசித்தவுடன், கட்டாயமாக நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைத்தான் களவாடி எழுதி இருக்கிறேன். என்று நினைத்தாகவும், பின் இரண்டு கவிதைகளையும் ஒப்பிட்டுப் பார்த்த பின்னர்கூட தன் சந்தேகம் தீரவில்லை என்றும்' சொன்னார். எனக்குப் பெருமையாகவே இருந்தது.

## நாளை உலகம் அழிந்துவிட்டால்!

இளைஞர் மன்றத்தில் அண்ணா புதிதாக ஒரு கவிதைப்போட்டி நிகழ்ச்சியை ஆரம்பித்தார். அதாவது, கவிக்கான முதல் அடியைக் கொடுத்து, அதை வைத்துக் கவிதைகளை எழுதியனுப்பச் சொன்னார். அவர் முதல் போட்டிக்காகக் கொடுத்த முதலடி 'நாளை உலகம் அழிந்துவிட்டால்,' என்பதாகும்.

'நாளை உலகம் அழிந்துவிட்டால்,' என்ற அடியை முதலாகக் கொண்டு நானும் கவிதை எழுதத் தொடங்கினேன். எழுத எழுத, கவிதை நீண்டுகொண்டே போயிற்று. தொடராக நூறு கவிதைகளுக்குமேல் எழுதி விட்டேன். அடுத்த வாரம் அண்ணாவிடம் கொண்டுபோய்க் காட்டினேன். "இந்தக் கவிதை முழுவதையும் ஒலிபரப்புவதானால், ஒரு நிகழ்ச்சி முழுவதும் இந்தக் கவிதை ஒன்றையே ஒலிபரப்பவேண்டும். அது கூட சில வேளைகளில் போதாமற்போய்விடும்," என்றார். பின்னர் இந்த நீண்ட கவிதையை என் நண்பர்கள் பலர் வாசிக்க எடுத்துச் சென்றார்கள். இறுதியில் அது காணாமற் போய்விட்டது.

சுமார் இருபது வருடங்களுக்குப்பின், என் நண்பர் ஒருவரை மட்டக்களப்பில் சந்தித்தேன். இருபது வருடங்களுக்குப்பின் சந்தித்தால் கேட்கவும் வேண்டுமா? மட்டக்களப்பு, அமிர்தகழியில் 'போஸ்ட் மாஸ்ட'ராய் இருக்கும் அவர், தன் வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றார். அவர் பெயர் முத்தமிழ்தாசன் என்று எனக்கு அறிமுகமான கந்தபோடி நல்லையா அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உம்முடைய பொருள் ஒன்று என்னிடம் இருக்கிறது. இருபது வருடங்களாக அதைக் காப்பாற்றி வருகிறேன்,'' என்றார்.

''என்ன அது,'' என்றேன் ஆவலாக.

''நீரே சொல்லும் பார்ப்போம்,'' என்றார்.

நான் எவ்வளவோ சிந்தித்துப் பார்த்தும் முடியவில்லை.

நண்பர் உள்ளே சென்று எடுத்து வந்தார்.

'நாளை உலகம் அழிந்துவிட்டால்,' என்ற எனது நீண்ட கவிதை.

ஆச்சரியமும் சந்தோஷமும் என் தொண்டையை அடைத்தன.

கவிதையை என்னிடம் தரும்படி கேட்டேன்.

''இருபது வருடங்களாக இந்தக் கவிதையை மிகுந்த கவனமாகக் காப்பாற்றி வந்திருக்கிறேன். இதைவிட்டுப் பிரிய மனமில்லை. உமது ஞாபகார்த்தமாக இது என்னிடமே இருக்கட்டும்,'' என்றார்.

அப்போது, அதாவது சுமார் 15 வருடங்களுக்கு முன் 1978, 1979 ஆம் ஆண்டுகளில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஊழியர்களின் ஆக்கங்களுக்கான ஒரு சஞ்சிகை 'குரல்' என்ற பெயரில் தமிழில் வெளியிடப்பட்டு வந்தது. ''அதிலே பிரசுரித்துவிட்டு, மீண்டும் உம்மிடமே கவிதையைத் திருப்பித் தந்துவிடுகிறேன்'', என்றேன்.

கொடுக்க மனமில்லாமல் நண்பர் கவிதையைக் கொடுத்தார்.

இரண்டு மூன்று வாரங்கள் 'குரல்' இதழில் எனது கவிதை தொடர்ந்து பிரசுரமாகி வந்தது. பின் திடீரென 'குரல்' ஆசிரியர் மாற்றப்பட்டு வேறொருவர் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். அவர் பதவியேற்றதிலிருந்து என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை தொடர்ந்து பிரசுரமாவது நின்று விட்டது. ஏனென்று புதிய ஆசிரியரிடம் கேட்டேன். என் கவிதையின் கையெழுத்துப் பிரதியைக் காணவில்லை என்றார். பழைய ஆசிரியரிடம் கேட்டுப் பார்த்தேன். 'அங்கே தான் இருக்கிறது' என்றார். கடைசியில் என் கையெழுத்துப் பிரதியைக் காணவே இல்லை.

இருபது வருடங்களாக என் கவிதைப் பிரதியைக் காப்பாற்றி, என்னிடம் அதைத் தர மனமின்றித் தந்த நண்பரை நினைத்துப் பார்த்தேன். 'பிரசுரத்திற்குப் பின் திருப்பிக் கவிதைப் பிரதியை உம்மிடமே தந்துவிடுகிறேன்,' என்று நான் அளித்த வாக்குறுதியையும் நினைத்துப் பார்த்தேன். பெருமூச்சு விடுவதைத் தவிர வேறெதுவும் செய்யமுடியும் என்று எனக்குத் தோன்றவில்லை!

## நான் எழுதிய முதற் சிறுகதை

மீண்டும் 'இளைஞர் மன்றம்' காலத்திற்கு மனம் இழுபடுகிறது.

அண்ணா ஒரு நாள், சிறுகதை பற்றி இளைஞர் மன்றத்தில் உரையாற்றினார். அதில் 'புதுமைப் பித்தனை'ப்பற்றி வெகுவாகச் சிலாகித்துப் பேசினார்.

மறுநாளே பொது நூலகத்திற்குச் சென்று புதுமைப் பித்தனின் 'புதிய ஒளி' என்ற சிறுகதைத் தொகுதியைத் தேடிப்பிடித்து வாசித்தேன். காலையிலிருந்து மாலை ஆறு மணிவரை, பொது நூலகத்திலிருந்தே புத்தகத்தை வாசித்து முடித்தேன். அன்று காசு ஒரு சதம்கூட என்னிடம் இருக்க வில்லை. பகல் சாப்பாட்டிற்கு, பொது நூலகக் குழாயில் கொஞ்சம் 'நீராகாரத்தை' அருந்திவிட்டு, மாலை ஆறு மணிக்கு பொதுநூலகத்தைவிட்டு வெளியே வந்தபோது, உலகத்தையே வெற்றி கொண்டு விட்டதொரு உற்சாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது. புதுமைப்பித்தனின் சிறுகதைகள் ஏற்படுத்திய உத்வேகமோ, அல்லது காலைமுதல் எதுவுமே சாப்பிடாத தால் நரம்புகளில் ஏற்பட்ட தளர்ச்சியோ தெரியவில்லை. வேறு ஓர் உலகத்தில் மிதந்து கொண்டிருப்பது போன்றதோர் உணர்வு. வீடு நோக்கி நடக்கத் தொடங்கி னேன். கொழும்பு-7 இல் இருந்து கொழும்பு-13 வரை நடக்கவேண்டும். சுமார் 10, 15 மைல் இருக்கும். காலை யிலும் பசியுடன் பொதுநூலகத்திற்கு நடந்து தான் வந்தேன்.

வீடுபோய்ச் சேருவதற்கு முன் என் மனத்தில் ஒரு சிறுகதை உருவாகி விட்டது. வீடு சென்றதும் முதல் வேலை யாக அதை எழுதி முடித்தேன். கதையின் பெயர் 'பத்துச் சதம்.' நான் எழுதிய முதல் சிறுகதை.

## 'பத்துச் சதம்' - ஒலி இலக்கியமாயிற்று.

கதையை எழுதி முடித்தது முதல், கதையைக் கொண்டு போய் எப்போது அண்ணாவிடம் காட்டுவோம், கதை நன்றாக இருக்கிறது என்பதை எப்போது கேட்போம் என்று மனம் அடித்துக் கொண்டது, உண்மையாகவே, அந்த நாட்களில், சிவத்தம்பி அவர்கள் வாசிப்பதற்காகவே, வாசித்து நன்றாக இருக்கிறது என்று சொல்வதற்காகவே நான் எழுதி வந்தேன் என்றுதான் கூறவேண்டும்.

அடுத்தவாரம் கதையைக் கொண்டுபோய் அண்ணா விடம் கொடுத்துவிட்டு, என்ன சொல்வாரோ என்று காத்திருந்தேன்.

கதையை என்னையே வாசிக்கச் சொல்லி அன்றே கதையை இளைஞர் மன்றத்தில் ஒலிபரப்பினார் அண்ணா.

இரண்டு வாரங்களுக்குப்பின் 'பத்துச்சதம்' மீண்டும் இளைஞர் மன்றத்தில் ஒலிபரப்பப்படும் என்று நான் கனவில் கூட நினைத்திருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தம்பி அவர்களுக்கு என் கதை நன்றாகப் பிடித் திருக்க வேண்டும். இரண்டு வாரங்களுக்குப் பின் அதே சிறுகதையை - 'ஒலி இலக்கியம்' என்றதொரு புதிய அம்சத்தை இளைஞர் மன்றத்தில் அறிமுகப்படுத்தி - அதில் ஒலிபரப்பினார். இம்முறை ஒலிக்குறியீடுகளையும் (Sound Effects) சேர்த்து ஒலிபரப்பினார்.

'மழை பெய்தது. ஓய்ந்தது. தூற்றல் விடவில்லை.'

இதுவே 'பத்துச் சதம்' என்ற எனது முதற் சிறுகதை யின் ஆரம்பம். புதுமைப் பித்தனின் கதைகளை வாசித்து விட்டு எழுதியதாலோ என்னவோ இந்த நடை.

'மழை பெய்தது' என்று சொன்னதும் மழை பெய்யும் ஒலி கேட்கும். 'ஓய்ந்தது' என்றதும் மழை பெய்யும் ஓசை குறைந்துவிடும். 'தூற்றல் விடவில்லை' என்றதும், இலேசாக மழைத்தூற்றல் சத்தம் கேட்கும். இப்படியே வார்த்தைக்கு வார்த்தை ஒலிக்குறியீடுகளை உபயோகித்து, இந்தச் சிறுகதையை, உண்மையாகவே, ஒலி இலக்கியமாகத் தயாரித்தார் சிவத்தம்பி அவர்கள். இது மட்டுமல்லாமல் நேரடியாக ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சியை ஒலிப்பதிவு செய்து, அதை இசைத்தட்டில் கூடப் பதிய வைத்துவிட்டார். இந்த இளைஞர் மன்ற நிகழ்ச்சி முழுவதும் இசைத்தட்டில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது, நீண்ட நாட்களுக்குப் பின்னரே எனக்குத் தெரிய வந்தது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு தயாரிப்பாளர் இதை மறு ஒலிபரப்புச் செய்தபோதுதான் எனக்கு இது தெரிய வந்தது. நான் பகுதிநேர அறிவிப்பாளனாக இலங்கை வானொலியில் சேர்ந்தபின், தமிழ்ச்சேவை இசைத்தட்டுக் களஞ்சியத்திலிருந்த இந்த நிகழ்ச்சித் தட்டைக் கேட்டுப் பார்த்திருக்கிறேன். இன்றுவரை இந்த நிகழ்ச்சித்தட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் இசைத்தட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களஞ்சியத்தில் பாதுகாக்கப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமே.

'பத்துச் சதம்' என்ற எனது முதல் சிறுகதை, பின்னர், 'திரைக்கலை' என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

## சிறுகதை இலக்கணம்

இளைஞர் மன்றத்தில் எனது முதல் சிறுகதை ஒலிபரப்பானதிலிருந்து, சிறுகதைகள் எழுதவேண்டும் என்ற ஆர்வம் என்னைப் பிடித்தாட்டியது. கவிதைகளின் மேல் இருந்த பற்றுதல் குறைந்து, நாட்டம் சிறுகதையின்மேல் தாவியது.

எனக்கு ஈடுபாடு ஏற்படும் துறைகளிலெல்லாம் கரை கண்டு விடவேண்டுமென்ற ஆர்வம் ஆரம்ப காலந்தொட்டே எனக்கு இருந்து வந்தது. இதன் காரணமாகச் சிறுகதை பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினேன். புதுமைப்பித்தன் சிறுகதைகளுக்கு பேராசிரியர் ரா. ஸ்ரீ. தேசிகன் அவர்கள் எழுதிய முன்னுரை முதல் Encyclopedia Arittanica வரை என் ஆராய்ச்சி விரிந்தது.

சிறுகதை என்றால் கொஞ்சப் பக்கங்களில் எழுதும் கதை. அதாவது சிறிய கதையே சிறுகதை என்ற தப்பான அபிப்பிராயங்களையெல்லாம் களைந்து, நூறு, இருநூறு பக்கங்களிலும் சிறுகதைகள் எழுதலாம். அளவிலே சிறிய கதைகளெல்லாம் சிறுகதைகள் அல்ல என்பதையெல்லாம் புரிந்து கொண்டேன். இதற்கான இரண்டு உதாரணங்கள் என் மனத்திலே நன்றாகப் பதிந்தன.

ஒன்று, புதுமைப்பித்தன் சிறுகதைகளுக்கு பேராசிரியர் ரா. ஸ்ரீ. தேசிகன் எழுதிய முன்னுரை.

'சிறுகதை என்பது ஒரே ஒரு தந்தியை உடைய வீணையை மீட்டுவது போன்றது. நாவல் என்பது ஆயிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திகளை உடைய ஒரு வீணையை மீட்டுவதுபோன்ற தாகும். சிறுகதையில் ஒரே ஒரு உணர்ச்சியே மேலோங்கி இருத்தல் வேண்டும்', என்ற கருத்து. சிறுகதை என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள எனக்கு உதவியது.

இரண்டாவது, 'ராஜாஜி' அவர்கள் எழுதிய ஒரு கட்டுரை. அதை எங்கு படித்தேன் என்பது எனக்குச் சரியாக ஞாபகமில்லை.

'ஆலமரம், பல கிளைகளைவிட்டு, விழுதுகளை நிலத்திலே வேரூன்றி பெரிய விருட்சமாக வளர்கிறது. ஆனால் தென்னை மரமோ, ஒற்றை மரமாக நெடிது வளர்ந்து தலையில் மட்டும் சில பச்சோலைகளைப் பரப்பி நிற்கிறது. ஆனால் இவை இரண்டுமே மரங்கள்தான். இதைப் போலத்தான் நாவலும் சிறுகதையும். நாவல் என்பது ஆலமரத்தைப் போன்றது. ஆலமரம் பல கிளைகளையும் விழுதுகளையும் பரப்பி நிற்பதுபோல நாவலும் பல உணர்ச்சிகளையும் கிளைக்கதைகளையும் உள்ளடக்கி இருக்கும். ஆனால் சிறுகதையோ, தென்னை மரம் எப்படி ஒரே மரமாக நெடிது வளர்கிறதோ அதுபோல ஒரே உணர்ச்சியையே மையமாகக் கொண்டு அமைகிறது. ஆலமரமும் மரம்தான். தென்னை மரமும் மரம்தான். அதேபோல நாவலும் இலக்கியம்தான். சிறுகதையும் இலக்கியம்தான்; இந்தக் கருத்துப்பட 'ராஜாஜி' அவர்கள் எழுதியது.

இத்துடன் மோப்பசான், ஓ. ஹென்றி போன்றோரது சிறுகதைகளையும் ஆங்கிலத்தில் வாசித்தேன்.

இப்படியே சிறுகதை பற்றி நிறைய அறிந்து கொண்ட பின் மீண்டும் ஒரு சிறுகதை எழுதி அண்ணாவிடம் கொடுத்தேன். 'கோயில் சாட்சி', என்றுநான் மகுடமிட்ட அந்தக் கதையைத் தான் வாசித்துப் பார்த்துவிட்டு மறுவாரம் இளைஞர் மன்றத்தில் ஒலிபரப்பலாம் என்று கூறி கதையை அண்ணா எடுத்துச் சென்று விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வாரம் என் சிறுகதையில் சில மாற்றங்கள் செய்து, கதையின் தலைப்பையும் 'பிரதிஷ்டை' என்று மாற்றி அண்ணா கொண்டு வந்தார்.

''இந்தச் சிறுகதையை ஏன் இளைஞர் மன்றத்தில் ஒலிபரப்பி 'வேஸ்ட்' பண்ண வேண்டும். 'தினகரனி'ல் பிரசுரித்தால் நன்றாக இருக்கும்,'' என்று கூறி திருத்தங்களோடு கதையை மீண்டும் பிரதிபண்ணிக் கொண்டுவரச் சொன்னார் அண்ணா.

அப்போது, கைலாசபதி அவர்கள் 'தினகரன்' ஆசிரியராக இருந்தார். அவர் தினகரன் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த காலம், ஞாயிறு தினகரன் இலக்கிய மனம் கமழக்கமழ வெளிவரும். பிரபல எழுத்தாளர்கள் பலரின் கதைகள் அதில் வெளிவரும். தினகரனில் சிறுகதை வெளிவருவதே ஒரு பெரிய பாக்கியமாக எழுத்தாளர்கள் கருதிய காலமது. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அது ஒரு மறுமலர்ச்சிக் காலமென்றே கூறவேண்டும். அப்படியானதொரு காலகட்டத்தில் 19 வயதுகூட நிரம்பாத நான் எழுதிய சிறுகதை 'தினகர'னில் பிரசுரமாகப் போகிறதென்றால், எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி எப்படி இருந்திருக்குமென்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாம்.

அச்சுவாகன மேறிய எனது முதலாவது சிறுகதை 'பிரதிஷ்டை,' அதுவும் தினகரனில்! என் பெயர் அதில் ஜி. சந்திரசேகரன் என்றே இடம்பெற்றது.

## பெயரில் என்ன உண்டு?

அந்த நாட்களில் என் பெயர் ஜோர்ஜ் சந்திரசேகரன் என்று கூறிக்கொள்வதில் எனக்குச் சற்றுக் 'கூச்சம்'. தமிழனாகப் பிறந்துவிட்ட எனக்கு 'ஜோர்ஜ்' என்று ஏன் பெயர் வந்தது, என்று ஓர் அங்கலாய்ப்பு. 'ஜோர்ஜ்' என்ற பெயரைக் கூறிக் கொள்ளவே வெட்கப்பட்டேன். சந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரன் என்ற பெயரைவிட ஜோர்ஜ் என்ற பெயர் சுருக்கமாக இருப்பதால் எல்லோரும் என்னை 'ஜோர்ஜ்' என்றே அழைத்தார்கள். இது எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. எனவே முடியுமான வரை என் பெயரை ஜி. சந்திரசேகரன் என்றே ஆக்கிக் கொண்டேன்.

ஆனால், பின்னர்தான், ஒருவரின் பெயரில் எதுவுமே இல்லை (நியுமொரோலொஜிக்காரர்கள் மன்னிக்க வேண்டும்) அவரது சாதனையைப் பொறுத்துத்தான், அவர் பெயர் பிரபலமடைகிறது என்பதைப் புரிந்து கொண்டேன்.

உதாரணமாக, 'பராசக்தி' என்றொரு தென்னிந்தியத் திரைப்படம் சுமார் 30, 35, வருடங்களுக்கு முன் இலங்கையில்-கொழும்பில் திரையிடப்பட்டது. அதே சமயம் 'மூன்று பிள்ளைகள்' என்றொரு படமும் திரையிடப் பட்டது. மூன்று பிள்ளைகள்' திரைப்படத்தில் ஸ்ரீராம் போன்ற அன்று பிரபலமாக இருந்த நடிக நடிகையர் நடித்திருந்தார்கள். ஆனால் 'பராசக்தி'யிலோ, வி.சி. கணேசன் எஸ். எஸ். ராஜேந்திரன் போன்ற, பெயரே கேள்விப்படாத நடிகர்கள் நடித்திருந்தார்கள். அத்துடன், 'பராசக்தி' என்ற பெயரைக் கொண்டு, அது புராணப் படமா அல்லது சமூகக் கதையைக் கொண்ட திரைப்படமா என்று தீர்மானிக்க முடியவில்லை. எனவே, 'மூன்று பிள்ளைகள்' திரைப்படத்தின் பக்கமே ரசிகர்களின் கவனம் திரும்பியது. 'மூன்று பிள்ளைகளு'க்கு இருந்த சனக்கூட்டம் 'பராசக்தி'க்கு இல்லை. ஆனால் இரண்டு வாரங்களுக்குள் நிலைமை மாறி விட்டது. 'மூன்று பிள்ளைகள்' திரைப்படம் சுமார் மூன்று வாரங்களே ஓடியது. ஆனால் 'பராசக்தி' 200 நாட்களுக்கு மேல் ஓடிச் சாதனை புரிந்தது, 'பராசக்தி' என்ற பெயர் வெகுவாகப் பிரபலமானது. அதில் நடித்த நடிகர்களின் பெயர்களும் பிரபலமாயின.

இவற்றையெல்லாம் நான் சரியாகப் புரிந்து கொண்ட பின் என் பெயரை ஜோர்ஜ் சந்திரசேகரன் என்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கொண்டேன். இந்த என் பெயரில் வேறு ஒரு பிரச்சினையும் உண்டு. அதாவது ஜோர்ஜ் சந்திரசேகரன் என்ற பெயரில் என் தந்தையாரின் பெயர் இல்லை. என் தந்தையாரின் பெயர் பெரியநாயகசாமிப் பிள்ளை ஜோசப் பிள்ளை. அப்படியானால் என் பெயர் "ஜோசப், ஜோர்ஜ் சந்திரசேகரன் பிள்ளை என்றிருக்க வேண்டும். ஆரம்பத்தில் பெயர் மிகவும் நீண்டு விட்டதாக எனக்குத் தோன்றவே, ஜோசப், ஜோர்ஜ் என்று இரண்டுமே ஆங்கிலப் பெயர் களாக இருந்ததால் ஜோசப் என்ற பெயரை நீக்கிவிட்டேன். பின், 'சாதிகளில்லையடி பாப்பா' என்ற பாரதியின் கவிதையில் ஏற்பட்ட மோகத்தால் 'பிள்ளை', என்ற சாதிப் பெயரையும் நீக்கிவிட்டு, ஜோர்ஜ் சந்திரசேகரன் ஆனேன்.

இப்படிப் பெயர்கள் பற்றிக் குறிப்பிடுகையில். என் குழந்தைகளுக்குப் பெயர் வைத்தது ஞாபகத்திற்கு வருகிறது.

என் மூத்த மகளுக்கு சுப்பிரமணிய பாரதியாரின் ஞாபகார்த்தமாக, பாரதி என்று பெயர் வைத்தேன். இரண்டாவது மகளுக்கு ராதா என்றும், மூன்றாவது மகளுக்கு ரதி என்றும் பெயரிட்டேன். நான்காவது மகன். ஜித்து கிருஷ்ணமூர்த்தியின் ஞாபகமாக கிருஷ்ணமூர்த்தி என்று பெயர் சூட்ட எண்ணினேன். ஆனால் வீட்டில் எதிர்ப்புத் தோன்றியது. எனவே, இலக்கிய உலகில் தனது கதைகளினால் என்னைக் கவர்ந்த franz kafka வின் ஞாபக மாக kafka என்று பெயர் வைத்தேன்.

பெயர் வைத்தபின் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. பெயரைக் கேட்டவர்கள் என்ன 'காக்காவா'? என்று கூடக் கேட்டார்கள். நான் மசியவில்லை.

இன்று கூட ''உங்கள் மகனின் பெயரென்ன?'' என்று கேட்பவர்களுக்கு kafka என்று சொன்னால், ''என்ன?'' என்று மீண்டும் ஒரு முறை கேட்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கோ ஆரம்பித்து எங்கோ வந்துவிட்டேன். மீண்டும், காலத்தைப் பின்நோக்கிச் கடக்கும் என் நினைவூர்தியில் ஏறிச் சற்றுப் பின்னோக்கிச் செல்வோமா?

## சிவாஜி கணேசனுக்கு முன்னால் நடிக்க இருந்த நாடகம்

தொடர்ந்து ஒரு வருடகாலமாக இளைஞர் மன்றத்தில் பங்குபற்றியதாக ஞாபகம். ஆரம்பத்தில் கடிதம் வாசிக்கவே நடுங்கிய நான், ஆறு மாதங்களுக்குப்பின், இளைஞர் மன்றத்தில் ஒலிபரப்பப்பட்ட எல்லா நாடகங்களிலும் முக்கிய பாத்திரத்தில் நடிக்கத் தொடங்கினேன்.

இந்தக் காலகட்டத்தில், அதாவது 1960 இல் என்று நினைக்கிறேன் கைலாசபதி அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'தினகரன்' ஒரு விழா ஏற்பாடு செய்தது. அன்று தென்னகத்தின் பிரபல எழுத்தாளராக இருந்த 'அகிலன்' போன்றவர்கள் இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்தார்கள். அப்போது மிகவும் பிரபலமாக இருந்த சினிமா நடிகர் சிவாஜி கணேசனும் இறுதிநாள் விழாவில் கலந்து கொள்வதாக இருந்தது. அந்த விழாவில் தான் சிவாஜி கணேசனுக்குக் 'கலைக்குருசில்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

விழா ஏற்பாடுகள் ஜரூராக நடந்து கொண்டிருந்த சமயம், சிவத்தம்பி அவர்களும், சிவாஜி கணேசனின் முன்னிலையில் நடிப்பதற்காக ஒரு நாடகத்தைத் தயாரித்தார். இளைஞர் மன்றத்தில், சிவத்தம்பி அவர்கள் எழுதி, நானும் நடித்த 'அம்பிகாபதி' என்ற நாடகத்தையே மேடைக்கேற்றவாறு சற்று மாற்றியமைத்து நடிப்பதென்று அண்ணா தீர்மானித்தார். இதில் ஒரு சிறு வேடத்தில் நடிப்பதற்காக நானும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இதில் சோழமன்னனாக நடித்தவர் சிவத்தம்பி அவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று கொழும்பில் பிரபலமாக இருந்த மேடை நாடக நடிகர்கள் பலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ''ஏன் நாங்கள் நடிகர்கள் இல்லையா? சிவாஜி கணேசனின் முன்னிலையில் நடிக்க எங்களுக்குத் தகுதி இல்லையா'' என்று பல துண்டுப் பிரசுரங்கள்கூட வெளியிட்டார்கள். பலர், தங்களுக்கும் 'அம்பிகாபதி' நாடகத்தில் நடிக்கச் சந்தர்ப்பம் தரும்படி கேட்டு சிவத்தம்பி அவர்களிடம் படையெடுத்தனர். அன்று மேடை நாடகங்களில் நடித்து ஓரளவு பிரபலமான நடிகர்கள்கூட, ஒரு வசனமும் பேசாமல், ஈட்டிகளைத் தாங்கி சேவகர்களாக நடிக்க முன்வந்தார்கள்.

எங்களுக்கு இரவுபகலாக ஒத்திகை நடந்தது.

ஒத்திகை விஷயத்தில் சிவத்தம்பி அவர்கள் ஒரு விடாக் கண்டர். பல நூறு தடவைகள் ஒத்திகை பார்த்தாலும் அவருக்குத் திருப்தி ஏற்படாது. இளைஞர் மன்றத்து வானொலி நாடகமானாலும் சரி, மேடை நாடக மானாலும் சரி, நடிகர்கள் களைத்து விழும்வரை ஒத்திகை பார்ப்பார்.

ஒத்திகை எல்லாம் முடிவடைந்து, சிவாஜி கணேசனுக்கு முன்னால் நாம் நடிக்கும் நாளும் வந்தது.

நாடகத்தில் நடிக்கும் நடிகர்களுக்கெல்லாம் Helper என்ற சீட்டும் வழங்கப்பட்டு, விழா நடக்கும் சரஸ்வதி மண்டபத்திற்குப் பகல் 12 மணிக்கே வந்து விடவேண்டும். என்றும் அறிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்திற்கு சரஸ்வதி மண்டபத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். Helper சீட்டைக் காட்டியதும் உள்ளே விட்டார்கள். ஆனால் மண்டபத்திற்குள் செல்ல முடியவில்லை. மண்டபம் முழுவதும் பெண்கள் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. மண்டபத்திற்கு வெளியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலது புறம் உள்ள கம்பவுண்டில் ஒரு சிறிய மேடை. அதைச் சுற்றிலும் ஆண்கள் கூட்டம்.

சரஸ்வதி மண்டபத்திற்கு வெளியே உள்ள இடதுபுற கம்பவுண்டில் ஒருவரும் இல்லை. நானும், ஓர் இளம் புகைப்படப் பிடிப்பாளரும் மாத்திரம் நின்று கொண்டிருக்கிறோம். நேரம் மெல்ல நகர்ந்து கொண்டிருக்கிறது.

பிரதான, காலி வீதியிலிருந்து கிளை பிரிந்து, சரஸ்வதி மண்டபத்திற்கு வரும் Lorenz வீதி சற்று அகலம் குறைந்தது. நேரம் செல்லச் செல்ல, இந்த வீதி முழுவதும் சனக்கூட்டம் அலைமோதத் தொடங்கிவிட்டது. கண்ணுக் கெட்டிய தூரம்வரை தலைகளே தெரிகின்றன.

சுமார் $1\frac{1}{2}$ மணி இருக்குமென்று நினைக்கிறேன். சனக்கூட்டத்தில் ஒரு சலசலப்பு.

முதலில் ஒரு பொலீஸ் வேன் வந்தது. சனநெரிசலின் மத்தியில், ஆமை வேகத்தில் வந்த வேன், சரஸ்வதி மண்டப கேட்டைக் கடந்து நின்றது. அதிலிருந்து குதித்த நான்கைந்து பொலிஸ்காரர்கள் கூட்டத்தைக் கட்டுப் படுத்தத் தடியடிப்பிரயோகம் செய்யத் தொடங்கினார்கள். தொடர்ந்து ஒரு திறந்த ஜீப். வெள்ளை வேட்டி, ஜிப்பா வோடு சிவாஜி கணேசன் அதில் நின்றிருந்தார். பக்கத்தில், அதே போல் வெள்ளை வேட்டி ஜிப்பாவில், வானொலி அறிவிப்பாளர் எஸ். பி. மயில்வாகனம்.

சுட்டெரிக்கும் வெய்யிலில், திறந்த ஜீப்பில் நின்று கொண்டு வந்ததால், இருவரது உடைகளும் வியர்வை வெள்ளத்தில் உடம்போடு ஒட்டிக் கொண்டிருந்தன.

ஜீப் வந்து சரஸ்வதி மண்டப 'கேட்' அருகே நின்றது. கேட்டைத் திறந்து ரசிகர்களின் ஆரவாரத்திற்கு மத்தியில் சிவாஜி கணேசனை மட்டும் உள் கம்பவுண்டுக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார்கள். இப்போது, எனக்கும் என் அருகில் நிற்கும் இளம் புகைப்படக் கலைஞருக்கும் சுமார் பத்தடி தூரத்தில் சிவாஜி கணேசன் தனியாக நிற்கிறார். சிவாஜி கணேசனை நேரிற்கண்ட பரவசத்தில் புகைப்படக் கலைஞர் இரண்டொரு வினாடிகள் தவிக்கிறார். பின் ஓடிச்சென்று சிவாஜி கணேசனின் கையைப் பற்றி அதனை முத்தமிட்டார். எஸ். பி. மயில்வாகனமும் இன்னும் சிலரும் உள்ளே வருகிறார்கள். சுவருக்கு வெளியே நிற்கும் ரசிகர்களுடன் சில வார்த்தைகள் பேசவேண்டும் என்கிறார் சிவாஜி. சுவருக்கு மேலே சிவாஜியின் இடுப்பளவுவரை தெரியக்கூடியதாக சிலர் அவரைத் தூக்கிப் பிடிக்கிறார்கள். குண்டாந்தடி பிரயோகிக்கும் பொலிஸ்காரர்களிடம் அப்படிச் செய்ய வேண்டாமென்று சிவாஜி கணேசன் வேண்டிக் கொள்கிறார். பின் ரசிகர்களுக்கு இரண்டொரு வார்த்தைகள் கூறிவிட்டு, பெண்கள் குழுமி இருக்கும் மண்டபத்திற்குள் சென்று விடுகிறார்.

நடந்து முடிந்த இந்தச் சம்பவங்களில் எதுவிதமான ஈடுபாடும் கொள்ளாமல், வெறும் பார்வையாளனாக மட்டும் நான் இருந்ததால் தான், இத்தனை ஆண்டுகள் கழிந்தும் இதை என்னால் ஞாபகப்படுத்திப் பார்க்க முடிகிறதென்று நினைக்கிறேன்.

சிறிது நேரத்தில், சிவாஜி கணேசன் போய்விட்டார். அவரோடு, விழாவுக்கு வந்திருந்தவர்களில் முக்கால் வாசிப்பேரும் சென்று விட்டார்கள். சிவாஜி கணேசனுக்கு முன்னால் நடிக்கப் போகிறோம் என்ற எண்ணமும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரையத் தொடங்கியது.

பல நிகழ்ச்சிகளுக்குப்பின், எமது 'அம்பிகாபதி' நாடகம் சிவாஜி கணேசன் இல்லாமலே இரவு சுமார் 8½, 9 மணிக்கு மேடையேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பி அண்ணாவான கதை

சிவத்தம்பி அவர்கள் இரண்டு வருடங்களுக்குமேல் 'இளைஞர் மன்றம்' நிகழ்ச்சியை நடத்திவிட்டார் என்ற காரணத்திற்காக அவரை நிறுத்திவிட்டு, வேறு ஓர் அண்ணாவைக் கொண்டு நிகழ்ச்சியை நடத்தப் போகிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டு இளைஞர் மன்றத்துத் தம்பி தங்கையர் அனைவரும் சஞ்சலப்பட்டோம்.

தான் நடத்தும் கடைசி இளைஞர் மன்ற நிகழ்ச்சியை, ஆறாவது கலையகத்தில் ரசிகர்கள் முன்னிலையில் நடத்தப் போவதாக சிவத்தம்பி அவர்கள் கூறினார். அதில் ஒரு நாடகமும் இடம்பெறும் என்று சொன்னார்.

நண்பன் கிறிஸ்டி தியாகராஜா எழுதிய நாடகம் இதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதில் என். தாலிப், கிறிஸ்டி தியாகராஜா, ஹிலேரியன் பர்னாந்து ஆகியோருடன் நானும் நடித்தேன். இந்த நாடகத்தில் நடித்ததற்குத் தான், இலங்கை வானொலியில் முதற் தடவையாக பதினைந்து ரூபாய் சன்மானம் பெற்றேன்.

சிவத்தம்பி அவர்கள் இளைஞர் மன்றத்தை விட்டுச் செல்லும்போது, அப்போது மாதர், சிறுவர் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாகவிருந்த திருமதி பொன்மணி குலசிங்கத்திடம் நிகழ்ச்சிக்கான பிரதிகளை எழுதுவதற்கு என்னைச் சிபார்சு செய்திருந்தார்.

அதன்படி திருமதி பொன்மணி குலசிங்கம் என்னை அழைத்து, அடுத்த வாரத்திலிருந்து இளைஞர் மன்றம் நிகழ்ச்சிக்கான பிரதிகளை எழுதித்தரச் சொன்னார். அப்போது 30 நிமிட நிகழ்ச்சிக்கான பிரதிகளுக்கு அறுபது ரூபாய் சன்மானம் வழங்கப்பட்டது.

அன்று, இலங்கை வானொலி நிரந்தர அறிவிப்பாளர் களில் ஒருவரான, திரு. எஸ். நடராஜா, இளைஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத்தை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனவேதான் பிரதி எழுதும் பொறுப்பு எனக்குக் கிடைத்தது.

மறுவாரம், நிகழ்ச்சிக்கான பிரதிகளையெல்லாம் தயாரித்துக்கொண்டு கலையகத்திற்கு வந்து சேர்ந்தேன். வழமையாக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் நண்பர்கள் அனைவரும் வந்திருந்தார்கள்.

நான் கொண்டுவந்த பிரதிகளைச் சிலரிடம் கொடுத்து ஒத்திகை பார்க்கத் தொடங்கினேன். சற்று நேரத்தில், நிகழ்ச்சியை நடத்தப்போகும் திரு. எஸ் நடராஜா வந்து சேர்ந்தார். சிறிது காலம் இளைஞர் மன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக இலங்கை வானொலிக்கு வந்து போனதால், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், அறிவிப்பாளர்கள் போன்ற சிலரை நான் தெரிந்து வைத்திருந்தேன்.

எஸ். நடராஜா அவர்கள் என் பிரதிகளை வாங்கி வாசித்துப் பார்த்தார். ஒத்திகைகளைப் பார்த்தார். பின் என்னைப் பார்த்து, ''அண்ணாவாக இருந்து இந்த நிகழ்ச்சியை உம்மால் நடத்தமுடியுமா?'' என்று கேட்டார்.

''முடியும்''. என்றேன்.

''அப்படியானால் இன்றைய நிகழ்ச்சியை நீரே நடத்தும் பார்ப்போம்''. என்றார்.

முதல் வாரம் தம்பியாக இருந்த 18 வயதுப் பையன், மறுவாரம் அண்ணாவாக மாறினான்.

ஐந்தரை மணிக்குக் கலையகத்தின் சிவப்பு விளக்கு எரிந்ததும்,'' வணக்கம் தம்பி தங்கைகளே,'' என்று நான் கூற, என் நண்பர்கள் எல்லாம் ''வணக்கம் அண்ணா,'' என்று என்னைப் பார்த்துச் சொல்ல, 30 நிமிடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாக ஒலிபரப்பான இளைஞர் மன்ற நிகழ்ச்சியை நடத்தி முடித்தேன்.

நிகழ்ச்சி முழுவதையும், தொழினுட்பவியலாளர் அறையிலிருந்து அவதானித்துக் கொண்டிருந்த எஸ். நடராஜா அவர்கள், நிகழ்ச்சி முடிவடைந்ததும் கலையகத்திற்குள் வந்து என்னை வெகுவாகப் பாராட்டினார்.

60 ரூபாய் சன்மானம் கிடைத்தது. அதை எடுத்துக் கொண்டு, என் நண்பர்களுடன் இலங்கை வானொலிச் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றேன். பல வகையான சிற்றுண்டிகள் வயிறு புடைக்க உண்டோம். அத்துடன் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நண்பர்களுக்கெல்லாம் ஐவைந்து ரூபாயாகக் கொடுத்தேன். என் கையில் பத்தோ பதினைந்து ரூபாய்தான் மிஞ்சியது.

இப்படியே தொடர்ந்து ஆறு மாதங்களாக இளைஞர் மன்றம் நிகழ்ச்சியை நடத்தி வந்தேன். நாட்கள் செல்லச் செல்ல, முழுப் பொறுப்பையும் என்னிடமே விட்டுவிட்டு, சன்மானப் படிவத்தில் கையெழுத்திட்டுத் தந்துவிட்டு திருவாளர் எஸ். நடராஜா போய்விடுவார்.

## ஆசிரியருக்கு ஆசிரியரானேன்

ஒரு நாள், நிகழ்ச்சியை நடத்துவதற்காக நான் வானொலி நிலையத்திற்கு வந்தபோது, ''இன்று திரு. நடராஜா நிகழ்ச்சிக்கு வரமாட்டாராம். அவருக்காகக் காத்திராமல் நிகழ்ச்சியை நடத்தி முடிக்கவாம்'', என்று வாயிலில் இருந்த வரவேற்பாளர் சொன்னார். நானும் கலையகத்திற்கு வந்து, ஒத்திகையை ஆரம்பித்து, நிகழ்ச்சியை நடத்தத் தயாராகிக் கொண்டிருந்தேன்.

நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு சிறிது நேரத்திற்கு முன்னால், அப்போது இலங்கை வானொலி நாடகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்பாளராக இருந்த 'சானா', என்று செல்லமாக அழைக்கப்படும் எஸ். சண்முகநாதன் அவர்களும், அவருடன் ஒரு குட்டையான மனிதரும் கலையகத்திற்குள் வந்தார்கள். இந்தக் குட்டையான மனிதர்தான், வானொலி, மேடை நாடக எழுத்தாளரான சி. சண்முகம் என்பதைப் பின்னரே அறிந்தேன்.

கலையகத்திற்குள் வந்த 'சானா', ''இந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர் யார்?'' என்று கேட்டார்.

''மிஸ்டர் எஸ். நடராஜா'', என்று கூறினேன்.

''நடராஜா எங்கே?'' என்று கேட்டார் சானா.

''இன்னும் வரவில்லை'', என்றேன்.

இருவரும் கலையகத்திலிருந்து போய்விட்டார்கள். நான் தொடர்ந்து ஒத்திகைகளைக் கவனிக்கத் தொடங்கினேன்.

நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு சுமார் ஐந்து நிமிடங்களுக்கு முன்னர், மீண்டும், இருவரும் கலையகத்திற்குள் வந்தார்கள்.

''நடராஜா இன்னும் வரவில்லையா?'' என்று மீண்டுமொருமுறை கேட்டார் சானா.

''இல்லை'', என்றேன்.

இருவரும் போய்விட்டார்கள்.

ஐந்தரை மணியாயிற்று.

ஒலிவாங்கியைச் சுற்றி, நண்பர்களும் நானும் நின்று கொண்டிருக்கிறோம்.

சிவப்பு விளக்கு எப்போதும் எரியலாம். சிவப்பு வெளிச்சம் வந்ததும் தாமதமில்லாமல் நிகழ்ச்சியைத் தொடங்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் சிவப்பு விளக்கையே பார்த்தபடி மௌனமாக நிற்கிறோம்.

ஐந்து மணி முப்பத்தொரு நிமிடமாகிறது.

நிகழ்ச்சிக்கான அறிவித்தலும் இல்லை; சிவப்பு விளக்கும் எரியவில்லை. வாத்திய இசைதான் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

கடிகாரத்தின் கைகள் நகர்ந்து கொண்டிருந்தன.

ஐந்து முப்பத்தைந்து.

கலையகத்தின் மறுபுறத்தில், கண்ணாடி அறைக்குள் அமர்ந்திருக்கும் தொழினுட்பவியலாளரிடம், என்ன செய்வதென்று சைகைமூலம் கேட்கிறேன்.

தனக்கும் தெரியாதென்று அவரும் கைகளை விரிக்கிறார்.

ஐந்து நாற்பது.

''என்ன காரணமோ தெரியவில்லை. நிகழ்ச்சி ரத்தாகிவிட்டது. நீங்கள் போகலாம்,'' என்று கூறிவிட்டு, தொழினுட்பவியலாளர் எழுந்து போய்விட்டார்.

இனி என்ன செய்வது?

நிகழ்ச்சித் தடைப்பட்டதற்கு இது காரணமாக இருக்குமோ, அது காரணமாக இருக்குமோ என்று ஒவ்வொருவர் ஒவ்வொரு காரணங்களைக் கற்பித்துக் கொண்டு கலையகத்திற்கு வெளியே வந்தோம். வாசலில் சானாவும் சி. சண்முகமும் நின்று கொண்டிருந்தார்கள்.

என்னைக் கண்டதும் சண்முகநாதன் அவர்கள், ''என்ன தம்பி நிகழ்ச்சி நடக்கவில்லையா?'' என்று கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நிகழ்ச்சியை ரத்துச் செய்துவிட்டார்களாம்,'' என்றேன்.

''ஏனாம்''? என்றார்.

''தெரியாது'' என்றேன்.

இப்படி நாம் கதைத்துக் கொண்டிருந்த சமயம், அப்போது பகுதி நேர அறிவிப்பாளராக இருந்த திரு. வி. கே. நடராஜா என்பவர், சானாவிடம் வந்தார்.

''நீங்கள் சொன்னதுபோல், தமிழ் நிகழ்ச்சி அதிகாரிக்கு டெலிபோன் செய்தேன். நிலையத் தயாரிப்பாளர் இல்லாமல் நிகழ்ச்சியை நடத்தவிட வேண்டாமாம். எனவே I have cancelled the programme,'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

நிகழ்ச்சி கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டதற்கான காரணம் உடனே புரிந்துவிட்டது.

திங்கட்கிழமை காலை, வானொலி நிலையத்திற்கு வந்து, இளைஞர் மன்றம் நிகழ்ச்சிக்குப் பொறுப்பான தயாரிப்பாளர் திருமதி பொன்மணி குலசிங்கத்தைச் சந்தித்தேன்.

''அன்று நடராஜா செய்த பிழையால் எனக்கும் பிரச்சினையாக இருக்கிறது''. என்று சொன்ன அவர், ''அடுத்த வாரத்திலிருந்து, இளைஞர் மன்றத்தை நடத்துவதற்காக, றோயல் கல்லூரி ஆசிரியர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஆனால் அவர் வானொலிக்குப் புதியவர். அதனால், நீ உன் பையன்களுடன் வந்து நிகழ்ச்சியை அவருக்குச் செய்து கொடு,'' என்றார்.

சனிக்கிழமை நண்பர்களையும் அழைத்துக்கொண்டு, வானொலி நிலையம் வந்து சேர்ந்தேன். அங்கே, இராசையா மாஸ்டர், சென். பெனடிக்ஸ் கல்லூரி மாணவர்கள் சிலருடன் வந்திருந்தார். என்னைக் கண்டதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஜோர்ஜ், நீர் இவ்வளவு நாள் நடத்திய நிகழ்ச்சியை, உம்மிடமிருந்து நான் பறித்துச் செல்வது போல் ஒரு கவலை ஏற்படுகிறது,'' என்றார்.

அப்போதுதான், திருமதி குலசிங்கம், சென். பெனடிக்ஸ் கல்லூரி என்பதை தவறுதலாக றோயல் கல்லூரி என்று சொல்லிவிட்டார் என்பது எனக்குப் புரிந்தது. இராசையா மாஸ்டர் சென். பெனடிக்ஸ் கல்லூரியில், எனக்கு நான்காம் வகுப்பில் வகுப்பாசிரியராக இருந்தவர்.

''இதில் உங்கள் தவறு எதுவுமே இல்லை மாஸ்டர். நீங்கள் வீணாகக் கவலைப்பட வேண்டாம்,'' என்று கூறி அவரைச் சமாதானப் படுத்தினேன்.

வானொலிக்குப் புதியவர் என்பதால், கலையகத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டும், கலையகத்திலுள்ள சிவப்பு, மஞ்சள், பச்சை விளக்குகள் எரிந்தால் அவை ஒவ்வொன்றிற்கும் என்னென்ன அர்த்தங்கள், என்றெல்லாம் அவருக்கு விளக்கிக் கூறினேன்.

நான்காம் வகுப்பில் எனக்கு வகுப்பாசிரியராக இருந்த இராசையா மாஸ்டருக்கு வானொலிக் கலையகத்தில் நான் ஆசிரியனாக மாறிய விந்தையை நினைத்து எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

## பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டி...

அந்த நாட்களில் 'சானா'வின் மேல் எனக்கு அளவு கடந்த ஆத்திரம். அவரால்தான் இளைஞர் மன்றத்தை என்னால் தொடர்ந்து நடத்த முடியாமல் போய்விட்டதென்று அவர்மேல் வெறுப்பே ஏற்பட்டது. ஆனால், இன்று அதை நினைத்துப்பார்க்கையில் அதாவது நானும் இலங்கை வானொலியில் ஓர் அறிவிப்பாளனாகி, வானொலித் தயாரிப்

பாளனாகவும் மாறிப் பல அனுபவங்களைப் பெற்றபின், இன்று நானும் 'சானா' செய்ததைத்தான் செய்திருப்பேன்.

பகுதிநேர அறிவிப்பாளனாகக் கூட இல்லாத, வானொலி நடிகனாகக்கூட இல்லாத, வெறுமனே இளைஞர் மன்றத்தில் பங்குபற்றுவதற்காக வந்த ஒரு பையன், வானொலி நிலையத் தயாரிப்பாளரோ அல்லது அறிவிப் பாளரோ இல்லாமல், தனியாக ஒரு நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தால், அதைப் பார்த்துவிட்டு நான் சும்மா இருந்துவிட மாட்டேன். உரியவர்களிடம் அறிவித்து அதை நிறுத்தவே செய்வேன்.

ஆனால் சண்முகநாதன் அவர்கள், பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டியதை நினைக்கத்தான் சிரிப்பு வருகிறது.

## மீண்டும் சற்றுப் பின்னோக்கிச் செல்வோம்...

சிவத்தம்பி அவர்கள் இளைஞர் மன்றம் நடத்திக் கொண்டிருந்த நாட்களில் ஒரு நாள்.

அன்று பகலில் இருந்து மழை பெய்து கொண்டிருந்தது. மழையையும் பொருட்படுத்தாமல் வானொலி நிலையத் திற்கு வந்த இளைஞர் மன்றத் தம்பிகள் நால்வர். அதில் நானும் ஒருவன்.

இந்த இடத்தில் சிவத்தம்பி அவர்களைப் பற்றிச் சிறிது கூறவேண்டும்.

தம்பி தங்கையர் இல்லாமலே நிகழ்ச்சியை நடத்தி முடிக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர் அவர். ஓரிரு குறிப்புக் களை மட்டும் எழுதி வைத்துக்கொண்டு, தங்குதடை ஏதுமின்றி, ஒரு சிறு பிழைகூட விடாமல், ஒரு மணிநேரம் வேண்டுமானாலும் வானொலியில் பேசித் தீர்க்கக்கூடிய ஆற்றல் உடையவர் அவர். இளைஞர் மன்றத்திற்கு நல்ல ஆக்கங்கள் வந்து சேராவிட்டால், அவரே பதினைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது நிமிடங்கள் பேசித் தீர்ப்பதைக் கண்டு ரசித்தவர்களில்-அல்ல, மலைத்தவர்களில் நானும் ஒருவன்.

நான்கு தம்பிமாருடன் அண்ணா நிகழ்ச்சியைத் தொடங்கினார். பத்து நிமிடங்கள் அவரே பேசினார். பின் ஒரு தம்பி, கட்டுரை ஒன்றை வாசிக்கத் தொடங்கியதும், சைகை மூலம் என்னை அழைத்துத் தன் பக்கத்தில் அமரச் சொன்னார். நானும் அமர்ந்தேன்.

ஓர் ஆங்கிலப் புத்தகத்தை விரித்து என்னிடம் நீட்டினார். நானும் வாங்கிப் பார்த்தேன். அதில், ஜோர்ஜ் வொஷிங்டனின் வாழ்க்கை பற்றிச் சில குறிப்புகள் இருந்தன.

ஒலிவாங்கியில் வாசித்துக் கொண்டிருப்பவர் வாசித்து முடித்ததும், இதை வாசியும் என்பது போல அண்ணா எனக்குச் சைகைமூலம் காட்டினார்.

எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ஆங்கிலத்தில் இருப்பதை அப்படியே ஆங்கிலத்தில் வாசிக்கச் சொல்கிறாரா, அல்லது அதை மொழிபெயர்த்துத் தமிழில் சொல்லச் சொல்கிறாரா என்று புரியவில்லை.

மொழிபெயர்ப்பதானால், ஆங்கிலத்தைப் பார்த்துக் கொண்டு தமிழில் சொல்வது அவ்வளவு இலகுவான காரியமாக எனக்குத் தோன்றவில்லை. நெஞ்சு 'படக் படக்' கென்று அடித்துக் கொண்டது. ஒலிவாங்கி மாத்திரம் இன்னும் சற்றே அருகில் இருந்திருந்தால், கலையகத்துக் கடிகாரம் போல், என் இதயத் துடிப்பும் நேயர்களுக்குக் கேட்டிருக்கும்.

கட்டுரை வாசித்த தம்பி வாசித்து முடித்துவிட்டார்.

''இப்பொழுது தம்பி ஜோர்ஜ் சந்திரசேகரன், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வொஷிங்டனின் வாழ்க்கையில் நடந்த சில ருசிகரமான சம்பவங்களை உங்களுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவார்,'' என்று ஒலிவாங்கியில் கூறிவிட்டு ஒலிவாங்கிக்கு முன்னே வர இடம் கொடுத்தார்.

தமிழில்தான் மொழிபெயர்த்துச் சொல்ல வேண்டும் என்பதை உடனே நான் புரிந்து கொண்டேன்.

ஆங்கிலத்தைப் பார்த்துக்கொண்டே தமிழில் சொல்லத் தொடங்கினேன். சுமார் ஐந்து நிமிடங்கள் மொழி பெயர்த்துச் சொல்லி இருப்பேன் என்று நினைக்கிறேன்.

கல்விப் பொதுத்தராதர மாணவனான நான், ஆங்கில அறிவு அதிகமில்லாத அந்த நாட்களில், ஆங்கிலப் புத்தகத்தைப் பார்த்தபடி தமிழில், அதுவும் நேரடி ஒலிபரப்பில், பிழை ஏதும் விடாமல் மொழிபெயர்த்துக் கூறியதை இன்று நினைத்தாலும் எனக்கு ஆச்சரியமாகத் தான் இருக்கிறது.

இந்த அனுபவம், பின்னர் எனது வானொலி வாழ்க் கையில் வெகுவாக உதவி இருக்கிறது.

இப்படியே 'இளைஞர் மன்ற' நாட்களில் பல சுவை யான அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டதுண்டு. ஞாபகம் வரும்போது அவற்றைச் சொல்வேன். இப்போது, முதன் முதலில் மேடை நாடகத்தில் நடித்த அனுபவம்பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## முதல் மேடை நாடக அனுபவம்

சென். பெனடிக்ஸ் கல்லூரியில் அந்த நாட்களில், தமிழ்ச்சங்கம் பெரிய அளவில் இயங்கி வந்தது. ஆண்டு தோறும், தமிழ் விழா நடைபெறும். இந்தத் தமிழ் விழாவிலே முக்கிய அம்சமாக இடம்பெறுவது நாடகம். இந்த நாடகத்தைப் பார்ப்பதற்காகவே நிறையப்பேர் வருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி என்று ஏற்கனவே பல போட்டிகள் நடத்தப்பட்டு, அவற்றிற்கான பரிசுகளும் தமிழ்விழா அன்று வழங்கப்படும்.

பிரதம விருந்தினரின் உரை, ஆண்டறிக்கை வாசிக்கப் படல், பரிசு வழங்குதல் ஆகியவற்றைத் தொடர்ந்து நாடகம் நடைபெறும். பள்ளிக்கூட நாடகம்தான் என்றாலும், இது இரண்டு மூன்று மணி நேரம் நடைபெறும்.

தமிழ்விழா நாடகங்களில் நடிக்கவேண்டும் என்று எனக்கு மிகுந்த ஆசை. என்னைப்போலவே என் நண்பன் ஜோக்கிமுக்கும் ஆசை. ஆனால் ஒவ்வொரு ஆண்டும், சினிமாப் படங்கள் பார்ப்பதில் எமக்கிருந்த ஆசை, இந்த நாடக ஆசையை வென்று விடும்.

ஒவ்வொரு ஆண்டும், 'தமிழ் விழா'வுக்குப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, நானும் ஜோக்கிமும் சினிமாவுக்குப் போய்விடுவோம். சினிமா பார்த்துவிட்டு வரும் வழியில் பள்ளிக்கூடத்திற்குப் போவோம். அங்கே நாடகத்தின் இறுதிக் காட்சி நடந்து கொண்டிருக்கும். அதைப் பார்த்ததும் எம் இருவருக்கும் ஒரு வேகம் பிறக்கும். 'அடுத்த வருடம் தமிழ்விழா நாடகத்தில் கட்டாயம் நடிக்க வேண்டும்' என்று சபதம் செய்து கொள்வோம்.

இப்படியே இரண்டு மூன்று ஆண்டுகள் 'சபதம்' செய்தும் நாடகத்தில் நடிக்கவில்லை. சினிமா மோகம் அந்த அளவிற்கு எம்மைப் பிடித்திருந்தது.

## 1956-ஆம் ஆண்டு

ஒரு நாள் ஏதோ சுகயீனம் காரணமாக நான் பள்ளிக் கூடம் செல்லவில்லை. மறுநாள் பள்ளிக்குச் சென்றதும் ஜோக்கிம் எனக்கொரு 'நியூஸ்' வைத்திருந்தான்.

''இந்த வருட தமிழ் விழாவில் நடிக்க விருப்பமுள்ளவர் களின் பெயர்களைக் கேட்டு ஒரு துண்டு வந்தது. நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கூலுக்கு வராததால், உன் பெயரையும் கொடுத்து என் பெயரையும் கொடுத்துவிட்டேன். இந்த வருடமாவது நடிப்போம்'', என்றான் ஜோக்கிம்.

எனக்கு ஒரு புறம் சந்தோஷம், மறுபுறம் பயம்.

இயற்கையாகவே 'சங்கோஜப்' பிராணியான நான், பலர் முன்னிலையில் மேடையேறி நடிப்பதிலுள்ள சிக்கல் களை நினைக்கப் பயமாக இருந்தது. தன் பெயரை மட்டும் கொடுக்காமல் என் பெயரையும் கொடுத்து என்னைச் சிக்கலில் மாட்டி வைத்து விட்டானே என்று ஜோக்கிமின் மேல் கோபமும் வந்தது.

சுமார் ஒரு வாரத்தின் பின், நடிகர் தேர்வு நடை பெற்றது.

அப்போது நாடகம் பழக்குவதற்குப் பொறுப்பாக இருந்தவர் திரு. பி. எம். ஜோசப் மாஸ்டர். ஆஜானு பாகுவான உடற்கட்டு. கண்டிப்பு என்பது முகத்திலேயே எழுதி ஒட்டப்பட்டிக்கும்.

## மனோன்மணீயம்

''பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் செய்யுள் உருவில் எழுதிய 'மனோன்மணீயம்', நாடகத்தை பிரான்சிஸ் கிங்ஸ்பரி அவர்கள் மாணவர்களுக்காக வசன நடையில்'மனோன்மணி' என்ற பெயரில் எழுதியுள்ளார். இந்த 'மனோன்மணி' என்ற நாடகத்தை நடிப்பதற்காகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்'' என்று கூறிய பி. எம். ஜோசப் அவர்கள், நாடகப் பாத்திரங்களுக்கான நடிகர்களைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினார்.

நடிகர் தேர்வுக்காக வந்த மாணவர்களில் முக்கால் வாசிப்பேர் முதற்தடவையாக மேடையேறப் போகிறவர்கள். யார் எந்த வேடத்தில் பொருத்தமானவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது யாருக்குமே தெரியாது. எனவே, மாஸ்டர் பி. எம். ஜோசப் அவர்கள், நாடகப் பாத்திரங்களின் பெயர்களை ஒவ்வொன்றாகச் சொல்லி, அந்தந்தப் பாத்திரங்களில் நடிக்க விரும்பும் மாணவர்களின் பெயர்களைக் குறித்துக் கொண்டார்.

முதலில் 'சீவகன்' என்றொரு பாத்திரம். நாடகத்தில் அதிக காட்சிகளில் தோன்றி அதிகமான வசனங்களைப் பேசும் பாத்திரம். ''இந்தப் பாத்திரத்தை யார் ஏற்று நடிக்க விரும்புகிறீர்கள்,'' என்று கேட்டார் மாஸ்டர்.

உடனே ஜோக்கிம் கையை உயர்த்தி ''நான் நடிக்கிறேன் சேர்'', என்றான். இப்படியே ஒவ்வொரு பாத்திரமாக மாஸ்டர் கேட்கக் கேட்க, ஒவ்வொருவராகக் கையை உயர்த்தித் தமது பெயர்களைப் பதிந்து கொண்டார்கள்.

ஒவ்வொரு பாத்திரத்தின் பெயரையும் மாஸ்டர் சொல்லச் சொல்ல, ''கையை உயர்த்து,'' என்று இரகசியமாகச் சொல்லி என் கையைச் சுரண்டுவான் ஜோக்கிம். என் மனத்திலோ வேறோர் எண்ணம் ஓடிக்கொண்டிருந்தது.

பாத்திரங்கள் எல்லாம் முடிந்துவிட்டால், நாடகத்தில் நடிக்கத் தேவையில்லை. ஒரு சிக்கலில் இருந்து தப்பிக் கொள்ளலாம்.

மிகுதியாக இன்னும் இரண்டு, மூன்று பாத்திரங்கள் தான் இருந்தன. ஜோக்கிம் என் கையைச் சுரண்டிக் களைத்து, பொறுமையை இழந்துவிட்டான்.

''சகடன்,'' என்று பாத்திரத்தின் பெயரை உரத்துக் கூறிவிட்டு, எங்களைப் பார்த்தார் ஜோசப் மாஸ்டர். உடனே ஜோக்கிம், ''ஜோர்ஜ் நடிப்பார் சேர்,'' என்றான். 'மீண்டும் சிக்கலில் மாட்டிவிட்டானே,' என்று உள்ளே குமைந்து கொண்டேன். மாஸ்டர் என் பெயரையும் எழுதிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மனோன்மணி,' நாடகத்தில் 'பலதேவன்,' என்றொரு பாத்திரம். முக்கியமான பாத்திரம். அதாவது வில்லன் பாத்திரம். இந்தப் பாத்திரத்தில் நடிப்பதற்கு இரண்டு மாணவர்கள் முன் வந்தார்கள். ஒருவர் கே. வி. எஸ். மோகன். மற்றவர் எம். ஏ. ஆர். பர்னாந்து.

மோகன், அப்போது வீரகேசரிப் பத்திரிகை ஆசிரியராக இருந்த கே. வி. எஸ். வாஸ் அவர்களின் மகன். இந்த இருவரில், குடிலனின் மகன் பலதேவன் பாத்திரத்தில் நடிப்பதற்குப் பொருத்தமானவர் யார் என்பதைத் தேர்ந்தெடுக்க, இருவருக்கும் பலதேவன் பாத்திர வசனங்களைக் கொடுத்து நடித்துக்காட்டும்படி மாஸ்டர் கூறினார். இதில் எம். ஏ. ஆர். பர்னாந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒத்திகைகள் ஆரம்பமாயின.

ஒத்திகைகளுக்கு முன்னர், அவரவர்களுக்குரிய வசனங்களையெல்லாம் எழுதி வைத்து மனப்பாடம் செய்தோம். எனக்கோ கனவிலும்கூட அந்த வசனங்கள்தான் வந்து போகும். என் பள்ளிக்கூடப் பாடங்களைக்கூட அந்த அளவு நான் பாடமாக்கியது கிடையாது.

முதன்முதலில் ஒத்திகைக்குத் தைரியமாகப் போனேன். ஆனால் எனது காட்சி நெருங்க நெருங்க, கை கால்களெல்லாம் உதறல் எடுக்கத் தொடங்கி விட்டன.

நான் நடிக்க வேண்டிய காட்சி.

அதாவது, ஏழாவது சீன் நடந்து கொண்டிருக்கும் போது நான் உள்ளே வர வேண்டும்.

ஆரம்ப ஒத்திகைகள் ஒரு வகுப்பறையில்தான் நடந்தன. மேடை அளவிற்குக் கீழே 'சோக்'கினால் ஒரு கோடு போட்டிருந்தார் மாஸ்டர். அதற்குள்தான் நடிகர்கள் நின்று நடிக்கவேண்டும். மற்றவர்கள் கோட்டுக்கு வெளியே இருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த இடத்தில் சகடன் வரவேண்டும். எங்கே சகடன்?'' என்று கத்தினார் மாஸ்டர்.

நான் ஓடிவந்து கோட்டுக்குள் நின்று கொண்டேன். கை கால்கள் உதறல் எடுத்தன.

என்ன ஆச்சரியம்! எத்தனையோ நாள் பகல் இரவென்று பாராமல் பாடமாக்கிய வசனங்கள் எல்லாம் எங்கு ஓடிமறைந்தன? ஒரு வசனம்கூட ஞாபகத்திற்கு வரவில்லை. மூளையை யாரோ கழற்றி எடுத்துக்கொண்டு போய் விட்டதைப்போல ஒரு Blank!

ப்ரொம்டரின் உதவியுடன், ஒருவாறு தட்டுத்தடுமாறி நான் சொல்ல வேண்டிய வசனத்தைச் சொல்லி முடித்தேன்.

''இதற்குத்தான் ரிஹர்சலுக்கு வருமுன்னமே வசனங்களைப் பாடமாக்கிக்கொண்டு வரவேண்டும் என்று சொன்னேன். ஏன் பாடமாக்கவில்லை?'' என்று கர்ச்சித்தார் மாஸ்டர்.

'கடவுளே, நானா பாடமாக்கவில்லை? இந்த இரண்டு மூன்று நாட்களாக இந்த வசனங்களைத் தவிர வேறு எதையுமே நினைத்துக்கூடப் பார்க்கவில்லையே. இதற்கு மேலும் எப்படித்தான் பாடமாக்குவது? இதையெல்லாம் இவருக்கு எப்படிப் புரிய வைப்பது?' என்று எனக்குள்ளேயே குமைந்தது, நான் அசடு வழியத் திருதிருவென்று விழித்துக் கொண்டிருப்பதாக மாஸ்டருக்குத் தோன்றி இருக்க வேண்டும்.

''சரி, அடுத்த ரிஹர்சலுக்கு வரும்போது பாடமாக்கிக் கொண்டுவர வேண்டும்,'' என்று உறுமிவிட்டு, தொடர்ந்து நடிக்கச் சொன்னார்.

மனதிற்குள் ஜோக்கிம்மை சபித்துக் கொண்டேன்.

ஒத்திகைகள் ஜரூராகத் தொடர்ந்து நடந்தன. இப்போதெல்லாம் பழைய ஹோலில் ஒத்திகைகள் நடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திகைகளின்போது, ஜோசப் மாஸ்டர், தனது கம்பீரமான குரலில் ''ஐஸ் ஐஸ்'', என்று கத்துவார். ஆளில்லா மண்டபத்தின் எதிரொலியோடு அவர் குரல் கர்ணகடூரமாகக் கேட்கும். வெளியில் இருந்து யாராவது கேட்டால், 'ஜோசப் மாஸ்டர் ஐஸ்கிரீம் விற்கிறாரோ?' என்று தான் எண்ணத் தோன்றும்.

ஆனால் உண்மை அதுவல்ல. மேடையில் தோன்றும் நடிகர்கள், மண்டபத்தில் அமர்ந்திருக்கும் பார்வையாளர்களைப் பார்த்துத்தான் வசனங்களைச் சொல்ல வேண்டும் என்பது ஜோசப் மாஸ்டரின் அசைக்க முடியாத நம்பிக்கை. இது எவ்வளவு பிழையான கோட்பாடு என்பதை நான் பின்னர் புரிந்து கொண்டேன். ஆனால் அன்றோ, அவர் கூறியதையே வேத வாக்காகக் கொண்டு எல்லோரும் நடித்தோம்.

ஒத்திகைகளின்போது, தப்பித் தவறி ஒரு நடிகர் தன்னுடன் நடிக்கும் சக நடிகரையோ அல்லது வேறெங்காவது பார்த்தோ வசனத்தைச் சொல்லிவிட்டால், மண்டபத்தின் மறுகரையில் நின்று ஒத்திகையைக் கவனித்துக் கொண்டிருக்கும் ஜோசப் மாஸ்டரின் குரல் ''ஐஸ் ஐஸ்'', என்று, ஏதோ கொலையே நடந்து விட்டதைப்போல் கேட்கும்.

நாடகம் மேடையேறுவதற்கு ஒரு கிழமையே இருந்தது.

திடீரென்று ஒத்திகையில் ஒரு சிக்கல்.

எம். ஏ. ஆர். பர்னாந்துவின் வசனங்களில் 'ஓலை' என்ற சொல் பல இடங்களில் வருகிறது. இவரோ 'ஓலை' என்பதை 'ஔை' என்றே சொன்னார். இதை, நாடகம் மேடையேறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர்தான் மாஸ்டர் கண்டுபிடித்தார்.

''ஔை அல்ல ஓலை,'' என்று எத்தனையோ தடவை திருத்திப் பார்த்தார் மாஸ்டர். பலனில்லை. எம். ஏ. ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்னாந்துவின் வாயிலிருந்து ஓளைதான் வந்ததே தவிர ஓலை வரவில்லை.

மாஸ்டர் வெகுவாகக் கவலைப்பட்டார். ''எத்தனையோ பெரியவர்களெல்லாம் விழாவுக்கு வருவார்கள். அவர்களுக்கு முன்னால் இப்படிச் சொன்னால் எங்கள் கல்லூரியைப் பற்றி என்ன நினைப்பார்கள்,'' என்று கூறியவர். மீண்டும் மீண்டும் முயன்றும் பலனில்லை. இறுதியில், எம். ஏ. ஆர். பர்னாந்துவுக்குப் பதிலாக மீண்டும் கே. வி. எஸ். மோகனையே அந்தப் பாத்திரத்தில் நடிக்க அழைப்பதென்று தீர்மானித்தார். அடுத்த நாள் ஒத்திகையிலிருந்து மோகன் நடித்தார்.

நாடகம் மேடையேறுவதற்கு சுமார் மூன்று நான்கு நாட்களுக்குமுன் வந்த ஞாயிற்றுக்கிழமை, காலையில் எல்லோரும் ஒத்திகைக்கு வந்து சேர்ந்தோம். வந்த பிறகு தான் இரண்டு வேற்று மனிதர்கள் அன்று எமது ஒத்திகையைப் பார்த்துத் தமது அபிப்பிராயங்களைச் சொல்லப் போகிறார்கள் என்ற விஷயம் தெரிய வந்தது. எனக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

இருவரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களில் ஒருவர், அன்று தமிழ் வானொலி நாடகங்களில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த ஹொரசாரியோ பீரிஸ் அவர்கள். அத்துடன் அவர் சென். பெனடிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவரும்கூட. மற்றவர் யார் என்பது இப்போது ஞாபகத்தில் இல்லை. அவரும் நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டவராகத்தான் இருக்கவேண்டும்.

நாடகத்துறை விற்பன்னர்கள் இருவரின் முன்னால் ஒத்திகை தொடங்கி நடந்து கொண்டிருந்தது. ஏழாவது காட்சியில்தான் நான் வரவேண்டும்

ஒரு காட்சியில் நடித்துவிட்டு வந்தான் ஜோக்கிம். அவனை அழைத்து, இரகசியமாகச் சொன்னேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஜோக்கிம், நான் ஒருவருக்கும் சொல்லாமல் வீட்டுக்குப் போகப் போகிறேன்.''

''ஏன்?''

''புதியவர்களுக்கு முன்னால் நடிக்கக் கூச்சமாக இருக்கிறது.''

''உனக்கென்ன பைத்தியமா? கடைசி நேரத்தில் இப்படிச் செய்தால் கொலேஜிலிருந்தே உன்னை sack பண்ணி விடுவார்கள்.''

அவன் சொன்னது உண்மையென்றே எனக்குப்பட்டது. சொல்லாமற் கொள்ளாமல் போய்விட்டால் நாளை எப்படி ஜோசப் மாஸ்டரின் முகத்தில் விழிப்பது?

சரி, வெள்ளம் தலைக்குமேல் போய்விட்டது. இனி சாண் போனால் என்ன முழம் போனால் என்ன? தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ஏதோ நடித்து முடித்தேன்.

ஒத்திகை முடிந்ததும், ஹெரோசியோ பீரிஸ் அவர்கள், சில காட்சிகளில் எப்படியெப்படி நடிக்கவேண்டும் என்பதை நடித்துக் காட்டினார். இது கூடப் பிழை என்பது பின்னர் தான் எனக்குத் தெரியவந்தது.

எல்லாம் முடிந்து ஹொசாரியோ பீரிஸ் அவர்கள் புறப்பட்டதும், ஜோக்கிம், றொனால்ட் (எம். ஏ. ஆர். பர்னாந்து) நான், மற்றும் சிலர் அவரைச் சூழ்ந்துகொண்டு அவர் கூறும் அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டே சென்றோம்.

''இதென்ன, வில்லனா நடிக்கிறதுக்கு ஒரு லெக்டோஜன் பேபி'யைப் போட்டிருக்கு,.'' என்று அவர் அன்று கேட்டது இன்றும் எனக்கு நன்றாக ஞாபகத் திலிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது, அந்த நாட்களில், கே. வி. எஸ். மோகன் நல்ல குண்டாக, கன்னங்கள் உப்பி, பால்வடியும் குழந்தைத் தனமான முகத்தோடு காட்சியளிப்பார். இதைத்தான் ஹொரசாரியோ பீரிஸ் அவர்கள் கிண்டலாகக் குறிப்பிட்டார்.

## FINAL REHERSAL

நாடகம் மேடையேறுவதற்கு முதல்நாள். இறுதி ஒத்திகை. நடிகர்கள் எல்லோரும், மறுநாள் நாடகத்தில் தாம் உடுத்தவேண்டிய உடைகளையும் கொண்டு வரும்படி உத்தரவு. Dress Rehersal. அதாவது வேஷத்துக்கான உடைகளுடன் ஒத்திகை.

மாணவர்களெல்லாம், தமது தாய்மாரின், சகோதரி களின் விதம்விதமான கூறைச்சேலைகளுடன் வந்திருந் தார்கள். அரச நாடகம் என்பதால், ஆண் பாத்திரங் களைத் தாங்கி நடிப்பவர்கள் எல்லோருக்கும் இடுப்பிற்குக் கீழே இதுவே உடை.

நானும் அம்மாவின் சரிகைச்சேலை ஒன்றுடன் வந்திருந் தேன். மறு நாள் எமக்கெல்லாம் 'மேக் அப்' போடுவது லெனின் மொறாயஸ் என்று கதை அடிபட்டது. அந்த நாட்களில் 'மேக் அப்' என்பது லெனின் மொறாயஸ்ஸி னால் மட்டுமே முடிந்த ஒரு சாதனை என்பது, எமது சிறிய வட்டத்திற்குள் நிலவி வந்த அசைக்க முடியாததொரு நம்பிக்கை.

## லெனின் மொறாயஸ்

நண்பர் லெனின் மொறாயஸ்ஸைப் பற்றி இங்கே சற்றுக் கூறித்தான் ஆக வேண்டும்.

லெனின் மொறாயஸ், சென். பெனடிக்ஸ் கல்லூரியில் 5ஆம் 6ஆம் வகுப்புவரை எங்களுடன் படித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், சினிமா மோகத்தால் தென்னிந்தியாவுக்குச் சென்று அங்கு சிறிது காலம் 'மேக் அப்' பழகி வந்தவர். அந்த நாட்களில் தென்னிந்திய திரை உலகில் பிரபலமாக இருந்த 'ஹரிபாபு' என்ற மேக்கப் நிபுணரிடம் ஒப்பனைக் கலையைத் தான் பழகியதாக அவர் கூற நான் கேட்டிருக்கிறேன். பின்னர், சிலோன் ஸ்டுடியோவில் உதவிப் படப்பிடிப்பாளராக இருந்து, படப்பிடிப்பாளராக, உயர்ந்து, டைரெக்டராகி ,சிங்கள சினிமா உலகில், அதிக வசூலைப் பெற்றுக் கொடுக்கும் டைரெக்டர் என்ற பெயரைப் பெற்று, புகழேணியின் உச்சிக்கே சென்று, பல பிரச்சினைகளுக்கிடையே, நீண்ட நாள் சுகயீனத்தின் பின், இப்போது அநாமதேயமாகி விட்டார்.

இவரது தந்தையார், புகைப்படக் கருவிகளின் விற்பனை நிலையமும், ஸ்டுடியோவும் வைத்திருந்தவர். பெரிய கம்யூனிஸவாதி. அதனாற்றான், தனது மகனுக்கு 'லெனின்'. என்று பெயரிட்டாராம்.

## லெனின் போட்ட மேக்கப்

இறுதிநாள் ஒத்திகைக்கு லெனின் மொறாயஸ் வந்திருந்தார். ஒத்திகை ஆரம்பமாவதற்கு முன் இருவரும் கதைத்துக் கொண்டிருந்தோம்.

''மச்சான், உனக்கென்ன ரோள்!'' என்று கேட்டார் லெனின்.

''கிழவன் ரோள்'',. என்றேன்.

''தாடி வைக்க வேணுமா?''

''வச்சா நல்லது''.

''அப்போ நாளைக்கு நேரத்தோட வந்திரு. நல்ல ஒரு மேக்அப் போட்டு விடுறன்'', என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பாத்திரத்திற்குத் தாடி தேவைதானா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அரச நாடகத்தில், கிழவன் என்றால் தாடியோடுதான் வரவேண்டும் என்பது என் யூகம்.

மறுநாள், மாலை $6\frac{1}{2}$ மணிக்கு ஆரம்பமாக இருந்த நாடகத்தில் நடிப்பதற்காக 4 மணிக்கே மண்டபத்திற்கு வந்து சேர்ந்து விட்டேன். $4\frac{1}{2}$ மணியளவில் லெனின் மொறாயஸ், வந்து சேர்ந்தார். ஒப்பனைச் சாதனங் களடங்கிய பெட்டியைத் தனது உதவியாளர் தூக்கிவர, லெனின் கம்பீரமாக முன்னே வந்தார். என்னருகே வந்ததும்,'' ஜோர்ஜ் ரெடியா?'' என்றார். நான் தலையசைத்தேன்.

மேடைக்குப் பின்னால், ஒப்பனை அறையாக மாற்றப் பட்டிருந்த வகுப்பறைக்குச் சென்றோம். நாடகத்தில் நடிக்கும் ஏனைய மாணவர்களும் லெனினைச் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள்.

''சேர்டைக் கழற்றிவிட்டு இப்படி உட்கார்'', என்றார் லெனின். நானும் அப்படியே செய்தேன்.

உதவியாளர், ஒப்பனைச் சாதனங்களடங்கிய பெட்டியைத் திறந்து, பல பொருட்களை வெளியே எடுத்து வைத்தார்.

இந்த உதவியாளரும், எனது வகுப்பில் படித்துக் கொண்டிருந்த மாணவர்தான். பெயர் நடராஜா.

முதல்நாள் லெனின் கூறிய அறிவுரைகளின்படி, இரண்டு மூன்று முறைக்குமேல் சவர்க்காரம் பூசிக் குளித்து, தலையிலும் முகத்திலும் எண்ணெய்ப்பசையே இல்லாமல் வந்திருந்தேன். அது மட்டுமா, முகத்தில் ஆங்காங்கே அரும்பி இருந்த மெல்லிய மயிர்க்கற்றைகளையும், அப்பாவின் 'ரேச'ரினால் வழித்துக்கொண்டு வந்திருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக நடிகர்கள் சூழ்ந்து நிற்க ஒப்பனை ஆரம்பமாயிற்று.

முகமெங்கும் 'ஸ்பிரிட்கம்'மைப் பூசினார் லெனின்.

முதற்முறை சவரம் செய்த முகத்தில், 'ஸ்பிரிட் கம்' பட்டதும், எரியெரியென்று எரியத் தொடங்கியது.

கறுப்பு வெள்ளை 'கிரேப் ஹெயர்'களைக் கலந்து என் முகத்தில் ஒட்டத் தொடங்கினார் லெனின் மொறாயஸ்.

நேரம் போய்க் கொண்டிருந்தது.

இப்போது, நாடகத்தில் நடிக்கும் ஏனைய மாணவர்கள், சேர்ட்டைக் கழற்றிக் கொண்டு, ஒப்பனைக்குத் தயாராக எம்மைச் சுற்றி நின்றார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் நடராஜாவே 'மேக்கப்' போட்டுக் கொண்டிருந்தார். இதில் சிலருக்கு ஆத்திரம்.

''ஏழாவது காட்சியில் வரும் ஜோர்ஜுக்கு இப்போதே 'மேக்கப்' நடக்கிறது. ஆரம்பக் காட்சிகளில் வரும் எங்களுக்கு இன்னும் 'மேக்கப்பே'பே தொடங்கவில்லை,''. என்று சிலர் அங்கலாய்த்துக் கொண்டார்கள். எல்லோருக்கும் லெனின் கையால் ஒப்பனை செய்து கொள்ள முடியவில்லையே என்ற ஆத்திரம். சிலர், நடராஜாவிடம் தமது முகங்களைக் கொடுக்காமல், எனது ஒப்பனை முடியும்வரை காத்திருந்தார்கள்.

எனக்கோ வெளியில் காட்டிக் கொள்ள முடியாத வேதனை. ஏனடா தாடி வைக்க வேண்டுமென்று சொன்னோமென்றிருந்தது. 'ஸ்பிரிட் கம்' மின் எரிச்சல் ஒரு புறம். பல்லாயிரக்கணக்கான சிறிய பூச்சிகள் முகமெங்கும் ஓடித்திரிவது போன்றதோர் அருவருப்பு ஒரு புறம். சாதாரணமாக வாயைத் திறக்க முடியாமல் முகமெங்கும் ஏதோ கவ்விப் பிடித்துக் கொண்டிருப்பது போன்றதோர் உணர்வு ஒரு புறம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாறு நாடகம் தொடங்குமுன் என் 'மேக்கப்' முடிந்தது.

## என்ன ஆச்சரியம் நடித்தே விட்டேன்.

நாடகம் தொடங்கி, நான் நடிக்க வேண்டிய காட்சியும் வந்தது.

நான் வரவேண்டிய நேரத்தில், சரியாக மேடைக்கு வந்தேன். என்ன ஆச்சரியம். இத்தனை நாட்களாக என்னைப் பிடித்தாட்டிக் கொண்டிருந்த பயம் எங்கு போனதோ தெரியவில்லை.

பார்வையாளர்களைப் பார்த்தேன். இன்னாரென்று ஒருவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. விளக்குகள் அணைக்கப்பட்டு, மங்கிய இருளில், வெறும் தலைகள் மட்டும் தெரிந்தன.

பேச வேண்டிய வசனங்களைத் தெளிவாகவும், உற்சாகத்துடனும் பேசினேன். மேடையில், பலர் முன்னிலையில் எந்தவிதக் கூச்சமும் இல்லாமல், சர்வ சாதாரணமாக நான் நடிப்பது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. காட்சி முடிவில் கரகோஷமும் கிடைத்ததென் றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அக்காட்சி முடிந்து பக்கவாட்டில். மேடையைவிட்டுக் கீழிறங்கியதும், பல நண்பர்கள் வந்து கைகுலுக்கி என்னைப் பாராட்டி உற்சாகப்படுத்தினார்கள்.

அதன்பின் வந்த காட்சிகளில் எப்படி நடித்திருப்பேன் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

## மனோன்மணி - கதைச் சுருக்கம்

பாண்டிய நாட்டு மன்னன் சீவகன். அவனது செல்வப் புதல்வி மனோன்மணி. வாணி, மனோன்மணியின் உயிர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி. மனோன்மணி சேரநாட்டரசன் புருஷோத்தமனைக் கனவிற்கண்டு காதலிக்கிறாள். அவள் தோழி வாணி, சீவகனின் மெய்க்காப்பாளன் நடராஜனைக் காதலிக்கிறாள்.

சீவகனின் மந்திரி குடிலன்; நயவஞ்சகன், மன்னனுக்கு நன்னம்பிக்கை உள்ளவன் போல நடிப்பவன் அவன், மனோன்மணியைத் தன்மகன் பலதேவனுக்கு மணமுடித்து, பாண்டிய நாட்டையும் தான் கவர்ந்து கொள்ளச் சூழ்ச்சி செய்கிறான்.

மனோன்மணி, தான் கொண்ட காதல் காரணமாக நோய்வாய்ப்படுகிறாள். சீவகனின் குலகுருவாகிய சுந்தர முனிவர் இதை உணர்ந்து, மனோன்மணியைப் புருஷோத்தமனுக்கு மணமுடித்து வைக்கும்படியும், அந் நோக்குடன் நடராஜனைப் புருஷோத்தமனிடம் தூது அனுப்புமாறும் சீவகனை வற்புறுத்துகிறார்.

எவ்விஷயத்தையும் குடிலனுடனே கலந்தாலோசிக்கும் இயல்பு உடைய சீவகன், முனிவர் சொன்னவற்றையும் அவனுக்குச் சொல்லுகிறான். நடராஜன் தூது சென்றால் தன் எண்ணம் நிறைவேறாது எனக் கருதிய குடிலன், தன் மகன் பலதேவனைத் தூது அனுப்பி மன்னவனை இணங்க வைக்கிறான்.

சேரமன்னன் புருஷோத்தமனும். மனோன்மணியைக் கனவிலே பல நாள்களாகக் கண்டு காதலிக்கிறான். காதல் வேதனையை மறக்க போர் வராதா என எண்ணுகிறான். இத்தருணத்தில் பலதேவன் தூது வருகிறான். அவன் தன் தந்தையின் சூழுரைகளை மனத்தில் வைத்து, பாண்டியனுக்குரிய நன்செய் நாட்டைத் திரும்பத்தரும்படியும் மறுத்தால் போருக்கு ஆயத்தம் பண்ணும்படியும் கூறுகிறான். மனோன்மணியை நீங்கள் மணந்தால் போர் நீங்கி, பாண்டி நாடும் தங்களுக்காகும் எனக்கூறி மேலும் அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினத்தைக் கிளறுகிறான் பலதேவன். தன்மான உணர்ச்சியால் தூண்டப்பட்ட புருஷோத்தமன், பாண்டிய நாட்டின் மேற்படையெடுக்கிறான்.

முதல்நாள் போரிலே குடிலனது சூழ்ச்சியால் தோல்வியடைந்த சிவகன், தான் மறுநாட்போரில் இறக்க நேரிடலாம் என எண்ணி மனோன்மணியைப் பலதேவனுக்கு அன்றிரவே மணமுடிக்க ஆயத்தம் செய்கிறான். மனோன்மணியும் தந்தையின் விருப்பத்திற்காக அவ்விவாகத்திற்கு இணங்குகிறாள்.

மந்திரி குடிலனோ, அன்றிரவு சேரனது பாசறையை அடைந்து சீவகனைப் பிடித்துத் தருவதாகவும், பிரதியுபகாரமாகத் தன்னைப் பாண்டிய நாட்டுக்கு மன்னனாக்கும்படியும் வேண்டுகிறான். புருஷோத்தமன் குடிலனைக் கைது செய்து பாண்டிய மன்னன் சிவகனிடம் கொண்டு வருகிறான். அங்கு, தான் கனவிற் கண்ட காதலியை மணவறையிலே காண்கிறான். மனோன்மணியும் தன்வயமிழந்து புருஷோத்தமனுக்கு மாலை சூடுகிறாள்.

## மனோன்மணியில் நடித்த மாணவர்கள்

மனோன்மணி - எஸ். மோகனதாஸ், சிவகன் - ஜோக்கிம் பர்னாந்து, குடிலன் - இக்நேஷியஸ் மொறாயஸ். புருஷோத்தமன் - அமிர்தராஜா அப்பையா, சுந்தர முனிவர் - நா. கந்தசாமி, வாணி - யுகேரியஸ் பர்னாந்து, நாராயணன் - மில்ரோய் தம்பிநாயகம், பலதேவன் - கே. வி. எஸ். மோகன், நடராசன் - இ. கோமஸ், சகடன் - ஜோர்ஜ் சந்திரசேகரன், அருள்வரதன் - அ. ராஜ் பர்னாந்து, சேவகர் - அன்ரனி லோரன்ஸ், பிரான்சிஸ் பர்னாந்து, எட்வேர்ட் பொன்னையா, முருகன் - ஜோசப் கர்வாலியோ, செவிலியர் - எஸ். வி. ஆர். வேதநாயகம், எஸ். செல்வரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1957 ஆம் ஆண்டு தமிழ்விழா நாடகம் 'ஒரே ஆசை'

அடுத்த ஆண்டு, அதாவது 1957ம் ஆண்டு தமிழ் விழாவில் அரங்கேற்றுவதற்காக 'ஒரே ஆசை' என்ற நாடகம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த நாடகத்தை எனது வகுப்பு மாணவரான இக்நேஷியஸ் மொறாயஸ் எழுதியிருந்தார். இதை சில்லையூர் சி. ஆர். யோசப் என்ற ஆசிரியர் நெறிப்படுத்தினார். இதில் நடித்த மாணவர்கள், மங்களம் - எஸ். மோகனதாஸ், சுந்தர் - ஜோக்கிம் பர்னாந்து, சுசீலா - யுகேரியஸ் பர்னாந்து, வேதாசலம் பிள்ளை - இக்நேஷியஸ் மொறாயஸ், சேகர் - நா. கந்தசாமி, செல்லத்துரை - ஹிலேரியஸ் பர்னாந்து, மாயாண்டி - தெ. ஈஸ்வரன், சீதாராம் - கிறிஸ்தோபர், மாணிக்கம்பிள்ளை - ஜோசப் கர்வாலியோ, பிரயாணி-தியாகராஜா, நல்ல கண்ணு - ஜோர்ஜ் லியோன், சேரிவாகி-எட்வேர்ட் பொன்னையா, வேலாயுதம்பிள்ளை-ஜோர்ஜ் சந்திரசேகரன், பிச்சைக்காரன் - ரொனால்ட் பர்னாந்து, கதிரவேலு - பிரான்சிஸ் பர்னாந்து சேரிவாசி-அன்டனிராஜ் பர்னாந்து.

அன்று என் வகுப்பில் படித்து என்னுடன் நாடகத்தில் நடித்த தே. ஈஸ்வரன் என்ற சிறுவனே இன்று, பெரிய தொழிலதிபராகவும் மொறிசியல் நாட்டின் இலங்கைப் பிரதிநிதியாகவும் சிறந்த மேடைப் பேச்சாளனாகவும் உள்ள தே. ஈஸ்வரன் அவர்கள் என்று நினைக்கும்போது பெருமையாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறது.

இந்த ஆண்டு தமிழ்விழா நாடகத்திலும் நானும் ஜோக்கிமும் நடித்தோம்- இதிலும் ஜோக்கிமுக்கு ஒரு முக்கிய பாத்திரம். இளைஞர் வேடம். எனக்குச் சிறிய வேடம். அதுவும் வயோதிப வேடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1956 ஆம் ஆண்டு, 16 வயதில் பள்ளிக்கூட நாடகத்தில் வயோதிப பாத்திரத்தில் மேடையேறிய நான், தொடர்ந்து நடித்த எல்லா மேடை நாடகங்களிலும் வயோதிபப் பாத்திரங்களிலேயே நடித்து வந்தேன். கதாநாயகனாக எந்த நாடகத்திலுமே நடித்ததில்லை. ஆனால் எனது 40வது வயதிலே, ஒரு நாடகத்தில் கதாநாயகனாக நடித்தேனென்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். அதைப்பற்றி உரிய நேரம் வரும்போது கூறுகின்றேன்.

## மாஸ்டர் ராம சுந்தரலிங்கம்

ஜோக்கிமும் நானும், எங்கள் இரண்டாவது பள்ளிக்கூட நாடகத்தில் வெற்றிகரமாக நடித்து முடித்த இரண்டொரு நாட்களுக்குப்பின், ஒரு திங்கட்கிழமை மதிய போசன இடைவேளையின்போது, ஜோக்கிம் என்னை அவசரமாகத் தேடிக்கொண்டு வந்தான்.

நாம் இருவரும் ஒரே தரத்தில் படித்தாலும், ஜோக்கிம் வர்த்தகப்பிரிவிலும், நான் விஞ்ஞானப் பிரிவிலும் பயின்றதனால் வெவ்வேறு வகுப்பறைகளிலேயே கற்று வந்தோம்.

'ஜோர்ஜ், எங்கள் வகுப்புக்குத் தமிழ் எடுக்க ஒரு புதிய மாஸ்டர் வந்திருக்கிறார். இந்தியாவில் படித்தவர். 'கிரேஜுவேட்'. இந்தியாவில் நிறைய நாடகங்களிலெல்லாம் நடித்தவராம். எங்கள் தமிழ் விழா நாடகத்தைப் பார்த்தாராம். நன்றாக நடித்தோமாம். தானும் ஒரு நாடகம் போடப்போகிறாராம். என்னையும் நடிக்கக் கேட்டார். நான் உன்னைப் பற்றியும் சொன்னேன். கூட்டிவரச் சொன்னார். இன்று மாலை ஸ்கூல் விட்டதும் எங்கும் போய்விடாதே, நான் கூட்டிக்கொண்டு போய் மாஸ்டருக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்' என்றான்.

அன்று மாலை, ஜோக்கிமுடன் சென்று புதிய மாஸ்டரைச் சந்தித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பார்வையிலேயே, ஒரு தென்னகத் திரைப்படக் கதாநாயகனாகத்தான் அவர் எனக்குத் தோற்றமளித்தாரே தவிர, ஓர் ஆசிரியராக அவர் எனக்குத் தோன்றவில்லை. அதுவரை காலமும், சற்று வயதான, கண்டிப்பான ஆசிரியர்களையே பார்த்துப் பழகிய எனக்கு இந்தப் புதிய இளைஞர், ஓர் ஆசிரியராகவே தோன்றவில்லை.

அப்போது அவருடன் இன்னும் சில மாணவர்களும் இருந்தார்கள். எங்கள் எல்லோரிடமும் மாஸ்டர் சுந்தரலிங்கம், நகைச்சுவை ததும்ப சிரித்துச் சிரித்துப் பேசினார். அவர் பேச்சில் அப்பட்டமான இந்திய வாடை வீசியது.

மாணவர்களாகிய எங்களைத் தம்முடன் சமதையாக வைத்துப் பேசியது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. எடுத்த எடுப்பிலேயே எனக்கு அவரைப் பிடித்துவிட்டது.

ஒரு பழைய ஆசிரியத் தலைமுறை மாறிப் புதியதோர் ஆசிரியத் தலைமுறை உதயமாகிக் கொண்டிருப்பதை அன்று நான் உணரவில்லை. ஏதோ ஒரு நல்ல மாஸ்டர் பள்ளிக்கூடத்திற்கு வந்திருக்கிறார் என்றெண்ணிச் சந்தோஷப்பட்டேன்.

மாஸ்டர் சுந்தரலிங்கம், தான் மேடையேற்ற இருக்கும் நாடகம் பற்றி சிறிது விளக்கிக் கூறினார்.

கிறேன்பாஸ் சென். ஜோசப்ஸ் கல்லூரி கட்டிட நிதிக்காக, நான்கு ஓரங்க நாடகங்கள் மேடையேற்றப்பட இருப்பதாகவும், அதில் தானும் ஒரு நாடகத்தைத் தயாரித்துத்தர வாக்களித்திருப்பதாகவும் கூறினார். அத்துடன், தான் இந்தியாவில், கல்லூரி நாட்களில் நடித்த நாடகப் பிரதிகள் பல தன் கைவசமிருப்பதாகவும், அதில் சுமார் 45 நிமிடங்கள் நடிக்கக்கூடிய 'கல்யாணமாமில்ல கல்யாணம்' என்ற நாடகத்தையே மேடையேற்றத் தான் தீர்மானித்திருப்பதாகவும், இது ஒரு முழுநீள நகைச்சுவை நாடகமென்றும், இதில் எம்போன்ற மாணவர்களுடன் தனது நண்பர்கள் சிலரும் நடிக்க இருப்பதாகவும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாளையிலிருந்து ரிஹர்சல் வரமுடியுமா?' என்று கேட்டார். நானும் சம்மதித்தேன்.

மறுநாள் ஒத்திகைக்குப் போனபோது, எனக்கொரு பாத்திரம் தரப்பட்டது. இந்திய பிராமணத் தமிழிலே பேச வேண்டிய பாத்திரம். சற்று வயதான பாத்திரம். என்றாலும் மாஸ்டர் சுந்தரலிங்கத்துடன், அவரது நண்பராக நடிக்கும் பாத்திரம். அத்துடன் நாடகத்தில் ஆரம்பம் முதல் கடைசிவரை நடிக்கும் பாத்திரம் எனக்கோ சந்தோஷம் பிடிபடவில்லை.

ஆனால் ஒத்திகை முடிந்தபின் மாஸ்டர் சுந்தரலிங்கம் சொன்னார்.

'இந்தப் பாத்திரத்தில் நடிக்க, என்னுடைய நண்பர் ஒருவர் வருவார். அவர் வர இன்னும் இரண்டொருநாட்கள் செல்லும். அதுவரை நீர் இந்தப் பாத்திரத்தை ஒத்திகை பார்க்கலாம்'.

எனக்குச் 'சப்' பென்று போய்விட்டது. 'நாமென்ன வெறும் ஒத்திகை நடிகன்தானா? அந்தப் பாத்திரத்தில் நடிக்க இருக்கும், மாஸ்டரின் நண்பர் வந்ததும் நானென்ன செய்வது'?

ஒத்திகை முடிந்து வீடு திரும்புகையில், 'நான் இனி ஒத்திகைகளுக்கு வரமாட்டேன்,' என்று ஜோக்கிமிடம் கூறினேன்.

'மாஸ்டர் கூறும் நண்பர் வருவாரோ தெரியாது. நீ கட்டாயம் ஒத்திகைக்கு வா,' என்றான் ஜோக்கிம்.

'வரமாட்டாரென்று என்ன நிச்சயம்?'

இப்படியே, வீடு செல்லும்வரை எம் இருவருக்கு மிடையே ஒரே விவாதம்.

மறுநாளும் ஒத்திகைக்குப் போனேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஸ்டரின் நண்பர் வரவில்லை.

இறுதிவரை அவர் வரவே இல்லை.

அந்தப் பாத்திரத்தில் நானே நடித்தேன்.

ஆனால் வேறொரு பாத்திரத்தில் நடிப்பதற்காக திரு. சூசைதாசன் என்றொருவர் வந்திருந்தார். நாடகத்திலும் நடித்தார்.

அவருக்கு, மாஸ்டரின் வயதிருக்கும். அதாவது சுமார் பத்து வயது எங்களைவிட 'சீனியர்' என்று சொல்லலாம். கறுத்த நிறம். எப்போதும் முகத்திலே ஒரு புன்னகை. 'அப்பாவி'ப் பாத்திரங்களில் நடிப்பதற்குகந்த தோற்றம். உடல் எந்த அளவிற்குக் கறுப்பாக இருந்ததோ அந்த அளவுக்கு வெள்ளையான மனம். மாஸ்டரின் நண்பர் என்பதால் அவரையும் 'மாஸ்டர் சூசைதாசன்', என்றே நாம் அழைத்தோம். அப்போது அவர் எங்கோ ஒரு நிறுவனத்தில் கணக்காளராகக் கடமையாற்றி வந்ததாக ஞாபகம். இந்த மாஸ்டர் சூசைதாசன்தான், பின்னர், மன்னர் மாவட்ட, தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினராக வருவார் என்று நாம் அப்போது கனவு கூடக் கண்டதில்லை.

1958ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, கே. சி. வை. எம். ஏ. மண்டபத்தில் நான்கு ஓரங்க நாடகங்களில் ஒன்றாக எமது நாடகமும் மேடையேறியது.

எமது குழுவிற்கு, 'கொழும்பு அமெச்சூர் நாடகக் குழுவினர்' என்று ராம். சுந்தரலிங்கம் அவர்கள் பேர் சூட்டி இருந்தார்.

கே. சி. வை. எம். ஏ மண்டபம், எமது கல்லூரிக்குப் பக்கத்திலேயே இருந்தது. இந்தச் சிறிய மண்டபம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாண வரவேற்பு மண்டபமாகவும், கத்தோலிக்க இளைஞர் சங்கக் கூட்டங்கள் நடைபெறுவதற்குமாகவே பயன்பட்டு வந்தது. மண்டபத்தில் ஒரு சிறிய மேடை இருந்தாலும், நாடகங்களை மேடையேற்றுவதற்கு அது அவ்வளவு உகந்ததாக இருக்கவில்லை.

## கல்யாணமாயில்ல கல்யாணம்

முதன் முறையாக, ஒரு பொதுமேடையில் ஏறப் போகிறோம் என்ற உற்சாகத்துடன், மாஸ்டர் சுந்தரலிங்கத்தையும், மாஸ்டர் குசைதாசனையும் தவிர எமது குழுவைச் சேர்ந்த எல்லோரும் கே. சி. வை. எம். ஏ மண்டபத்திற்கு 4 மணிக்கே வந்து சேர்ந்தோம். ஆனால் உள்ளூர எல்லோருக்கும் ஒரு பயம். எமது நாடகத்துடன் அன்று மேடையேற இருந்த ஏனைய நாடகங்களில் நடிப்பவர்களெல்லாம் அன்று கொழும்பு நாடக மேடைகளில் பிரபலமானவர்கள்.

விளம்பரத் துண்டுப் பிரசுரத்தின்படி எமது நாடகம் மூன்றாவதாக இடம்பெற இருந்தது. ஆனால் எமது நடிகர்கள் எல்லோரும் வேளைக்கே மண்டபத்திற்கு வந்து சேர்ந்து விட்டதாலும், எமது நாடகத்திற்குரிய 'மேக் அப்' சாதனங்களெல்லாம், மாஸ்டர் சுந்தரலிங்கம் கொண்டு வந்திருந்ததாலும், எமது குழுவைச் சேர்ந்தவர்களெல்லாம் வேளைக்கே ஒப்பனையை முடித்துக் கொண்டு விட்டோம். நாடக விழா தொடங்கும் வேளையில் எமது குழுவே தயார் நிலையில் இருந்ததால், விழா அமைப்பாளர்கள், எமது நாடகத்தை முதலில் ஆரம்பிக்கச் சொன்னார்கள். உடனே மாஸ்டர் சுந்தரலிங்கம் ஒப்புக் கொண்டு விட்டார். எனக்குத் 'திக்' என்றது. பண்பட்ட நடிகர்களெல்லாம் எமக்குப் பின்னர் நடிக்க இருக்கிறார்கள். இவர்களெல்லாம் எமது நடிப்பைப் பார்த்து என்ன நினைக்கப் போகிறார்களோ என்று மனத்தில் ஓர் அச்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மூன்றாவது நாடகமாகத்தானே எமது நாடகத்தைப் போட்டிருக்கிறார்கள். ஏன் நீங்கள் முதலில் நடிப்பதற்கு ஒப்புக் கொண்டீர்கள்' என்று மாஸ்டரிடம் கேட்டேன்.

'முதலில் நடித்தாலும் நாம் தான் நடிக்க வேண்டும். கடைசியில் நடித்தாலும் நாம் தான் நடிக்க வேண்டும். கதையை விட்டுவிட்டு மேடைக்கு வா; என்று அவசரப் படுத்தினார் மாஸ்டர். ஏனென்றால் அவரும் நானும்தான் முதல் காட்சியில் தோன்ற வேண்டும்.

நாடகம் ஆரம்பமாகி முடிந்தது. இடையிடையே ரசிகர்கள் சிரித்த சிரிப்பு இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ரசிகர்களின் சிரிப்பொலி கேட்டு, தொடர்ந்து மேடையேறப்போகும் நாடகங்களுக்காக ஒப்பனை செய்து கொண்டிருந்த 'பெரிய' நடிகர்கள் பலர், அப்படி ரசிகர்கள் சிரிப்பதற்கு மேடையில் என்னதான் நடக்கிறதென்று எட்டியெட்டி மேடையைப் பார்த்ததும் இன்னும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது.

எமது நாடகமும் முழு நீள நகைச்சுவை நாடகம். அதுவும் தமிழ் நாட்டில் பல மேடைகளில், மாஸ்டர் சுந்தரலிங்கமும் அவரது நண்பர்களும் நடித்து Applause வாங்கிய நாடகம். அன்று நடித்த எமது மாணவ நடிகர்களும் மாஸ்டர் சுந்தரலிங்கத்தின் நெறியாள்கையில் நன்றாகவே நடித்தார்கள்.

நாடகம் முழுவதும், சுமார் 45 நிமிடங்களாக சிரித்து மகிழ்ந்த ரசிகர்கள், எமது நாடக முடிவில் பலத்த கரகோஷம் செய்து தமது பாராட்டைத் தெரிவித்தார்கள்.

எமது நாடகத்தைத் தொடர்ந்து வந்த மூன்று நாடகங்களுமே சீரியசான நாடகங்கள், அந்தக் காலத்து வீராவேச வசனங்கள் நிறைந்தவை. ஒன்றுமே எடுபட வில்லை. இதற்கான காரணத்தைப் பின்னர்தான் சரியாகப் புரிந்து கொண்டேன். எமது நாடகத்தைத் தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையேற்றப்பட்ட மூன்று நாடகங்களும் 'சோடை' போனதற்கு, அந்த நாடகங்கள் தரமற்றவை என்பதல்ல காரணம்.

ரசிகர்களைச் சிரிக்க வைப்பது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பதை நகைச்சுவை நடிகர்கள் அறிவார்கள். அதுவும் அறிமுகமில்லாத நடிகர்கள் ரசிகர்களைச் சிரிக்க வைத்து விட்டாலோ, அதற்குப் பின்னர், அந்த ரசிகர்களை மீண்டும் 'சீரியசான' ஒரு மன நிலைக்குக் கொண்டுவருவது மிக மிகக் கஷ்டமான காரியம்.

அன்று மேடையேற்றப்பட்ட நான்கு நாடகங்களிலும், ஒரே ஒரு நகைச்சுவை நாடகமானது எமது நாடகத்தை முதலில் மேடையேற்றியது எவ்வளவு பெரிய தவறென் பதைப் புரிந்து கொள்வதற்கு இந்த நாடக விழா எனக்கு உதவியது.

இப்படியாக, மூன்று நான்கு நாடகங்கள் மேடையேற்றப்படும் நாடக விழாக்களில், முதலில் 'சீரியஸ்' நாடகங்களை மேடையேற்றிக் கடைசியாகவே நகைச்சுவை நாடகத்தை மேடையேற்ற வேண்டும். இந்தப் பாடத்தை நேரடி அனுபவத்தின் மூலம் எனக்குக் கற்றுத் தந்தது இந்த நாடக விழா.

## எழுதாத நாடகங்கள்

இதன் பின்னர், ராம் சுந்தர் அவர்கள் (மாஸ்டர் சுந்தரலிங்கம் தனது பெயரை இப்படிச் சுருக்கி வைத்துக் கொண்டார்.) பல நகைச்சுவை நாடகங்களை மேடையேற்றினார். இவற்றிலெல்லாம் ஜோக்கிமும் நானும், ஏனைய நண்பர்களும் நடித்தோம்.

நாடக விழாவில் நாம் நடித்த 'கல்யாணமாமில்ல 'கல்யாணம்' என்ற நாடகம்தான் நாம் 'ஸ்கிறிப்ட்' என்று ஒன்றை வைத்துக் கொண்டு வசனங்களைப் பாடமாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திகை பார்த்து நடித்த நாடகம். அதன் பின்னர் நடித்த நாடகங்களுக்கெல்லாம் ''ஸ்கிறிப்'டும் இல்லை, ஒத்திகையும் இல்லை. மாஸ்டர் சொல்லும் மூலக் கதைக்கேற்றபடி நாங்களாகவே மேடையில் வசனங்களை உருவாக்கி நடித்தோம்.

1958 ஆம் ஆண்டு, நான் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து, கல்லூரியிலிருந்து விலகி, வீட்டில் சும்மா இருக்கத் தொடங்கிய வேளை.

ராம் சுந்தர், யாராவது பையனிடம் கடிதம் கொடுத்தனுப்புவார் 'நாளை ரிஹர்சல், மாலை ஆறு மணிக்குப் பள்ளிக்கூடத்தில் என்னைச் சந்திக்கவும்' என்றிருக்கும்.

நானும் மறுநாள் 6 மணிக்கே போய்விடுவேன். ஆனால் என்னைத்தவிர வேறு யாரும் வந்திருக்க மாட்டார்கள். ராம் சுந்தர், நாடகம் மேடையேற்றப்படும் திகதி, இடம் போன்றவற்றையெல்லாம் சொல்லிவிட்டு, மேடையேற்றப் பட இருக்கும் நாடகத்தின் கதையைச் சொல்லுவார். அந்தக் கதையின் படி என் பாத்திரம், நாடகத்தின் முக்கிய பாத்திரமாக இருக்கும்.

அடுத்த நாள் கட்டாயமாக வேளைக்கே வந்துவிடச் சொல்லுவார். மற்ற நடிகர்களும் கட்டாயம் நாளை வந்து விடுவார்கள் என்பார். சரியென்று மறுநாள் வந்தால், என்னுடன், எங்கள் நாடகங்களில் பெண்வேஷம் தாங்கும் நண்பன் மோகனதாஸ் வந்திருப்பான். உடனே மீண்டும் நேற்று எனக்குச் சொன்ன கதையைச் சொல்லத் தொடங்குவார். ஆனால் கதை இன்று சற்று வித்தியாசமாக இருக்கும். கதையில் மோகனதாஸின் பாத்திரமும் முக்கிய பாத்திரமாக இருக்கும்.

மறுநாள் இராமச்சந்திரன் வந்து சேருவான். ஒவ்வொருவரும் புதிதாக வர வர, ராம்சுந்தர் கதையை மாற்றி மாற்றிச் சொல்லுவார். நாமும் 'கதை இப்படி இருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக இருக்கும், அப்படி இருந்தால் நன்றாக இருக்கு' மென்று எமது அபிப்பிராயங்களையும் கூறுவோம்.

நாடகம் மேடையேறுவதற்கு முதல் நாள் தான் ஜோக்கிம் வந்து சேருவான்.

இப்படியே, நாடகப் பிரதியோ, ஒத்திகைகளோ இல்லாமல், பல நகைச்சுவை நாடகங்களை மேடையேற்றி வெற்றி கண்டது எமது அமெச்சூர் நாடகக் குழு.

## குருட்டுப் பிச்சைக்காரன்

ராம் சுந்தரிடம் இன்னுமொரு விசித்திரமான பழக்க மிருந்தது. மறுநாள் மேடையேறும் நாடகமாக இருந்தாலும் கூட, யாராவது வந்து ''மாஸ்டர் உங்கள் நாடகத்தில் எனக்கும் ஒரு சந்தர்ப்பம் தாருங்களேன்,'' என்று கேட்டுவிட்டால் போதும் ''சரி, நாளைக்கு வந்து நடியேன்,'' என்று கூறி, நாடகக் கதையில் ஒரு கிளைக் கதையையே உருவாக்கி விடுவார். நடிப்பதற்குச் சந்தர்ப்பம் கேட்பவர், நடிக்கத் தெரிந்தவரா, இதற்கு முன் மேடை நாடகங்களில் நடித்தவரா, எந்தப் பாத்திரம் அவருக்குப் பொருத்தமாக இருக்கும் என்பன போன்றவை பற்றி யெல்லாம் அவர் கவலைப்படவே மாட்டார். இதனால் மேடையில் பலசிக்கல்கள் ஏற்படுவதுண்டு.

வீ. எஸ். ரத்தினம் என்றொரு நண்பர், பல நாடகங் களை மேடையேற்றியவர். பல நாடகங்களில் நடித்தவர். எங்கள் அமெச்சூர் நாடகக்குழு நாடகத்தில் நடிக்க ஆசைப் பட்டு, நாடகம் மேடையேறுவதற்கு முதல் நாள் ராம் சுந்தரிடம் வந்து கேட்டார். ராம் சுந்தரும் உடனேயே ஒப்புக் கொண்டு விட்டார். (நாடகத்தின் பெயரை இப்போது மறந்து விட்டேன்)

நாடகத்தன்று வீ. எஸ். ரத்தினம் நடிக்க வேண்டிய காட்சி வந்ததும், கிழிந்தசாரமும் பெனியனும் அணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் ஒரு தகரக் குவளையுடன், கண்களை மூடிக்கொண்டு மேடையில் தோன்றினார் ரத்தினம். அவர் மேடையில் பிச்சையெடுக்கத் தொடங்கிய மறுகணம், ரசிகர்கள் சிரிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஏன் சிரிக்கிறார்கள் என்பது முதலில் எமக்குப் புரியவில்லை. பின்னர் தான் தெரிந்தது. மேடைக்குச் செல்லும் அவசரத்தில் ரத்தினம் தான் கையில் அணிந்திருந்த கைக்கடிகாரத்தைக் கழற்ற மறந்துவிட்டார் என்று.

'இவன் என்ன வேலை பார்க்கிறான்,' என்று முணு முணுத்தபடியே ராம் சுந்தர் மேடைக்குச் சென்றார். சென்றவர் ஏதேதோ சொல்லிச் சமாளித்து, அந்தக் காட்சியில் கைக்கடிகாரத்துடன் பிச்சைக்காரன் வர வேண்டும் என்றாக்கி, உண்மையான பிச்சைக்காரனாக நடிக்க வந்த வீ. எஸ். ரத்தினத்தை, ஏமாற்றிப் பிழைக்கும் ஒரு பக்காத்திருடனாக மாற்றிக் கரகோஷத்தையும் பெற்றார்.

## கதிர்காமத்தம்பி போட்ட முதல் 'செட்'

1962 ஆம் ஆண்டு சென். பீட்டர்ஸ் கல்லூரி நிதிக்காக, சென். பீட்டர்ஸ் கல்லூரி மண்டபத்தில் அமெச்சூர் நாடகக் குழுவினர், அதாவது ராம் சுந்தர் மேடையேற்றிய 'ஊருக்கு உபதேசம்' என்ற நாடகத்தில் நான் யமனாக நடித்தேன். இந்த நாடகத்தை மேடையேற்றும் வரை, எமது நாடகங்களில் எந்த விதமான பின்னணிக் காட்சியமைப்புக்களும், அதாவது 'செட்ஸ்' போட்டதே கிடையாது. கட்டாயமாக 'செட்ஸ்' போட்டு நாடகம் மேடையேற்ற வேண்டுமென்று நான் பல சந்தர்ப்பங்களில் மாஸ்டரிடம் வலியுறுத்தி வந்தேன்.

'ஊருக்கு உபதேசம்' நாடகத்தை மேடையேற்றுவதற்கு சுமார் ஒரு வாரத்திற்கு முன், ராம் சுந்தர் என்னைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்து, ''நாடகங்களுக்கு 'செட்' போட வேண்டுமென்று நச்சரிப்பாயே, அதற்கு ஒரு நண்பர் கிடைத்திருக்கிறார். அவரிடம் போய்க் கதைப்போம் வா,'' என்றார்.

ராம் சுந்தர் குறிப்பிட்ட நண்பரைச் சந்தித்துக் கதைத்தோம். ஆறடிக்குமேல் உயரமான இவர், எப்போதும் முகத்தில் ஒரு புன்னகையைத் தேக்கி வைத்திருந்தார். எமது நாடகங்கள் சிலவற்றைப் பார்த்ததாகவும், 'செட்' போட்டு நடித்தால் எமது நாடகங்கள் மேலும் சிறப்பாக அமையும் என்றும் கூறினார். நாடகங்களில் நடிக்கவோ, நாடகங்கள் எழுதவோ அவருக்கு ஆர்வம் இருக்கவில்லை. ஆனால் நாடக மேடை நுணுக்கங்கள் பற்றித் தெரிந்து கொள்ள மிகுந்த ஆர்வம் காட்டினார். இளைஞராக இருக்கும் போதே அரசாங்க உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்று, sign board வரைவதைத் தொழில் ரீதியாகச் செய்து வந்தார். பெயர் கதிர்காமத்தம்பி.

தான் இதற்குமுன் வேறெந்த நாடகத்திற்கும் 'செட்' போட்டதில்லை என்று கூறிய கதிர்காமத்தம்பி, எமது நாடகத்திற்கு எப்படியான காட்சியமைப்புத் தேவை என்று கேட்டார்.

''பணச் செலவு அதிகமில்லாமல் இருந்தால் சரி,'' என்றார் ராம் சுந்தர்.

மேடையின் பிற்பகுதியில் ஒரு கிடுகு வேலியும், அதற்குப் பின்னால் ஒரு வாழை மரமும் வைக்கலாம் என்று தீர்மானித்தோம். அத்தோடு, நான் யமன் வேஷம் போடுவதால், நான் கையில் வைத்திருப்பதற்கு ஒரு வேலாயுதமும், தலையில் வைத்துக்கொள்வதற்கு ஒரு கிரீடமும், கைகளில் கட்டிக் கொள்வதற்கான வெண்டயங்களும் செய்து தருவதற்கு ஒப்புக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் போட்ட யமன் வேடம்

நாடகக் கதையின்படி, ராம் சுந்தர் ஒரு வீட்டு வேலைக்காரர். அந்த வீட்டில் ஓர் இளம் பெண் வேலைக் காரியாக இருக்கிறாள். இவருக்கு வேலைக்காரியின் மேல் ஒரு கண், அவளுக்கோ இவரைத் திருமணம் செய்ய விருப்ப மில்லை. ராம் சுந்தரின் நண்பன் நான். ஒரு நடிகன், ஒரு நாள் இரவு, நித்திரை வராமல் ராம் சுந்தர் தெருவில் ஒரு விளக்குடன் வந்து உட்கார்ந்திருக்கிறார். நான் நடிகனாயிற்றே. அன்றைய நாடகத்தில் யமன் வேஷம் தாங்கி நடித்துவிட்டு, வேஷத்தைக் களைய நேரமில்லாமல் யமன் வேஷத்தில் வீடு திரும்பிக் கொண்டிருக்கிறேன்.

முதலில் என்னைக் கண்டு, நான் உண்மையிலேயே யமன் என்று நினைத்துப் பயந்து ஓடுகிறார், ராம் சுந்தர். நானும் அவரைத் துரத்திப் பிடித்து, நான் யமனல்ல அவரது நண்பன்தான் என்று கூறுகிறேன். உடனே ராம் சுந்தர் தனக்கொரு உதவி செய்யும்படி கேட்கிறார். அதாவது, வேலைக்காரப் பெண்ணைப் பயமுறுத்தி தனக்கு அவளைக் கல்யாணம் செய்து வைக்கும்படி கேட்கிறார். நானும் சம்மதித்து அவருடன் போகிறேன். தான் ஏற்கனவே தயாராக வைத்திருக்கும் மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்ட தாலியையும் என் கையில் கொடுக்கிறார்.

நான் ஏற்கனவே கூறியதைப்போல அந்த நாடகத் திற்கும், நாடகப்பிரதி என்றொன்றில்லை, கதைக்கேற்ப நாமே வசனங்களை உருவாக்கிப் பேசி நடிக்கவேண்டும்.

நானும் ராம் சுந்தரும் முதன் முறையாக இந்தக் காட்சியில் நடித்துக் கொண்டிருந்தோம்,

ராம் சுந்தர் என்னை வீட்டுக்குள் அழைத்து வந்ததும், தான் நித்திரை கொள்வதைப் போல் ஒரு மூலையில் படுத்துக் கொண்டு விட்டார், மறுமூலையில் வேலைக்காரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாக நடித்த நண்பர் மோகனதாஸ் படுத்திருந்தார். ராம் சுந்தர் படுத்துக் கொண்டதும் நான் 'ஹ...ஹ... ஹஹ்ஹா; என்று பலமாக ஒரு வில்லன் சிரிப்பு சிரித்தேன். வேலைக்காரப் பெண் விழித்தெழுந்து, என்னைப் பார்த்து நடுங்கி ''யார் நீ?'' என்று கேட்டாள்.

''நான் தான் யமதர்மராஜன். நீ கல்யாணமாகாதவள் என்பதால் உன் உயிரைக் கொண்டுபோக வந்திருக்கிறேன்', என்றேன்.

வேலைக்காரி பயந்துபோய் ராம் சுந்தரை எழுப்பினாள். அப்போது தான் எழுந்திருப்பவர் போல சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்திருந்தார் ராம் சுந்தர்.

''யார் வந்திருக்கிறதின்னு பாருங்களேன்.''

''யார் அது?'' என்றார் ராம் சுந்தர்.

''நான்தான் யமன்'' என்றேன்.

''ஐயோ, எனக்கின்னும் கல்யாணம் கூட ஆகவில்ல, என்னை விட்டுவிடுங்கள்,'' என்று அழ ஆரம்பித்து விட்டார் ராம் சுந்தர்.

''உன் உயிரையல்ல, இந்தப் பெண்ணின் உயிரைத் தான் கொண்டு போக வந்திருக்கிறேன்,'' என்றேன் நான்.

''அப்படியா? அப்படியானால் பரவாயில்லை, தாராள மாகக் கொண்டு போங்கள்,'' என்று கூறிவிட்டுத் திரும்பிப் படுத்துவிட்டார் ராம் சுந்தர்.

மீண்டும் அழுதபடி ராம் சுந்தரை எழுப்பத் தொடங்கினார் மோகனதாஸ்.

ராம் சுந்தர் எழுந்து உட்கார்ந்தார்.

தன் உயிரை என்னிடமிருந்து காப்பாற்றித்தரும்படி ராம் சுந்தரிடம் கெஞ்சினாள் வேலைக்காரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி, அவரோட பேசிப் பார்ப்போம்'' என்று கூறி விட்டு எழுந்து நின்றார் ராம் சுந்தர்.

''யமனின்னு சொல்லுறீங்க...ஆனா உங்களைப் பாத்தா யமன் மாதிரித் தெரியல்லியே, ரொம்ப மெலிஞ்சி போய் இருக்கிறீங்களே,''... என்று திடீரென்று கேட்டார் ராம் சுந்தர்.

நான் இன்று போல் அன்றும் மிகவும் ஒல்லியாகத்தான் இருந்தேன்.

பயமுறுத்துவதைப் போல் உறுமல் ஒன்று உறுமினேன்.

''ஐயோ, இப்படியெல்லாம் சத்தம் போட்டுப் பயமுறுத்தாதிங்க. நீங்க ரொம்ப ஒல்லியா இருக்கிறீங் களேன்னுதான் கேட்டேன். தப்பின்னா விட்டுடுங்க,'' என்றார் ராம் சுந்தர், பயந்தவர் போல் நடித்துக் கொண்டு.

''நான் யமனின் மகன்,'' என்று திடீரென்று நான் கூறிவிட்டேன்.

''அப்படியா...ரொம்ப சந்தோஷம். அப்பா எப்படி சௌக்கியமா இருக்கிறாரா? இப்போ என்ன செய்திட்டிருக் கிறார்?'' என்று கேட்டார் ராம் சுந்தர்.

அந்த நாட்களில் இந்திய - சீனா எல்லையிலே போர் நடந்து கொண்டிருந்தது. சட்டென்று அது என் ஞாபகத்தில் வந்தது.

''அப்பா, இந்திய - சீன எல்லைக்குச் சென்றிருக் கிறார்,'' என்று கூறினேன்.

ரசிகர்களிடமிருந்து பலத்த கரகோஷம் கிடைத்தது.

வெகுவாக 'பிகு' பண்ணிவிட்டு இறுதியில் வேலைக் காரப் பெண்ணுக்குத் தாலி கட்டச் சம்மதிக்கிறார் ராம் சுந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த நேரத்தில் தாலிக்கெங்கே போவது'' என்று அங்கலாய்க்கிறார் வேலைக்காரப் பெண்.

நான் ஏற்கனவே மடியில் மறைத்து வைத்திருக்கும் மஞ்சள் கயிற்றில் கோத்த தாலியைக் எடுத்துக் கொடுக்க வேண்டும். ஏதாவது நகைச்சுவையாகச் சொல்லிவிட்டே கொடுக்க வேண்டும் என்று தோன்றியது.

''பக்கத்து வீட்டில் இப்போதுதான் அறுத்துக்கொண்டு வருகிறேன். இந்தா பிடி,'' என்று கூறிவிட்டுத் தாலியை மோகனதாஸ் கையில் போட்டேன். இதற்கும் ரசிகர் களிடையே சிரிப்பொலி எழுந்தது.

இப்படியே, நாடகக் கதைவசனமோ, ஒத்திகையோ இல்லாமல் பல நகைச்சுவை நாடகங்களை மேடையேற்றி வெற்றி பெற்றும் வந்தோம்.

## கதை வசனம் எழுதி ஒத்திகை பார்த்து மேடையேற்றிய நாடகம்

ஆனால் எனக்கோ, நாமும் மற்றவர்களைப் போல் நாடகம் எழுதி, ஒத்திகைகள் பார்த்து நாடகத்தை மேடையேற்ற வேண்டுமென்ற ஆசை. இதைப் பலமுறை ராம் சுந்தரிடம் கூறிவந்தேன், ஆனால் ராம் சுந்தரோ, நாடகம் எழுதுவதாக இல்லை. எனவே எனக்கொரு யோசனை தோன்றியது.

நாம் ஒத்திகை இல்லாமல், நாமாகவே வசனங்களை உருவாக்கி நடிக்கும் நாடகமொன்றை ஒலிப்பதிவு செய்து, பின்னர் மீண்டும் நாடகமாக எழுதி, ஒத்திகை பார்த்து நடித்தால் என்னவென்று ராம் சுந்தரைக் கேட்டேன். அவரும் சம்மதித்தார். அதன்படியே, அடுத்து நாம் மேடையேற்றிய நாடகத்தை ஒலிப்பதிவு செய்து, பின்னர் அதைக் கேட்டு நானே ஒரு நாடகப் பிரதியைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரித்தேன். பின் அதை ஒத்திகை பார்த்து, வசனங்களைப் பாடமாக்கி மீண்டும் அதை மேடையேற்றினோம்.

என்ன ஆச்சரியம்! முதல் தடவை நாம் மேடையேற்றிய போது, எந்தெந்த, 'ஜோக்'குகளுக்கு இரசிகர்கள் சிரித்தார்களோ அந்த 'ஜோக்'குகளுக்கு மறு முறை எவருமே சிரிக்கவில்லை... சிறுது நேரம் இதனை அவதானித்த ராம் சுந்தர், சில புதிய 'ஜோக்'குகளை சேர்த்துக் கொள்ளத் தொடங்கினார். இவற்றிற்கு ரசிகர்கள் சிரிக்கத் தொடங்கினார்கள். இதற்குக் காரணம், இரசிகர்கள் ஏற்கனவே நாடகத்தைப் பார்த்திருந்தார்கள் என்பதல்ல. ஏனென்றால் இந்த நாடகத்திற்கு வந்தவர்களில் முக்கால்வாசிப்பேர், இந் நாடகத்தை முன்னர் பார்க்காதவர்கள்.

இதிலிருந்து பெரியதோர் உண்மையை நான் புரிந்து கொண்டேன், அதாவது, பலமுறை ஒத்திகை பார்த்தாலும் நாடக மேடையில் வசனங்களைச் சொல்லும் போது, முதல்முறை அந்த வசனங்களைச் சொல்வதாகவே நடிகன் அவற்றைச் சொல்லவேண்டும். அப்போது தான் நடிகனுக்கும் ரசிகனுக்கும் இடையே ஒரு தொடர்பு ஏற்படும்.

ஒத்திகைகள் இல்லாமல் நாம் நாடகங்களில் நடிக்கும் போது, உண்மையாகவே நாம் வசனங்களை முதற் தடவையாகச் சொல்கிறோம். அவை நேரடியாகவே எமது மூளையிலிருந்து பிறக்கின்றன. அந்த நிமிடமே அதை நாம் சிந்தித்துச் சொல்லுகிறோம். எனவே ரசிகர்களும் அதை உடனடியாகப் புரிந்து கொள்கிறார்கள். ஆங்கிலத்தில் இதனை sponteniity என்று கூறுகிறார்கள். எந்த ஒரு நடிகன், பல ஒத்திகைகளின் பின், மேடையில் தோன்றி, தான் பாடமாக்கிய வசனங்களை முதல் தடவையாகச் சொல்வதைப்போல், சிந்தித்துச் சொல்கிறானோ அவனையே சிறந்த நடிகன் என்று கொள்கிறோம். இதுவே நடிப்பின் இரகசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாடகத்தில் நாம் பெற்ற அனுபவத்தின் பின் மீண்டும் பழைய பாணியில், அதாவது நாடகப் பிரதியோ, ஒத்திகைகளோ இல்லாமல் நாடகங்களை நடிக்கத் தொடங்கினோம்.

## வெண்ணிற ஆடை மூர்த்தி

1959 தோ 1960 தோ ஞாபகமில்லை. தன்னுடன் இந்தியாவில் ஒன்றாகப் படித்தவரும், ஒன்றாக நாடகங்களில் நடித்தவருமான நண்பர் ஒருவர் கொழும்பு வருவதாகவும், இங்கு தங்கியிருக்கும் போது எம்மோடு ஒரு நாடகத்தில் நடிப்பதற்கு விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் ராம் சுந்தர் கூறினார்.

தானும் தனது நண்பரும் பல்கலைக்கழக நாட்களில் சென்னையில் 'இரு மேதாவிகள்' என்றொரு நாடகத்தில் நடித்ததாகவும், அதையே மேடையேற்றுவோம் என்றும் சொன்னார். நாமும் சம்மதித்தோம்.

இந்த நாடகத்திற்காக அர்ச். வெனடிக்ஸ் கல்லூரி மண்டபத்தை ராம் சுந்தர் ஒழுங்கு செய்தார், டிக்கட்டுகள் அடித்து விற்பனை செய்தோம். நாடகத்திற்கு முதல் நாள், ராம் சுந்தரின் நண்பரான கிருஷ்ணமூர்த்தி வந்து சேர்ந்தார். பார்த்தால், ஏதோ தென்னிந்தியத் திரைப்பட நடிகரைப் போலக் காட்சியளித்தார். கிருஷ்ணமூர்த்தி, ராம் சுந்தரைப் போலவே நகைச்சுவையாகப் பேசி எங்கள் எல்லோரது அபிமானத்தையும் சம்பாதித்துக் கொண்டார்.

ராம் சுந்தரைப் போலவே திருவாளர் கிருஷ்ணமூர்த்தியும் ஒத்திகைகள் இல்லாமலே நடிக்கும் ஆற்றல் பெற்றிருந்ததால், மறுநாள் நாடகம் எதிர்பார்த்ததைவிட நன்றாகவே அமைந்தது. இரசிகர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள், இதே நாடகத்தை இரண்டு நாட்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றவும் திட்டமிட்டிருந்தோம். அதன்படி கொழும்பில் நாடகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையேற்றிய மறுநாள் யாழ்ப்பாணத்திற்கு ரெயிலில் புறப்பட்டோம். இந் நாடகத்திலும் திருவாளர் கிருஷ்ண மூர்த்தி நடிப்பதாக இருந்தது. ஆனால் அவரோ, தான் யாழ்ப்பாணத்துக்குப் பிளேனில் வந்து சேருவதாகக் கூறினார்.

யாழ்ப்பாணத்திற்கு நான் போனது இதுவே முதற் தடவை. கொழும்பிலேயே பிறந்து வளர்ந்து, வாழ்ந்து வந்ததால், யாழ்ப்பாணம் ஒரு விசித்திரமான இடமாக எனக்குத் தோன்றியது.

அழகழகாக வீடுகளைக் கட்டி, அவற்றிற்கு முன்னால் ஆள் உயரத்திற்கு வேலிகள் போட்டு மறைத்திருந்தது. பார்ப்பதற்கு விசித்திரமாகத் தோன்றியது. பெயர்ப் பலகைகள் எல்லாம் தனித் தமிழில் காணப்பட்டது, இன்னும் ஆச்சரியமாக இருந்தது.

ராம் சுந்தரின் வீடு, யாழ்ப்பாணத்தில் அத்தியடி என்ற இடத்தில் இருந்தது. காலையில் ரயிலை விட்டிறங்கி அங்கு போய்ச் சேர்ந்தோம். காலை உணவு, பகல் சாப்பாடு எல்லாம் அங்குதான். பிற்பகலில், நாடகம் அரங்கேற இருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். எந்த இடம் என்பது இப்போது ஞாபகத்தில் இல்லை.

நேரம் கரைந்து கொண்டிருந்தது. எமது குழுவைச் சேர்ந்த எல்லோருமே 'மேக்கப்' போட்டுக் கொண்டு நடிப்பதற்குத் தயாராகிவிட்டோம். ஆனால் திருவாளர் கிருஷ்ணமூர்த்தி வந்து சேரவில்லை. நாடகம் தொடங்க வேண்டிய நேரமான ஆறரை மணியும் பிந்திவிட்டது. எல்லோரும் திருவாளர் கிருஷ்ணமூர்த்தியின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். ஆறு நாற்பத்தைந் தாகியது. இன்னும் வரவில்லை. நாடகத்தை ஏற்பாடு செய்திருந்தவர்கள் நாடகத்தைத் தொடங்கும்படி நெருக்கத் தொடங்கி விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியாக ராம் சுந்தர் ஒரு முடிவுக்கு வந்தார். ''கிருஷ்ணமூர்த்தி வருவதாகத் தெரியவில்லை. இதற்கு மேல் நாடகத்தைத் தாமதிக்கவும் முடியாது. ரசிகர்கள் கூச்சலிடுகிறார்கள். எனவே, ஜோக்கிம், நீ கிருஷ்ண மூர்த்தியின் பாத்திரத்தைச் செய்,'' என்றார்.

''சரி,'' என்றான் ஜோக்கிம். அப்படியானால் ஜோக்கிம் நடித்த பாத்திரத்திற்கு வேறொருவர வேண்டுமே?

ஜோக்கிம் நடித்த பாத்திரத்தில் நடிக்க வேறொரு நடிகர் முன்வந்தார். அவர் நடித்த பாத்திரத்தில் நடிக்க இன்னுமொருவர், இப்படியாக ராம் சுந்தரைத் தவிர மற்ற எல்லா நடிகர்களுமே நாம் முன்னர் நடிக்காத பாத்திரங் களிலேயே நடித்தோம். இறுதியில் மிஞ்சிய ஒரு பாத்திரத்தை நீக்கிவிட்டோம்.

இப்படி நடித்தும், ரசிகர்களின் பாராட்டும் கரகோஷமும் எமக்குக் கிடைக்கத் தவறவில்லை. ஆச்சரியம் தான்!

கொழும்பு சென். பெனடிக்ஸ் கல்லூரி மேடையில் எம்முடன் நடித்து, பின்னர் யாழ்ப்பாணம் வருவதாகச் சொல்லி எம்மை ஏமாற்றிவிட்ட திருவாளர் கிருஷ்ணமூர்த்தி தான் பின்னர், ஸ்ரீதரின் வெண்ணிற ஆடை என்ற திரைப் படத்தில் நடித்து வெண்ணிற ஆடை மூர்த்தி என்ற பெயர் பெற்று, இன்று பல தென்னிந்திய திரைப்படங்களில் நடித்து வரும் மூர்த்தி.

## இலவச நாடகம்

இப்படியே கொழும்பு அமெச்சூர் நாடகக் குழுவில் பல நாடகங்களில் நடித்துக் கொண்டிருக்கும் போது. ஒரு நாள் ராம் சுந்தருக்கு ஒரு யோசனை தோன்றியது. ''பொங்கலுக்கு இலவசமாக நாடகம் ஒன்று போட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன?'' என்று கேட்டார். ''போடலாம், ஆனால் மண்டப வாடகை எப்படிக் கட்டுவது?'' என்று கேட்டேன். ''சம்பளம் எடுத்துக் கட்டி விடுகிறேன். நாற்காலிகள் வேண்டாம், நிலத்தில் பாய்களை விரித்து இரசிகர்களை அமரச் செய்வோம். நாற்காலி வாடகைக் காசு மிஞ்சும். வேண்டுமானால் இடைவேளையில் உண்டியல் குலுக்கு வோம்'', என்றார்.

இதன்படி பொங்கலன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் 'புக்' பண்ணப்பட்டது. இதற்கு விளம்பரங் களோ, துண்டுப்பிரசுரங்களோ நாம் அச்சிடவில்லை. பதிலாக குறிப்பிட்ட அளவு அழைப்பிதழ்கள் அச்சிட்டு, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தைப் பகுதிகளில் வினியோகித்தோம்.

ராம் சுந்தர், மோகனதாஸ், ஜோக்கிம், நான்— நான்குபேர், வீடு வீடாகச் சென்று இந்த அழைப்பிதழை வினியோகித்தோம். வெள்ளவத்தையில் ஒரு வீடு. கதவைத் தட்டினோம். சுமார் நாற்பது வயது மதிக்கதக்க ஒருவர் வந்து கதவைத் திறந்தார். முதலில் ராம் சுந்தர் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, ''பொங்கல் தினத்தன்று சரஸ்வதி மண்டபத்தில் ஒரு தமிழ் நாடகம் மேடையேற்றப் போகிறோம். நீங்கள் குடும்பத்துடன் கட்டாயம் வர வேண்டும்,'' என்றார்.

''நாடகமா? இங்கு நாடகம் பார்ப்பதற்கு ஒருவரும் இல்லை'' என்றார் வீட்டுக்காரர்.

''நல்ல நகைச்சுவை நாடகம் பார்த்தால் கட்டாயம் இரசிப்பீர்கள்''.—ராம் சுந்தர்.

''இங்கு தமிழ் நாடகம் பார்ப்பதற்கு ஒருவரும் இல்லை.''

''இந்த நாடகத்திற்கு 'டிக்கட்' கிடையாது Freeயாகப் போடுகிறோம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டிக்கட் கிடையாதா? இலவசமாகப் போடுகிறார்களா?'' என்று சற்று ஆச்சரியத்துடன் கேட்டார் அவர்.

''அழைப்பிதழ்களைக் கொடுக்கத்தான் வந்தோம். இந்த அழைப்பிதழ்களுடன் வருபவர்கள் மட்டுமே நாடகம் பார்க்க அனுமதிக்கப்படுவார்கள்.''

''வீட்டுக்காரர், தலையைத் திருப்பித் தன் மனைவியின் பெயரைச்சொல்லி அழைத்தார். ''பொங்கலுக்கு சரஸ்வதி மண்டபத்தில் இலவசமாக நாடகம் போடுகிறார்களாம். எத்தனை பேர் பார்க்கப் போகிறீர்கள்?'' என்றார்.

வீட்டுக்காரரின் மனைவி வெளியே வந்தவர் மீண்டும் உள்ளே சென்று, தன் இரண்டு பெண் பிள்ளைகளையும் அழைத்து வந்தார். பின் மூவருமாக எத்தனையோ பெயர்களை உச்சரித்தார்கள். 'கன்சல்டேஷன்' பலமாக நடந்தது. முடிவில் பத்துப்பேர் வருவதாகச் சொன்னார்கள்.

இங்கு தமிழ் நாடகம் பார்ப்பதற்கு ஒருவரும் இல்லை என்று சிலநிமிடங்களுக்கு முன்னர் கூறிய வீட்டுக்காரர், ராம் சுந்தர் கொடுத்த பத்து அழைப்பிதழ்களையும் மலர்ந்த முகத்துடன் பெற்றுக் கொண்டார்.

## நாடக அரங்குகள்

1950 களின் பிற்பகுதியிலும் 1960 களின் முற்பகுதியிலும் கொழும்பில் பல நாடக மன்றங்கள் இயங்கி வந்தன. ஒவ்வொரு வாரமும் குறைந்த பட்சம் ஒரு நாடகமாவது மேடையேறத் தவறுவதில்லை. தமிழ் நாடகங்கள் மேடையேறுவதற்குத் தகுந்த மண்டபமாக பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபமே விளங்கியது. கொட்டாஞ்சேனையில், விவேகானந்தா சொஸைட்டி ஹோல், பிறின்ஸ் கொலேஜ் ஹோல், சி. பி. மோடி ஹோல், பொரளை வை. எம். பி. ஏ. மண்டபம் போன்ற மண்டபங்கள் வெகுவாகப் பயன்பட்டு வந்தன. 1950 களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மாணிக்கப்பட்ட லயனல் வென்ற் மண்டபத்தில் தமிழ் நாடகங்கள் அப்போது மேடையேற்றப்படுவதில்லை. லயனல் வென்ற் நாடகமேடை எங்கிருக்கிறது என்றே பலருக்குத் தெரியாது. இந்த நாடக மேடையில் முதலில் தமிழ் நாடகங்களை மேடையேற்றிய பெருமை எமது கொழும்பு அமெச்சூர் நாடகக் குழுவினரையே சாரும்.

## லயனல் வென்ற் நாடக அரங்கு

1959 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி 'டாக்டர் கல்யாணம்' என்ற நாடகத்தை 'லயனல் வென்ற்' தியேட்டரில் மேடையேற்ற ராம் சுந்தர் உத்தேசித்தார். ராம் சுந்தரின் நண்பர் ஒருவர் லயனல் வென்ற் தியேட்டர் நிர்வாக சபையின் அங்கத்தவராக இருந்தார். அவர் மூலம், 150 ரூபாய் வாடகைக்கு விடப்பட்ட லயனல் வென்ற் தியேட்டர், 50 ரூபாய் வாடகைக்கு ராம் சுந்தருக்குக் கிடைத்ததே இதற்குக் காரணம்.

1960 களின் பிற்பகுதியில் இந்தத் தியேட்டர் புனர் நிர்மானம் செய்யப்படும் வரை, இந்தத் தியேட்டரில் 400 பேர் மாத்திரம் அமர்ந்து நாடகம் பார்க்கக் கூடியதாகவே இது அமைக்கப்பட்டிருந்தது. இரசிகர்கள் அமைதியாக இருந்து பார்த்தால், மேடையில் ஏற்படுத்தப்படும் ஒரு சிறிய ஒலி கூட, கடைசி வரிசையில் அமர்ந்திருக்கும் இரசிகர்களுக்கும் மிகவும் தெளிவாகக் கேட்கும். நாடகக் கலையில் ஆர்வம் கொண்ட லயனல் வென்ற் என்ற செல்வந்தர், தனக்குப் பிறகு, தான் குடியிருந்த வீட்டையே ஒரு நாடக அரங்காக மாற்றியமைக்கும்படி உயில் எழுதி வைத்ததாகக் கேள்விப்பட்டேன். அவர் பெயரிலேயே lional wendt memorial theatre லயனல் வென்ற் ஞாபகார்த்த அரங்கு என்று இன்னும் இது வழங்கப்படுகிறது.

'டாக்டர் கல்யாணம்' நாடகத்தின் இறுதி ஒத்திகை லயனல் வென்ற் தியேட்டரிலேயே நடத்தத் தீர்மானிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. ஆனால் லயனல் வென்ற் தியேட்டர் எங்கிருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியாது. எனவே ராம் சுந்தர் லயனல் வென்ற் தியேட்டருக்கு எப்படிச் செல்வது என்பதை எமக்கெல்லாம் விளக்கிக் கூறினார். ''ஆமர் வீதியிலிருந்து 155 இலக்க பஸ்ஸில் ஏறி, அரும்பொருள் காட்சிச் சாலை கடந்து, அடுத்த ஹோல்ட்டில் இறங்கி, கொஞ்சத் தூரம் நடந்தால் லயனல் வென்ற் தியேட்டரை அடையலாம்,'' என்று விளக்கினார்.

இறுதி நாள் ஒத்திகைக்கு ஜோக்கிம், மோகனதாஸ், நான் ஆகிய மூவரும் ஒன்றாகப் புறப்பட்டோம். ராம் சுந்தர் குறிப்பிட்ட இடத்தில் இறங்கினோம். ராம் சுந்தா கூறியவாறு நடந்தோம். வெகுதூரம் நடந்தும் லயனல் வென்ற் தியேட்டரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

யாரிடமாவது கேட்டுப் பார்க்கலாமென்றால் அந்தத் தெருக்களில் சன நடமாட்டமே இல்லாதிருந்தது. கடைசியாக எதிர்ப்பட்ட ஒருவரிடம் கேட்டோம். அவர் தொலைவிலிருந்தே நாம் கடந்து வந்த பாதையின் ஒரு மூலையைக் காட்டிவிட்டுச் சென்று விட்டார். அவர் காட்டிய இடத்தை அடைந்தோம். அது ஒரு பெரிய மாளிகை போன்ற வீடு. சரஸ்வதி மண்டபத்தையும் பிரின்ஸ் கொலேஜ் ஹோலையும் பார்த்த எமக்கு அது ஒரு நாடக அரங்காக இருக்குமென்று தோன்றவில்லை. அதை அடுத்து ஒரு பெரிய திறந்த வெளி; சற்றுத் தொலைவில் ஒரு கட்டிடம், திறந்திருந்த பெரிய கதவுகளினூடாக சிலர் நிற்பது தெரிந்தது. லயனல் வென்ற் தியேட்டர் அதுவாகத்தான் இருக்குமென்று தோன்றவே மூவரும் திறந்த வெளியினூடாக நடக்கத் தொடங்கினோம். அருகே செல்லச் செல்ல, உள்ளே நடக்கும் நிகழ்ச்சிகள் தெளிவாகத் தெரியத் தொடங்கின. ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து நடனமாடிக் கொண்டிருந்தார்கள். அப்போதுதான் இது லயனல் வென்ற் தியேட்டராக இருக்காது என்று எமக்குத் தோன்றியது. திரும்பி ஓட்டமும் நடையுமாக வெளியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேர்ந்தோம்.

நாம் வரத் தாமதமாவதைக் கண்டராம் சுந்தர் வழி தெரியாமல்தான் திண்டாடுகிறோமோ என்று எண்ணி லயனல் வென்ற் தியேட்டர் வாசலில் நின்றிருந்தார். அவரைக் கண்டதும் தான் எமக்குப் போன உயிர் திரும்பி வந்தது. ''லயனல் வென்ற் தியேட்டருக்கு வரவேண்டிய நீங்கள் ஏன் லேடீஸ் கிளப்புக்குப் போனீர்கள்?'' என்று கேட்டுச் சிரித்தார். நாங்கள் நடந்ததை விளக்கினோம்.

எமக்கு ஏற்பட்ட திண்டாட்டம், நாடகம் பார்க்க வரும் இரசிகர்களுக்கும் ஏற்படக்கூடாதென்ற எண்ணத்தில் அப்போதே ஒரு திட்டம் தீட்டினோம். அதன்படி 155 பஸ் வந்து நிற்கும் தரிப்பிடத்திலிருந்து லயனல் வென்ற் தியேட்டர் வரை நின்றிருந்த பெரிய மரங்களில் 'லயனல் வென்ற் தியேட்டர்' என்று அம்புக் குறியுடன் வரைந்து, மறு நாள் மத்தியானமே ஆணிகள் கொண்டு அறைந்து விட்டோம். நாடகம் பார்க்க வந்த இரசிகர்களுக்கு இது பேருதவியாக அமைந்தது.

## நாடக மன்றங்கள்

கொழும்பில் அன்றிருந்த பல நாடக மன்றங்களில் 'மனோரஞ்சித கான சபை' மிக முக்கியத்துவம் வாய்ந்ததும் பழமையானதுமாகும். இராஜேந்திரம் மாஸ்டர் அவர்களால் நடத்தப்பட்டு வந்த இந்த நாடக மன்றம் கொழும்பில் 50 சதவீதமான தரமான மேடை நாடக நடிகர்கள் உருவாவதற்கு உதவியது. பி. என். கிருஷ்ணகுமார் அவர்களால் இயக்கப்பட்டு வந்த முன்னேற்ற நாடக மன்றமும் பல மேடை நாடக நடிகர் களை உருவாக்கியது. லடிஸ் வீரமணி அவர்களின் தமிழர் முன்னேற்ற நாடக மன்றம், சி. சண்முகம் அவர்கள் தொடங்கிய பாரதி கழகம், 'கலைச் செல்வி நாடக சபா'' 'நற்றமிழ் நாடக மன்றம்' வேலணை வீரசிங்கம், எஸ். பீ. சாமி, எஸ். எஸ். கணேசபிள்ளை ஆகியோர் இணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்த 'கலைச் செல்வி கலா மன்றம்' 'ஆனந்தா புரடக்ஷன்' 'ராஜ் நகைச்சுவை நாடக மன்றம்' 'கொழும்பு கலா விருத்திச் சங்கம்' எம். என். எம். புரடக்ஷன், 'லலிதகலா நாடக மன்றம்' 'கதிரவன் கலைக்கூடம்' போன்ற பெயர்களில் பல நாடக மன்றங்கள் நாடகங்களை மேடையேற்றின. இவற்றுடன் ராம் சுந்தரின் கொழும்பு அமெச்சூர் நாடக மன்றமும் பல நகைச்சுவை நாடகங்களை மேடையேற்றி வந்தது.

கொழும்பில், தமிழ் மேடை நாடக வளர்ச்சியில் பெரும்பங்காற்றிய நாடக மன்றங்கள், அவற்றை உருவாக்கியவர்கள், அவற்றில் பங்கெடுத்த நடிகர்கள் பற்றிய விரிவான ஆய்வொன்றை நடத்தவேண்டிய பொறுப்பு நாடக ஆய்வாளர்களைச் சாரும்.

## நாம் மேடையேற்றிய நாடகங்கள்

1958 முதல் 1962 வரை கொழும்பு அமெச்சூர் நாடகக் குழு மூலம் பல நாடகங்களை மேடையேற்றினோம். 'கல்யாணமாமில்ல கல்யாணம்' 'டாக்டர் கல்யாணம்' 'நமக்குள்ளே இருப்பது' 60 இல் நடந்தது. 'இப்படியும் நடக்குமா?' 'இரு மேதாவிகள்' 'ஊருக்கு உபதேசம்' 'நீங்களே போட்டுக் கொள்ளுங்கள்' இப்படியே பல பெயர்களில் பல முறை பல நாடகங்களை அரங்கேற்றி னோம். இவை லயனல் வென்ற் தியேட்டர், கொட்டாஞ் சேனை சென்ற் பெனடிக்கல் கல்லூரி மண்டபம், பம்பலப் பிட்டி சரஸ்வதி மண்டபம், சென்ற் பீட்டர்ஸ் கல்லூரி மண்டபம், கொழும்பு பல்கலைக்கழக மண்டபம் ஆகிய அரங்குகளில் மேடையேற்றப்பட்டன. இந்த நாடகங்களின் எஸ். மோகனதாஸ், தெ.ஈஸ்வரன், பி. சூசைதாசன், பீ. சந்திரசேகரன், பி. என். இராமச்சந்திரன், ஜோக்கிம் பர்னாந்து, ஜி. ராஜா, ரொனால்ட் பர்னாந்து, பாபு ராஜேந்திரன், செல்வி. ஜி. ஜெயமணி, எஸ். செல்வ ரத்தினம், ஜெமினி தங்கராஜா. ஆ. கல்யாணசுந்தரேசன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். விமலநாதன், செல்வி. யோகதேவி ஆகியோருடன் நானும் நடித்து வந்தேன். இவர்களுடன் இடையிடையே சில நாடகங்களில் வேறு பல நடிகர்களும் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

## இலங்கை வானொலிக் கலைஞர்கள்

1950 களின் பிற்பகுதியில் இலங்கை வானொலியில் கலைஞர்களை நான்கு வகையினராகப் பிரித்து வைத்திருந்தார்கள். (1) மாதர் பகுதிக் கலைஞர்கள் (2) உரைச் சித்திரங்களில் கலந்து கொள்ளும் கலைஞர்கள். (3) நாடகக் கலைஞர்கள் (4) கல்விச் சேவைக் கலைஞர்கள், இவற்றில் ஒன்றில் பங்குபற்றும் கலைஞர்கள் மற்ற மூன்றிலும் கலந்து கொள்ள முடியாது.

1959 ஆம் ஆண்டு மாதர் பகுதி நடிகர் தேர்விற்கான விண்ணப்பங்கள் வானொலி மூலம் கோரப்பட்டது. நானும் விண்ணப்பித்தேன். நடிகர் தேர்விற்குச் சமூகமளிக்கும்படி தேதி, நேரம் போன்றவை குறிப்பிட்ட கடிதம் இலங்கை வானொலியிலிருந்து வந்து சேர்ந்தது. காலையில் எட்டு மணிக்கே நான் வானொலி நிலையத்தைச் சென்றடைந்து விட்டேன் சிறிது நேரத்திற்கெல்லாம், நடிகர் தேர்வில் பங்குபற்றுவதற்காக பலர் வந்து சேர்ந்து விட்டார்கள். எல்லோரையும் சென்று ஐந்தாம் இலக்கக் கலையகத்திற்கு வெளியே நிற்கும் படி ஒருவர் வந்து கூறினார். மாதர் பகுதி கலைஞர் தேர்விற்காக வந்திருந்த சுமார் இருபது இருபத்தைந்து பேர் உள்ளே போய் ஐந்தாம் இலக்கக் கலையகத்தின் வாசலில் நின்றோம். எங்களனைவருக்கும் நாம் கலையகத்திற்குள் சென்று வாசித்துக்காட்ட வேண்டிய பிரதிகள் வழங்கப்பட்டன. நாம் அனைவரும் தனித்தனியே நின்று அவற்றில் உள்ளவற்றை வாசித்துப் பார்க்கத் தொடங்கினோம்.

சற்று நேரத்தில், அப்போது தேசிய சேவையில் நிரந்தர அறிவிப்பாளராக இருந்த வீ. ஏ. கபூர் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வழியே வந்தார். நான் இளைஞர் மன்றத்திற்காக அடிக்கடி வானொலி நிலையம் போய் வருவதால் கபூர் அவர்கள் என்னைத் தெரிந்து வைத்திருந்தார். அவர் என்னருகே வந்து ''ஜோர்ஜ், நீரும் 'ஒடிஷ'னுக்கா வந்திருக்கிறீர்?'' என்று கேட்டார், ''ஆம்'' என்றேன். நான், ''அப்படியென்றால் என்னுடன் வாரும்,'' என்று கூறியபடியே கலையகத்திற்குள் நுழைந்தார். நானும் அவர் பின்னால் கலையகத்திற்குள் நுழைந்தேன்.

நேரே என்னை அழைத்துச் சென்று கலையக ஒலி வாங்கியின் முன்னால் நிறுத்தினார். கலையகத்தின் மறுபுறத்தில் இருப்பவர்கள் யாரென்று தெரியாத வகையில் மறுபுறம் மறைக்கப்பட்டிருந்தது. ''மறுபுறத்தில் இருப்ப வர்கள் வாசிக்கச் சொல்லும் போது, உமக்கு வந்த கடிதத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் இலக்கத்தை முதலில் சொல்லிவிட்டு, அவர்கள் கேட்பதை வாசித்துக் காட்டும்,'' என்று கூறிவிட்டு அவர் போய்விட்டார். சற்றும் எதிர் பாராத வகையில் முதல் ஆளாக சிக்கலில் மாட்டி வைத்து விட்டாரே திருவாளர் கபூர் என்று மனம் அடித்துக் கொண்டது. நிசப்தமாக இருந்த பெரிய கலையகத்திற்குள் தனியாக நிற்பது பயமாக வேறு இருந்தது. மறு புறத்தி லிருந்து குரல் கேட்டும்வரை, காலம் பல நூற்றாண்டுகள் கடப்பதுபோல் நீடித்தது.

இறுதியில் எங்கிருந்தோ கேட்ட குரலுக்கு ஒலி வாங்கியில் பதிலளித்தேன். இரண்டு வாரங்களுக்குப்பின் நான் மாதர் பகுதி கலைஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தாகக் கடிதம் வந்தது.

அப்போது மாதர் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த தயாரிப்பாளர் திருமதி. பொன்மணி குலசிங்கம், நான் மாதர் பகுதி கலைஞனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் எனக்கு மாதர் பகுதியில் பங்குபற்றுவதற்குப் பல சந்தர்ப் பங்களை வழங்கினார். நான் அப்போது மாதர் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிக்கு எழுதிய சிறுகதை நாடகங்களும் உரைச் சித்திரங்களும் பலப்பல.

## அச்சுவாகனமேறிய என் இரண்டாவது சிறுகதை

1961 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'பிரதிஷ்டை' என்று சிவத்தம்பி அவர்களினால் பெயர் மாற்றம் செய்யப்பட்ட எனது சிறுகதை தினகரனில் பிரசுரமாயிற்று. இதுவே நான் எழுதி அச்சுவாகனமேறிய இரண்டாவது சிறுகதை. இந்தச் சிறுகதையை எழுதி சிவத்தம்பி அவர்களிடம் கொடுத்த போது, ''இதையேன் வானொலியில் ஒலிபரப்பி 'வேஸ்ட்' பண்ணுவான். தினகரனில் பிரசுரிக்கலாம்'' என்று அதைச் சிவத்தம்பி அவர்கள் எடுத்துச் சென்றார் என்பதை நான் ஏற்கனவே சொன்னது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம் என்று நினைக்கின்றேன்.

சிவத்தம்பி அவர்கள் கதையை எடுத்துச் சென்றதற்கும், கதை பிரசுரமானதற்கும் இடையில் எத்தனை நாட்கள் கடந்திருக்குமென்று நினைக்கிறீர்கள்?

ஏறத்தாழ ஒன்றரை வருடங்கள்!

சிவத்தம்பி அவர்கள் இளைஞர் மன்றம் நிகழ்ச்சியை நிறுத்திக் கொண்ட பின்னரும் அவருடன் தொடர்பு வைத்திருந்த இளைஞர் மன்ற அங்கத்தவன் நான், ஒருவன் தான்.

அப்போது சிவத்தம்பி அவர்கள் வெள்ளவத்தையில் ஒரு தனி அறையில் வசித்து வந்தார். திருமணமாகவில்லை. நான் அடிக்கடி அவரது அறைக்குப்போய் அவரைச் சந்திப்பதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பிரதிஷ்டை' என்ற என் கதை பிரசுரமானபின் ஒரு நாள் சிவத்தம்பி அவர்களைச் சந்தித்தேன். ''உமது சிறுகதையைப் பலர் படித்துப் பாராட்டினார்கள். உம்மைச் சந்திப்பதற்கும் பலர் காத்திருக்கிறார்கள். ஒரு நாள் என்னுடன் வாரும்; உம்மை அவர்களுக்கு அறிமுகப்படுத்து கிறேன்,'' என்றார்.

அதேபோல் ஒருநாள் ஆட்டுப்பட்டித் தெருவிலுள்ள Rainbow Printers என்ற அச்சகத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். அப்போது Rainbow Printers உரிமையாளராக இருந்தவர் ஜனாப் எம். ஏ. ரஹ்மான். ஒரு கலா ரசிகர். அதே போல் அவருடன் இணை உரிமை யாளராக இருந்தவர் திருவாளர் கனகரத்தினம். இவரும் ஒரு கலா ரசிகர். சிவத்தம்பி அவர்கள் என்னை அறிமுகப் படுத்தியதும், இவர்கள் இருவரும் என்னை வெகுவாகப் புகழ்ந்தார்கள். என் கதையை இரசித்து மகிழ்ந்ததாகவும், என்னைச் சந்திக்க விரும்பியதாகவும் சொன்னார்கள்.

எனக்கோ இதையெல்லாம் கேட்டதும், இலங்கைத் தமிழ் இலக்கிய உலகில் நான் ஒரு மோப்பஸானாக மாறி விட்டதாகத் தோன்றியது.

## சிறாப்பர் குடும்பம்

'சிறாப்பர் குடும்பம்' என்றதொரு வானொலித் தொடர் நாடகத்தை எழுதத் தொடங்கினார் சிவத்தம்பி அவர்கள். இது வாரா வாரம் நெஸ்லே ஸ்தாபனத்தாரின் ஆதரவில் வர்த்தக சேவையில் ஒலிபரப்பப்பட்டு வந்தது. யாழ்ப்பாண மொழி வழக்கில் சிவத்தம்பி அவர்கள் எழுதி வந்த இந்தத் தொடர் நாடகத்தில், இந்திய மொழி வழக்கில் எனக்கு ஒரு பாத்திரத்தை உருவாக்கினார். சிறாப்பர் குடும்பத்தில் சிறாப்பராக நடித்தவரும் அவரே. அப்போது இலங்கை வானொலி தேசிய சேவையில் நிரந்தர அறிவிப்பாளர்களாக இருந்த திருமதி செந்தில்மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில்வாகனம், திரு. வி. சுந்தரலிங்கம் போன்றோரும் இதில் நடித்தார்கள். இந்த நாடகத்தில் நடித்த ஏனைய நடிகர்கள் பற்றி இன்று எனக்கு ஞாபகமில்லை. எஸ். பி. மயில்வாகனம் அவர்கள் நாடகத்தில் வானொலித் தயாரிப்பாளர்.

அப்போது பம்பலப்பிட்டிச் சந்தியில் Tony's Record Shop என்ற பெயரில் மேல் நாட்டு இசைத் தட்டுக்களை விற்பனை செய்யும் நிலையம் ஒன்றிருந்தது. இந்த விற்பனை நிலையத்தின் பின்புறம் ஒரு ஒலிப்பதிவுக் கலையகம் அமைக்கப்பட்டிருந்தது. இந்தச் சின்னக் கலையகத்தில் தான் 'சிறாப்பர் குடும்பம்' ஒலிப்பதிவு செய்யப்பட்டு வந்தது.

ஆரம்பத்திலிருந்து நானும் இந்தத் தொடர் நாடகத்தில் நடித்து வந்தேன். நான் ஒருவன் மட்டுமே இந்த நாடகத்தில் இந்திய மொழி வழக்கில் நடித்து வந்ததால் என் பாத்திரத்தை ஒவ்வொரு வாரமும் நாடகத்தில் சேர்த்துக் கொள்வது சிவத்தம்பி அவர்களுக்குக் கஷ்டமாக இருந்திருக்க வேண்டும். இதனால் என்னுடன் இந்திய மொழி வழக்கில் நடிப்பதற்கு ஒரு இளம் நடிகரை அழைத்து வரும்படி மயில்வாகனம் அவர்களிடம் திரு. சிவத்தம்பி கூறி இருந்தார். அதற்கிணங்க மயில்வாகனம் அவர்கள், அன்று கொழும்பில் மேடையேறிய பல நாடகங்களில் நகைச்சுவைப் பாத்திரமேற்று நடித்து வந்த சந்திரன் என்ற இளைஞரை என்னுடன் நடிப்பதற்கு அழைத்து வந்தார். இவரும் நானுமாக இந்தியத் தமிழ் மொழி வழக்கில் பல வாரங்கள் சிறாப்பர் குடும்பத்தில் நடித்தோம்.

இந்தச் சந்திரன் என்ற இளைஞர் வேறு யாருமல்ல. இப்போது தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களில் நகைச்சுவை வேடங்களில் சக்கைப்போடு போடும் எஸ். எஸ். சந்திரன் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறிய சிறுகதை

"The Shortest Short Story பற்றித் தெரியுமா?" என்று ஒரு நாள் கேட்டார் சிவத்தம்பி அவர்கள்.

"தெரியாது" என்றேன்.

அவர் ஆங்கிலத்தில் சொல்லத் தொடங்கினார்.

"Do you believe in Geosts,?" Asked the Fellow Traveller.

"Yes," Said the Other

And Vanished!

"இது தான் உலகத்திலேயே சின்னஞ்சிறிய சிறுகதை. இதிலே சிறுகதைக்குரிய இலக்கணம் எல்லாமே உண்டு," என்றார்.

இனி இதைத் தமிழிலே பார்ப்போம்.

"உங்களுக்குப் பேய் பிசாசுகளில் நம்பிக்கை உண்டா?" என்று கேட்டார் சக பிரயாணி.

"ஆம்" என்று கூறி

மறைந்தார் மற்றவர்.

சிறுகதை, ஒரு சம்பவத்தின் நடுவிலிருந்து தொடங்க வேண்டும் என்பது விதி, இந்தச் சின்னஞ்சிறு கதையும் ஒரு சம்பவத்தின் இடையிலிருந்தே திடீரென்று தொடங்குகிறது. இருவர் பஸ்ஸிலோ ரெயிலிலோ பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒருவர் மற்றவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்பதாகக் கதை தொடங்குகிறது. 'என்று கேட்டார் சக பிரயாணி. "ஆம்" என்று கூறி', என்பது வரை கதையின் நடுப்பகுதி. 'மறைந்தார் மற்றவர்', என்பது திடீரென்ற, எதிர்பாராத முடிவு. சிறுகதை, சற்றும் எதிர்பாராத விதமாக சட்டென்று முடியவேண்டும் என்பதும் சிறு கதைக்கே உரிய பண்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இதைச் சின்னஞ்சிறிய சிறுகதை என்று கூறலாம். அது மட்டுமல்ல; சிறுகதைகள் எழுத விரும்பு வோருக்கு இந்தக் கதை, சிறுகதை இலக்கணமாகப் பயன்படும்.

பின்னர் நான் சிறுகதைகள் எழுதும் போதும், சிறு கதைகள் வாசிக்கும் போதும் இந்தச் சின்னஞ்சிறிய சிறு கதை என் நினைவைத் தொட்டுச் செல்லும்.

## இலங்கையின் ஆக்க இலக்கியக்காரர்களின் சூழகை

Rainbow அச்சகம் என் ஆரம்ப கால இலக்கியப் பாதையின் ஒரு மைல்கல் என்றுதான் கூறவேண்டும். இங்கு தான் இலங்கையின் ஆக்க இலக்கியக்காரர்களை நான் சந்தித்தேன்: வ. அ. இராசரத்தினம், எஸ். பொன்னுத் துரை, டொமினிக் ஜீவா, ஏ. ஜே. கனகரட்னா, நீலாவணன், தர்ம சிவராமு போன்ற பலரையும் இங்கு தான் சந்தித்தேன்.

அப்போது நான் தாடி வைத்திருந்தேன். அதாவது என் பதினெட்டு, பத்தொன்பது வயதிலேயே தாடி; கறு கறு வென்று அடர்த்தியான தாடி. இதற்கு எந்தவிதக் காரணமுமில்லை. ஒரு ஏழெட்டு மாதங்கள் வளர்ந்ததும், ஒரேயடிகாகத் தாடி மீசை எல்லாவற்றையும் வழித்து விடுவேன். இந்தத் தாடியினால் Rainbow அச்சகத்தில் எனக்கொரு சுவையான அனுபவம் ஏற்பட்டது.

அன்று காலை கவிஞர் நீலாவணன் அச்சகத்திற்கு வந்திருந்தார். ரஹ்மான் என்னை அவருக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். கவிஞர் என்னோடு மிகுந்த அந்நியோன்னியமாகப் பழகினார். அன்று மாலை, தாடியும் மீசையும் அதிகமாக வளர்ந்திருப்பதாகத் தோன்றவே பக்கத்திலிருந்த சலூனுக்குச் சென்று தாடி மீசை எல்லாவற்றையும் வழித்து, 'கிளீன் ஷேவ்' செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அச்சகத்திற்கு வந்தேன். அங்கே நீலாவணன் தனியாக அமர்ந்திருந்தார். நானும் வந்து அமர்ந்தேன். ஆனால் அவரோ என்னைக் கண்டும் காணாதவர் போல் இருந்தார். முகத்தில் ஒரு புன்னகைகூட இல்லை. அவரது இந்தப் போக்கு எனக்கு விசித்திரமாகவும் வேதனையாகவும் இருந்தது.

சில நிமிடங்கள் இப்படியே கழிந்தன. சிறிது நேரத்தின் பின் அச்சகத்தின் உள்ளேயிருந்து வெளிப்பட்ட ரஹ்மான் என் பெயர் சொல்லி அழைத்தார். அப்போது நீலாவணன் என்னை மிகுந்த ஆச்சரியத்துடன் பார்த்தார்.

''ஜோர்ஜ், நீங்கள் தானா? காலையில் தாடி மீசையோடு இருந்தீர்கள். எனக்கு அடையாளம் தெரியவில்லை. வேறு யாரோ என்றல்லவா நான் பேசாமல் இருந்தேன்,'' என்றார். அப்போது தான் எனக்கு நீலாவணனின் திடீர் மாற்றம் புரிந்தது.

## சிவத்தம்பி அவர்களின் தாழ்வுச் சிக்கல் :

'கறுப்புச் சூரியன்' என்றொரு சிறுகதை எழுதி முடித்தேன். அதை அண்ணாவிடம் காட்டி அங்கீகாரம் பெறவேண்டுமென்று தோன்றியது. மறுநாள் காலையில் சிவத்தம்பி அவர்கள் அப்போது வெள்ளவத்தையில் தங்கி இருந்த ரூமுக்குக் கதையுடன் போய்ச் சேர்ந்தேன். அப்போது சிவத்தம்பி அவர்கள் பாராளுமன்றத்தில் சமகால மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். கதையைப் படித்து முடித்த அவர், தனது அபிப்பிராயங்களைக் கூறினார். பின்னர் அவர் பாராளுமன்றத்திற்குப் புறப்பட்டார். நானும் அவருடன் வெளியே வந்தேன்.

வெள்ளவத்தை பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகே இருந்த 'காந்தி கபே'யில் காலை உணவாக இடியப்பம் சாப்பிட்டு விட்டு கோட்டைக்குச் செல்லும் பஸ்தரிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடத்தை அடைந்தோம். அங்கே பஸ்ஸுக்காகக் காத்திருக்கும்போது சிவத்தம்பி அவர்கள் ''ஜோர்ஜ்,'' இரண்டு இடங்களில் நான் நிற்கும் போது எனக்குத் தாழ்வுச் சிக்கல் ஏற்படுகிறது.'' என்றார். ''எங்கெங்கு சேர்?'' என்று நான் கேட்டேன்.

''இந்தத் தெருவைக் கொஞ்சம் பாரும். எத்தனை கார்கள் போகின்றன. எத்தனை கார்கள் வருகின்றன. இதில் ஒரு காரைக்கூடச் சொந்தமாக வைத்திருக்கும் தகுதி எனக்கில்லையே என்று இந்தப் பஸ் ஸ்டேன்டில் நின்று நினைக்கும்போது எனக்குத் தாழ்வுச் சிக்கல் ஏற்படுகிறது. மற்ற இடம், பொது நூலகம். அங்கு ஆயிரக் கணக்கில் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் நான் எழுதிய புத்தகம் ஒன்று கூட இல்லையே என்று நினைக்கும்போது தாழ்வுச் சிக்கல் ஏற்படுகிறது,'' என்றார்.

இன்று பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் நூலகங்களுக்குச் செல்லும் போது இந்தத் தாழ்வுச் சிக்கல் அவருக்கு ஏற்படாது என்று நினைக்கிறேன். ஏனென்றால் அவர் எழுதிய பல புத்தகங்கள் இன்று எல்லா நூலகங்களிலும் இருக்கின்றன.

கார் விஷயத்திலும் அப்படியேதான் இருக்க வேண்டும்.

## இரவின் இதயம்

'இரவின் இதயம்' என்றொரு வானொலி உரைச் சித்திரம் எழுதினார்—திரு. சிவத்தம்பி. அதில் என்னை உரைஞனாக வந்து பங்குபற்றும்படி கூறினார். ''நான் உரைச்சித்திர நடிகனாக இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லையே,'' என்றேன் நான். ''அதைப் பற்றிக் கவலைப் படாதேயும். அதை நான் பார்த்துக் கொள்கிறேன். இந்த உரைச்சித்திரத்தில் பங்குபற்றுவதற்கான சன்மானமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுத் தருகிறேன். நீர் வந்து பங்குபற்றும்,'' என்றார் சிவத்தம்பி அவர்கள்.

குறிப்பிட்ட தினத்தில் உரைச்சித்திரத்தில் பங்குபற்றுவதற்காக இலங்கை வானொலிக்குப் போய்ச் சேர்ந்தேன். கலைஞர்கள் அனைவரும் வந்து சேர்ந்ததும் ஒத்திகை ஆரம்பமாயிற்று. எனக்கு உரைஞர் பாத்திரத்தை வாசிக்கும்படி சிவத்தம்பி அவர்கள் தந்தார். சிவத்தம்பி அவர்களும் பங்குபற்றிய இந்த உரைச்சித்திரத்தை அவரே நெறிப்படுத்தினார். ஒத்திகையின் ஆரம்பத்திலும் இடையிடையும் வந்து பார்த்துவிட்டுச் சென்றார்,— அன்றைய உரைச்சித்திரத் தயாரிப்பாளர் சீ. வி. இராஜசுந்தரம் அவர்கள்.

சரியான நேரத்தில் ஒலிபரப்பு ஆரம்பமாயிற்று. அப்போது ஒலிப்பதிவு கிடையாது. நிகழ்ச்சிகள் நேரடியாகவே ஒலிபரப்பப்பட்டு வந்தன.

''இரவின் இதயம்'' உரைச்சித்திரம் ஒலிபரப்பப்பட்டு முடிந்ததும் கலையகத்திற்குள் அவசரமாக நுழைந்த சீ. வி. இராஜசுந்தரம் அவர்கள், சிவத்தம்பி அவர்களை வெகுவாகப் பாராட்டிவிட்டு, அதுவரை என்னைத் திரும்பிக் கூடப் பார்க்காத அவர், என்னிடம் வந்து என் கையை பிடித்துக் குலுக்கியபடி ஆங்கிலத்தில் பொழிந்து தள்ளினார். என் குரலும் நான் உரையை வாசித்த பாங்கும் அவருக்கு நன்றாகப் பிடித்து விட்டதென்பதைப் புரிந்து கொண்டேன். சிவத்தம்பி அவர்களின் பாசறையிலிருந்து வந்தவனாயிற்றே நான். இறுதியில் என் தொலைபேசி இலக்கத்தைக் கேட்டார். தொலைபேசி வசதி எனக்கில்லை என்றேன். அப்படியானால் என் விலாசத்தைத் தரும்படி கேட்டார். நான் கொடுத்தேன். அதன் பின் தான் தயாரித்த ஒவ்வொரு உரைச்சித்திரத்திலும் பங்குபற்ற என்னை அழைத்தார் சி. வி. இராஜசுந்தரம் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் நெறிப்படுத்திய முதல் மேடை நாடகம்

1962 ஆம் ஆண்டு ராம் சுந்தர் ஓய்ந்துவிட்டார். அமெச்சூர் நாடகக் குழுவில் மாணவர்களாக நடித்துக் கொண்டிருந்த எனது நண்பர்கள் பலர் இப்போது தொழில் செய்யத் தொடங்கி விட்டார்கள். ஜோக்கிமுக்கும் இலங்கை வங்கியில் வேலை கிடைத்து விட்டது. எனவே நாடகங்களில் நடிப்பதற்குப் பலருக்கு நேரமில்லை. என்னைப் பொறுத்தவரை, நான் எழுத்து, நாடகம் தவிர்த்த வேறு எந்தத் தொழிலும் செய்வதில்லை என்று தீர்மானித்து விட்டேன். இது, இலங்கைத் தமிழன் என்ற அளவில் எவ்வளவு பிழையான தீர்மானம் என்பது எனக்குப் பின்னர் தான் புரிந்தது.

வங்கியில் வேலை செய்தாலும் ஜோக்கிமுக்கு நடிப்பில் இருந்த ஆர்வம் குன்றவில்லை. ஒரு நாள் நாங்கள் இருவரும் சந்தித்தபோது ''ஒரு நாடகம் மேடையேற்றுவோமா?'' என்று கேட்டான் ஜோக்கிம். ''செய்யலாம்'' என்றேன் நான். ''ஒரு நாடகத்தை எழுதி நீரே டைரெக்ட் செய்யும், நான் நடிக்கிறேன், தயாரிப்பையும் நானே கவனித்துக் கொள்கிறேன்'', என்றான்.

நாடகக் கதை பற்றி வெகுநாட்கள் கலந்துரையாடி, கடைசியில் ஒரு நாடகத்தை எழுதி முடித்து 'போகாதே' என்று அதற்குப் பெயர் சூட்டினேன்.

அப்போது நடிப்பில் இருந்த ஆர்வத்தைவிட நாடக டைரக்ஷனிலேயே என் நாட்டம் அதிகமாக இருந்தது. ஒரு மேடை நாடகத்தை நெறியாளும் திறமையும் பெற்றிருந்தேன் என்று தான் கூறவேண்டும். ஏனென்றால், பொது நூலகம், அமெரிக்க நூலகம், பிரிட்டிஷ் நூலகம் போன்ற நூலகங்களில் இருந்த மேடை நாடக டைரெக்ஷன் சம்பந்தமான பல நூல்களை வாசித்து, மேடைநாடக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியாள்கை நுணுக்கங்களை எல்லாம் தெரிந்து வைத்திருந்தேன்.

'போகாதே' நாடகத்தில் ஜோக்கிம் கதாநாயகன். மற்ற நடிகர்களைத் தேர்ந்தெடுப்பது சிக்கலாக இருந்தது. கொழும்பில் அப்போது பல மேடை நாடக நடிகர்கள் இருந்தாலும் எனது கற்பனையில் உதித்த பாத்திரங்களுக்கு வடிவம் கொடுக்கக் கூடியவர்களாக எவரையும் என்னால் தேர்ந்தெடுக்க முடியவில்லை.

நாடகத்தில் ஐந்து கதாபாத்திரங்கள். அதில் ஒன்று பெண். எல்லாவற்றையும் விட பெண் பாத்திரத்திற்கு நடிகையைத் தேர்ந்தெடுப்பது மிகவும் கஷ்டமான காரியம்.

பெண்கள் மேடை நாடகங்களில் நடிப்பது ஒரு கேவல மான காரியம் என்று கருதப்பட்ட காலத்தில், வறுமை காரணமாக நான்கைந்து யுவதிகள் மேடை நாடகங்களில் நடித்து வந்தார்கள். அதிலும் பலர் தமிழைச் சரியாக உச்சரிக்கத் தெரியாதவர்கள்.

கடைசியில் சந்திரகலா என்ற நடிகையைத் தேர்ந் தெடுத்தோம். இவரிடம் தமிழ் உச்சரிப்பு ஓரளவு நன்றாக இருக்கும். தமிழ் உச்சரிப்பில் பிழை ஏற்படும் போது திருத்தி னால் அதைக்கேட்டுப் பலமுறை உச்சரித்துப் பாடமாக்கிக் கொள்வார்.

ஜோக்கிமின் சிபாரிசின் பேரில் நாகராஜன் என்றொரு நடிகரையும், ஜோக்கிமோடு வங்கியில் வேலை பார்த்து வந்த பாரூக் என்பவரையும் தேர்ந்தெடுத்தேன். இன்னு மொரு பாத்திரத்திற்கு எவரையும் தேர்ந்தெடுக்க முடிய வில்லை. அது வயதான பாத்திரம். வயதான பாத்திரங் களிலேயே அது வரை நான் நடித்து வந்ததால் அந்தப் பாத்திரத்தில் நானே நடிக்கத் தீர்மானித்தேன்.

ஒத்திகைகள் ஆரம்பமாயின. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் முழுநாளும் ஒத்திகை. ஒத்திகைகள் நன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்த பின்னரே நாடகத்தை மேடையேற்றுவதற்கான திகதியை நிர்ணயிப்பதென்று தீர்மானித்துக் கொண்டோம். ஆனால் ஒத்திகைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே தேதி குறிப்பிடாமல் நாடகத்திற்கு விளம்பரங்கள் செய்யத் தொடங்கி விட்டோம். அதாவது நான் விளம்பர அட்டைகள் வரைவேன். அவற்றிற்குச் சட்டமடித்து தனக்குத் தெரிந்த ஹோட்டல்களில் தொங்க வைத்து விடுவான் ஜோக்கிம். அத்துடன் விசிட்டிங் கார்ட் அளவில் விளம்பரம் அச்சிட்டு விநியோகித்தோம்.

## தமிழ் நெஞ்சன் தலையீடு

இப்படி இருக்கையில் ஒரு நாள் இரவு. தமிழ் நெஞ்சன் என்ற நண்பரும். ஜெயசீலனும் என்னைத் தேடி வீட்டுக்கு வந்தார்கள். அப்போது தமிழ் நெஞ்சன் 'அமுதம்' என்ற சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தார். இவரை முதன் முதலில் சந்தித்தது பற்றியும் 'அமுதம்' சஞ்சிகை உதய மானது பற்றியும் பின்னர் சொல்கிறேன்.

'அமுதம்' பத்திரிகையின் சார்பாக, 'அமுதம்' ஆண்டு விழாவில் கலந்துகொண்டு, கலை நிகழ்ச்சிகளை நடத்து வதற்காகத் தென்னிந்திய திரைப்பட நடிகர்கள் வரப் போவதாகக் கூறி டிக்கட் அடித்து விற்றும் இருந்தார்கள். ஆனால் கடைசி நேரத்தில் தென்னிந்தியத் திரைப்பட நடிகர்கள் வருவதை இலங்கை அரசாங்கம் தடைசெய்து விட்டது. எனவே டிக்கட் வாங்கிய இரசிகர்கள் அமுதத்துடன் போர் தொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

''நீங்கள் ஒரு நாடகம் தயாரித்துக் கொண்டிருப்ப தாகக் கேள்விப்பட்டோம். அந்த நாடகத்தை 'அமுதம்' பத்திரிகையின் பெயரில் மேடையேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்காகவே வந்தோம். 'அமுதம்' விழாவுக்கு டிக்கட் வாங்கியவர்களெல்லாம் ஏமாற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நாடகத்தை யாவது காட்ட வேண்டும்'', என்றார்.

''என் டைரெக்ஷனில் உருவாகும் முதல் நாடகம் நன்றாக அமைய வேண்டுமென்பதே என் விருப்பம்'', என்றேன் நான்.

''நீங்கள் செய்வதானால் நன்றாக அமையும் என்ற நம்பிக்கையில் தான் உங்களிடம் வந்தோம். உங்களுக்குச் சம்மதமா?''

''என் சம்மதம் மட்டும் போதாது. நாடகத்தைத் தயாரிப்பவன் ஜோக்கிம்; இது வரை ஒத்திகைகள், விளம்பரங்கள் என்று நிறையப் பணம் செலவழித்தும் விட்டான். அவனைக் கேளாமல் நான் ஒன்றும் சொல்ல முடியாது.''

''நாடகத்தின் முழுச் செலவையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். அதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். நாங்கள் நிறைய 'பப்ளிசிட்டி' கொடுப்போம். நிறையக் கூட்டம் வரும். ஜோக்கிம் உங்கள் நண்பர் ஆயிற்றே. நீங்கள் சொன்னால் கட்டாயம் கேட்பார். எப்படியாவது அவரைச் சம்மதிக்க வைத்துவிடுங்கள்''.

மறுநாள் ஜோக்கிமைச் சந்தித்து இது பற்றிச் சொன்னேன். இருவரும் இதனால் ஏற்படக் கூடிய சாதக பாதகங்களைப் பற்றி வெகுநேரம் கலந்தாலோசித்தோம். இறுதியில் 'அமுதத்'திற்காக எமது முதல் நாடகத்தை மேடையேற்றத் தீர்மானித்தோம்.

'அமுதம்' ஆசிரியராகத் தமிழ் நெஞ்சன் இருந்தாலும், சஞ்சிகை அச்சிடுவதற்கான செலவு முழுவதையும் ஜெயசீலன் மூலமாக ஜெயசீலனின் தந்தையே வழங்கி வந்தார். எனவே, தமிழ் நெஞ்சன், ஜெயசீலன், ஜோக்கிம், நான் ஆகிய நால்வரும் ஒரு நாள் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் மேடையேறுவதற்கான செலவு முழுவதையும் தாம் பொறுப்பேற்றுக்கொள்வதாக இருவரும் சொன்னார்கள். இதுவரை செலவான பணம் தனக்குத் தேவையில்லையென்று ஜோக்கிம் கூறிவிட்டான். அத்துடன், இனிச் செய்யப்போகும் ஒத்திகைகள், ஒலி-ஒளி அமைப்பு, காட்சிச் சோடனை, மேக் அப், நடிகைக்கான சன்மானம் என்று எவ்வளவு செலவாகுமென்பதையும் அவர்களிடம் எழுதிக் கொடுத்தோம். மேடையைத் தாம் 'புக்' பண்ணி விளம்பரம் கொடுப்பதாகவும், ஏனைய செலவுகளை ஜோக்கிம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும், நாடகம் மேடையேறுவதற்கு முன், ஜோக்கிம் செலவு செய்த பணத்தை அவனிடம் கொடுத்து விடுவதாகவும் கூறி, ஒரு சிறு தொகைப் பணத்தை முன்பணமாகத் தந்தார்கள். 1962 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23 ஆந் திகதி, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நாடகத்தை மேடையேற்றுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நாள் குறிப்பிடப்பட்டுவிட்டபடியால் ஒத்திகைகளைத் துரிதப்படுத்தினோம். அநேகமாக ஒவ்வொரு நாளும் ஒத்திகை நடந்தது. நாடகம் நன்றாக அமையவேண்டும் என்பதற்காக ஜோக்கிமும் நானும் மிகுந்த சிரமத்தை எடுத்துக் கொண்டோம். அதுவும் நான் எழுதி, நெறிப்படுத்தி, நடிக்கும் முதல் நாடகம் எப்படியும் இரசிகர்கள் மத்தியில் வரவேற்பைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து நாடகத்தைத் தயாரித்தேன்.

ஆனால் தமிழ் நெஞ்சனும் ஜெயசீலனும் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை டிக்கட் விற்கவுமில்லை; சரியான முறையில் விளம்பரம் கொடுக்கவுமில்லை. சரஸ்வதி மண்டபத்தை 'புக்' பண்ணிவிட்டுப் பேசாமல் இருந்து விட்டார்கள். காணும் போது அதைச் செய்யப் போகிறோம், இதைச் செய்யப்போகிறோம் என்று சொன்னார்களே தவிர எதுவுமே செய்யவில்லை. இதன் விளைவு நாடகத்தன்று விஸ்வரூபமெடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA 22-11-2000 LIBRARY

## நான் எழுதி, நெறிப்படுத்தி, நடித்த முதல் நாடகத்தின் கதி :

நாடகம் ஆரம்பமாவதற்கு இன்னும் பத்துப்பதினைந்து நிமிடங்களே இருந்தன. நடிகர்கள் அனைவரும் 'மேக் அப்' செய்தாகிவிட்டது. ஒளி அமைப்பைக் கவனிப்பதற் காக நண்பர் லெனின் மொறாயஸ் வந்திருந்தார். நாடகத்தை மேடையேற்றுவதற்கு நாம் தயார். ஆனால் மண்டபத்தில் சுமார் பத்துப் பேர் மட்டும் அமர்ந்திருந் தார்கள். அதில் ஒருவர் ஜோக்கிமின் தந்தையார். மகனின் நடிப்பைப் பார்ப்பதற்காக இரசியமாக டிக்கட் வாங்கி வந்தமர்ந்திருந்தார்.

நான் ஜோக்கிமைத் தனியாக அழைத்து 'பணத்தை வாங்காமல் மேடையில் ஏறி விடாதே. மண்டபம் நிறைந்திருந்தால் கூடப் பரவாயில்லை. பணத்தைப் பார்க்காமல் நடிக்கலாம். எனவே யார் வந்து கேட்டாலும், பணம் கைக்கு வந்தால்தான் மேடையேறுவோம் என்று சொல்லி விடு! என்றேன். அப்படியே செய்வதாக ஜோக்கிமும் ஒப்புக் கொண்டான்.

நேரம் ஆறரை மணியாகிவிட்டது. தமிழ் நெஞ்சன் என்னிடம் வந்து ''டிக்கட் சரியாக விற்பனையாகவில்லை. நாடகத்தை மேடையேற்றுங்கள் நாளைக்கே பணத்தைத் தந்து விடுகிறோம்'', என்றார்.

''டிக்கட் விற்பனையைப் பொறுப்பேற்றது நீங்கள். அதை நீங்கள் சரிவரச் செய்யவில்லை. அத்தோடு இந்த விஷயம் பற்றி என்னுடன் கதைத்துப் பிரயோசனம் இல்லை. பணம் செலவழித்தவன் ஜோக்கிம். அவனுடன் தான் பேசவேண்டும்.'' என்றேன்.

தமிழ் நெஞ்சனிடமிருந்து பலர் ஜோக்கிமிடம் தூது போனார்கள், அவன் கடைசிவரை மசியவில்லை. இந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22-11-2000

தகராறில் மணியும் ஏழாகிவிட்டது. கடைசியாக ஏழரை மணிக்கு பணத்தைக் கொண்டு வந்து தந்தார்கள்.

வீதியில் போவோர் வருவோரையெல்லாம் அழைத்து அமர்த்தி, சுமார் 25, 30 பேருக்கு நாடகத்தைக் காட்டினோம். மீண்டும் ஒரு முறை இதே நாடகத்தை நிறைய இரசிகர்கள் முன்னிலையில் மேடையேற்ற வேண்டு மென்று ஜோக்கிமும் நானும் தீர்மானித்துக் கொண்டோம். ஆனால் போகாதே என்ற இந்த நாடகம் பின்னர் மேடை யேற்றப்படவில்லை.

## தமிழ் நெஞ்சன் அறிமுகம்

நண்பர் தமிழ் நெஞ்சனை முதன் முதலில் சந்தித்தது பற்றியும் 'அமுதம்' பத்திரிகை உருவாகியது பற்றியும் சொல்வதற்கு இதுவே தக்க இடமென்று நினைக்கின்றேன்.

1960 ஆம் ஆண்டில் ராம் சுந்தரின் அமெச்சூர் நாடகக் குழு நாடகங்களில் ஜி. ராஜா என்றொரு நண்பர் எம்முடன் நடித்தார். அவரது சகோதரியும் நடித்தார். நண்பர் ராஜா அப்போது வீட்டில் ஒரு அச்சகம் வைத்திருந்தார். அதாவது 'மெஷின்' இல்லாத பிரஸ். வீட்டில் வைத்து அச்சுக் கோத்து அதைப் பக்கத்திலுள்ள அச்சகத்தில் கொடுத்து அடித்து வந்தார். அங்கு நான் பலமுறை சென்றதுண்டு. நண்பர் ராஜாவின் தாயார் என் மீது மிகுந்த மரியாதையும் பிரியமும் வைத்திருந்தார். இயற்கையாகவே வீட்டுக்கு வந்தவர்களை உபசரிப்பதில் வல்லவர். இங்கு தான் முதன் முதலில் தமிழ் நெஞ்சனை நான் சந்தித்தேன். அப்போது அவர் 'இளைஞர் உலகம்' என்றொரு சஞ்சிகையை நடத்திக் கொண்டிருந்தார். இந்தச் சஞ்சிகை நண்பர் ராஜாவின் அச்சகத்தில் அச்சிடப்பட்டுவந்தது.

ராம் சுந்தர் என்னைத் தமிழ் நெஞ்சனுக்கு அறிமுகம் செய்து வைத்தார். தான் நடத்தும் இளைஞர் உலகம் சஞ்சிகைக்கு ஏதாவது எழுதித்தரும்படி தமிழ் நெஞ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க 'நீ வந்து சேராயோ,' 'தாய்க்குலம்' என்று இரண்டு கவிதைகள் கொடுத்தேன். இரண்டுமே இளைஞர் உலகத்தில் பிரசுரமாயின.

தமிழ் நெஞ்சனுக்கும் எனக்கும் இடையே பத்திரிகாசிரியன் எழுத்தாளன் என்ற ரீதியில் நட்பு வளர்ந்தது.

ஒரு நாள் இருவரும் உரையாடிக் கொண்டிருந்தபோது 'இளைஞர் உலகம்' சஞ்சிகையின் விற்பனை குறைவாக இருப்பதாகவும், விற்பனையை அதிகரிப்பதற்கு என்ன செய்யலாம் என்றும் கேட்டார்.

'இளைஞர் உலகம்' என்ற பெயரை முதலில் மாற்ற வேண்டும் என்று சொன்னேன்.

''ஜனரஞ்சகமான ஒரு சஞ்சிகை நடத்துவதானால், கவர்ச்சிகரமான ஒரு பெயர் தேவை, மூவர்ண அட்டைப் படம் தேவை. நிறையப் பக்கங்கள் இருக்க வேண்டும். நிறைய துணுக்குகள் வேண்டும், சிறுகதைகள் இலக்கிய கோட்டைத் தொட்டுக் கொண்டில்லாமல் திடீர் முடிவுடன் கூடிய ஓ. ஹென்றி பாணிக் கதைகளாக இருக்கவேண்டும். இவற்றையெல்லாம் செய்வது இலேசான காரியமல்ல. இப்படிச் சிந்திக்கும் திறமைசாலிகள் நிறையப் பேர் தேவை,'' என்றும் சொன்னேன்.

தமிழ் நெஞ்சன் நான் சொன்னவற்றையெல்லாம் ஒப்புக் கொண்டார். 'இளைஞர் உலக'த்திற்குப் பதிலாக என்ன பெயர் வைக்கலாம்? என்று கேட்டார்.

''ஜனரஞ்சகச் சஞ்சிகை ஒன்று எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதற்கு உதாரணமாக விளங்குவது 'குமுதம்.' எனவே குமுதத்தைப்போல் 'அமுதம்' என்று வைத்தால் என்ன?'' என்று கேட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இளைஞர் உலகம்' அமுதமாக மாறியது. முதல் அட்டைப் படம் மூவர்ணத்தில் நானே வரைந்து கொடுத்தேன். அதுவும் குமுதம் அட்டைப்படம் போலவே வரைந்து 'அமுதம்' என்ற எழுத்துக்களையும் குமுதம் சஞ்சிகையில் உள்ளது போலவே வரைந்து கொடுத்தேன். சஞ்சிகை வெளிவந்த போது, பலர் குமுதம் என்று நினைத்து அமுதத்தை வாங்கிச் சென்றனர்.

இதன் பின்னர் நடந்த சில கசப்பான சம்பவங்களுக்குப் பின், அமுதத்திற்கும் எனக்கும் இடையே இருந்த தொடர்பை நிறுத்திக் கொண்டு விட்டேன். அதன் பின்னர் சுமார் ஓராண்டு காலத்தில் 'போகாதே', நாடகத்தில் ஏற்பட்ட தொடர்பு நாடக அரங்கேற்றத்துடன் முடிவடைந்தது.

## விழுமியங்களின் வேறுபாடு

1960 ஆம் ஆண்டு முதல் 1968 ஆம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியில் தான் நான் எழுதிய சிறுகதைகளில் அநேகமானவை பிரசுரிக்கப்பட்டன.

1962 ஆம் ஆண்டு, கல்முனை எழுத்தாளர் சங்கத்தினால், இலங்கையர்கோன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்பட்டது. இதற்கு நான் அனுப்பிய 'குண்டு மாமா' என்ற சிறுகதைக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. நான் எழுதிய சிறுகதைகளில் அதிக சன்மானத்தைப் பெற்றுத்தந்த சிறு கதை இதுதான்.

பரிசளிப்பு விழா கல்முனையில் நடந்தது. நான் போகவில்லை.

ரஹ்மான் போவதாகச் சொன்னார். அவரிடம் ஒரு கடிதம் எழுதிக் கொடுத்துப் பரிசுப் பணத்தைப் பெற்று வரும்படி சொன்னேன். அவரும் கொண்டு வந்து தந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் அப்போது பெரிய பணக்கஷ்டம். ஏதோ தகராறில் என் தந்தையார் தான் செய்து வந்த வேலையை விட்டுவிட்டார். எனக்கோ வேலை எதுவுமில்லை.

நூறு ரூபாவைக் கொண்டுபோய் என் தாயாரிடம் கொடுத்தேன். இது என் தந்தையாருக்குத் தெரிந்து விட்டது. ஐந்து ரூபா, பத்து ரூபா என்று அம்மாவிடம் இருந்து உருவிக் கொண்டு போகத் தொடங்கினார்.

ஒரு நாள் அம்மா என்னை அழைத்து ''வீட்டுச் செலவுக்கே காசு போதாமல் இருக்கும்போது, நீ தந்த நூறு ரூபாவிலிருந்து ஐந்து பத்தென்று எடுத்துப் போய் அப்பா குடித்து விட்டு வருகிறார். வளர்ந்த பிள்ளை நீயாவது கேட்கக்கூடாதா?'' என்று கேட்டார். எனக்கும் அவர் சொல்வது நியாயமாகவே பட்டது. அது மட்டுமா நான் சம்பாதித்த நூறு ரூபாயல்லவா?

வழக்கமாக நான் என் தந்தையாரோடு முக்கிய தேவை எதுவுமின்றிக் கதைப்பதில்லை. அன்று சற்றுத் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, ''வீட்டு நிலைமை தெரியாமல் இப்படி ஐந்து பத்தென்று கொண்டுபோய்க் குடித்துவிட்டு வருகிறீர்களே,'' என்று கேட்டு விட்டேன்.

அவருக்கு வந்ததே ஒரு கோபம் ''நான் ஒரே நாளில் குடித்து மூத்திரம் பெய்யும் காசடா இது. உனக்கு இந்த நூறு ரூபா பெரிதாக இருக்கலாம்,'' என்றார்.

அதன் பின் என் தந்தையாரோடு நிதிப்பிரச்சினைகள் பற்றி நான் கலந்துரையாடியதே கிடையாது.

சிறுகதைப் போட்டியின் நிபந்தனைகளில் ஒன்று, பரிசு பெறும் முதல் மூன்று கதைகளும் தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் என்பதாகும். இதன்படி 'குண்டுமாமா' சிறு கதை 1963 ஆம் ஆண்டு தினகரனில் பிரசுரமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரெயின்போ அச்சகமும் இலக்கிய இரசிகர் குழுவும்

அடிக்கடி ரெயின்போ அச்சகத்திற்குச் செல்லத் தொடங்கிய நான் நாளடைவில் ஒவ்வொரு நாளும் செல்லத் தொடங்கினேன். கரும்பைத்தேடி எறும்பு போவதைப்போல, அங்கு வரும் எழுத்தாளர்களைச் சந்திக்கவும், அவர்களுடன் இலக்கியம் பற்றிப் பேசவும் ரகுமான் அவர்களும் கனகரத்தினம் அவர்களும் வாங்கிக் குவிக்கும் புத்தகங்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றை வாசிப்பதற்காகவும் ஒவ்வொரு நாளும் நான் அங்கே போகத் தொடங்கினேன். நான் நாள் தவறாது அங்கு வருவதைக் கண்ட ரகுமானும் கனகரத்தினமும், ''உங்கள் செலவுக்குப் பணம் தருகிறோம். இங்கிருந்தபடியே நீங்கள் எழுதலாம். அத்துடன் நாம் இருவரும் இல்லாத வேளை களில் அச்சகத்தைப் பார்த்துக் கொள்ளலாம். 'புரூப் ரீடிங்' போன்றவற்றையும் கவனித்துக் கொள்ளலாம். இதனால் உங்களுக்கும் நன்மை ஏற்படும் எங்களுக்கும் நன்மை. ஆனால் இந்த அச்சகத்தில் ஒரு தொழிலாளியாக நாம் உங்களைக் கருதவில்லை. உங்களை ஒரு நண்பராகவே கருதி அதைக் கேட்கிறோம்.'' என்றார்கள். எனக்கும் அது நல்ல யோசனையாகவே பட்டது. ஒப்புக்கொண்டேன்.

ரெயின்போ அச்சகத்தில் 'புரூப் ரீடிங்' போன்ற சிறு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிய நான் நாளடைவில் அச்சகத்தின் முழு நிர்வாகத்தையுமே கவனிக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. ரகுமான் அடிக்கடி வெளியூர் போவார். அப்போதெல்லாம் அச்சகத்தின் பொறுப்பு முழுவதும் என் வசமாயிற்று.

திரு. ரகுமான் இலக்கிய நண்பர்கள் பலருடன் சேர்ந்து 'இலக்கிய ரசிகர் குழு' என்பதோர் அமைப்பை ஏற்படுத்தி இருந்தார். இந்த அமைப்பு பல இலக்கியக் கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் ஒழுங்கு செய்து, தலைநகரில் இலக்கிய சேவை செய்து வந்தது. 'இலக்கிய ரசிகர் குழு,'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை ரீதியில் ஒரு சிறு கதைப் போட்டியையும் நடத்தியது. அந்தப் போட்டியில் நானும் கலந்து கொண்டேன். 'மோகம்' என்ற எனது சிறுகதைக்கு மூன்றாம் பரிசும் கிடைத்தது. இந்தப் போட்டியில் பரிசு பெற்ற கதைகள், ரகுமான் அப்போது நடத்தி வந்த 'இளம்பிறை' என்ற சஞ்சிகையில் தொடர்ந்து பிரசுரிக்கப் பட்டன. பின் 'போட்டிக் கதைகள்' என்ற தலைப்பில் பரிசு பெற்ற கதைகளுடன் போட்டியில் நடுவர்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட சுமார் பத்துக்கதைகள் புத்தக உருவில் வெளியிடப்பட்டது.

## 'போஸ்டர்' பிறந்த கதை

இந்த காலகட்டத்தில் தான் என்று நினைக்கிறேன். இளங்கீரன் அவர்கள் 'மரகதம்' என்ற பெயரில் ஓர் இலக்கியச் சஞ்சிகையை வெளியிடத் தொடங்கினார். முழுக்க முழுக்க சந்தாப் பணத்தைக் கொண்டே இந்த சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டது.

அப்போது தினகரனில் ஓவியராக இருந்த 'மூர்த்தி' என்ற ஓவியரே 'மரகதத்'திற்கு மூவர்ணத்தில் அட்டைப் படம் வரைந்தார். இலக்கியத் தரத்தோடு வெளிவந்த மரகதத்தில் தங்கள் கதைகள் வெளிவரவேண்டுமென்று பல முன்னணி எழுத்தாளர்கள் இளங்கீரன் அவர்களிடம் படையெடுத்துக் கொண்டிருந்தார்கள், 'மரகதம்' சஞ்சிகை ஆரம்பத்தில் ரெயின்போ அச்சகத்திலேயே அச்சிடப்பட்டது. மரகதம் முதல் இதழ் வெளிவந்து, இலக்கிய ரசிகர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்த வேளை ஒரு நாள் ''மரகதத்திற்கு ஒரு கதை எழுதித்தாரும். அடுத்த இதழில் பிரசுரிக்கலாம்,'' என்று சொன்னார் இளங்கீரன். என் காதுகளையே என்னால் நம்ப முடியவில்லை. அன்று முன்னணியில் திகழ்ந்த எழுத்தாளர்கள் பலர் தமது கதைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கீரனை மொய்த்துக் கொண்டிருந்த சமயம், சொற்பக்கதைகளே எழுதியுள்ள இளைஞனான என்னிடம் கதை எழுதித் தரும்படி இளங்கீரன் என்னைக் கேட்டது. எனக்கொரு பெரிய கௌரவமாகவே பட்டது.

என்ன கதை எழுதுவதென்று தலையைப் போட்டுக் குழப்பிக் கொண்டேன், இளங்கீரன் என்னிடம் கதை எழுதித்தரும்படி கேட்டதிலிருந்து எனக்கு வேறு எதைப் பற்றியுமே சிந்திக்க முடியவில்லை. அன்றிரவு நித்திரைக்குச் செல்லும் போதும் இதே சிந்தனைதான். மறுநாள் காலையில் கண்விழித்தபோது கதைக்கான 'கரு' கிடைத்து விட்டது. எழுந்த வேகத்தோடு கதையின் ஆரம்பத்தை எழுதினேன். ஆனால் ஓரிரு பக்கங்கள் எழுதி முடித்த பின், தொடர்ந்து எழுத முடியவில்லை. சற்று அவகாசம் தேவைப்படுவதாகத் தோன்றியது. காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு கொட்டாஞ்சேனை வாசகசாலைக்கு வந்தேன். அங்கு பாதிக்கதை எழுதி முடிந்தது. சுமார் இரண்டு மணி வாக்கில் அங்கிருந்து புறப்பட்டு, மருதானை நியு ஒலிம்பியா தியேட்டருக்கு வந்து சேர்ந்தேன். இதற்கு ஒரு காரணமிருந்தது. நான் எழுதிக்கொண்டிருந்த கதையில் ஒரு பிச்சைக்காரப் பையன் நியு ஒலிம்பியா தியேட்டரில் ஓர் ஆங்கிலப் படம் பார்க்கப்போய், சனக்கூட்டத்தில் நெருக்குண்டு கை முறிந்து விடுவதாக ஒரு காட்சி வருகிறது. அந்தக் காட்சியை அதே தியேட்டரில் வைத்து எழுதினால் நன்றாக அமையலாம் என்றொரு நம்பிக்கையில் போனேன். சுமார் 2½ மணிக்கு 'கெலரி' கியூவில் போய் நின்று கொண்டு எழுதத் தொடங்கினேன். பின் டிக்கட் வாங்கிக் கொண்டு உள்ளேபோய், படம் தொடங்கும் வரை கிடைத்த பத்துப் பதினைந்து நிமிடங்களையும் எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொண்டேன். படம் முடிந்து வெளியே வந்தபோது முக்கால்வாசிக் கதை முடிந்து விட்டது. நேரே வீட்டுக்குக் போய், கதையை எழுதி முடித்துவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் 'போஸ்டர்' என்ற சிறுகதையுடன் இளங்கீரனைச் சந்தித்தேன். கதையைப் படித்துப் பார்த்து விட்டு ''பிரசுரிக்கலாம்,'' என்று கூறிய இளங்கீரன், ''ஜோர்ஜ், நீங்களும் ஓர் ஓவியராயிற்றே, இந்தக் கதைக்கான படத்தையும் நீங்களே வரைந்து தாருங்களேன்,'' என்றார். அதன்படி, படத்தையும் வரைந்து கொடுத்தேன். அடுத்த 'மரகதம்' இதழில் போஸ்டர் என்ற எனது சிறுகதை நான் வரைந்த படத்துடன் வெளியாயிற்று.

## நான் எழுதிய முதல் நாவல்

அப்போது 'ரெயின் போ அச்சகத்தின் பங்குதாரர்கள் இருவர், ஒருவர் ஜானப் எம். ஏ. ரகுமான் அவர் அச்சகத்திலேயே இருந்து முகாமையாளராகக் கடமை யாற்றுபவர், அச்சகத்தின் முழுப்பொறுப்பும் அவருடையதே. மற்றவர் திரு. கனகரத்தினம். இவர் ஒரு தனியார் நிறுவனத்தில் தொழில் பார்ப்பவர். மாலை ஐந்து ஐந்தரை மணிக்குத் தன் வேலையை முடித்துக் கொண்டு 'ரெயின்போ' அச்சகத்திற்கு வந்து விடுவார். அச்சகத்தின் நடைமுறைப் பிரச்சினைகளையெல்லாம் கவனித்துவிட்டு இரவு சுமார் எட்டு எட்டரை மணிக்கு அச்சகத்திலிருந்து புறப்படுவார். அவரோடு நானும் புறப் படுவேன். இருவரும் சுமார் இரண்டு மைல் தூரம் நடந்தே வருவோம். எமது வசிப்பிடங்கள் சுமார் கால் மைல் தூர வித்தியாசத்தில் இருந்தன.

தினகரன் பத்திரிகை ஒரு விழா நடத்தப்போவதாகவும் அதற்காக, சிறுகதை, கவிதை, நாவல் போட்டிகளை நடத்தப் போவதாகவும் தினகரனில் விளம்பரங்கள் வெளிவந்தன.

இவற்றை வாசித்த கனகரத்தினம், என்னையும் ஒரு நாவல் எழுதும்படித் தூண்டினார். அதுவரை நாவலே எழுதி அறியாத எனக்கு, உள்ளூர சற்றுப் பயம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் எழுதித்தான் பார்த்து விடுவோமே என்றதோர் அசட்டுத் தைரியம்.

சிறுகதைகள் எழுதி எழுதி, எடுத்த உடனேயே விஷயத்தைப் போட்டு உடைத்து விடும் தன்மை என்னுள் ஆழப்பதிந்துவிட்டது எனக்குத் தெரியும். கதையின் ஓட்டத்திற்குத் தேவையற்ற ஒரு வசனத்தை எழுதி விட்டாலும், அது எவ்வளவு தான் அழகாக இருந்தாலும் தேவையற்ற ஆலாபனை என்று வெட்டி விடும் என் சுபாவத்திற்கு நாவல் ஒத்துவராது என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் கனகரத்தினத்திற்கு என் எழுத்தின் மேல் இருந்த நம்பிக்கை என்னையும் பற்றிக் கொள்ளவே நாவல் எழுதத் தொடங்கினேன்.

ஒவ்வொரு நாளும் குறைந்தது மூன்று பக்கங்களாவது எழுதித்தன்னிடம் காட்ட வேண்டுமென்று கனகரத்தினம் உத்தரவிட்டார். நான் ஒரு Slow writer என்பது அவருக்குத் தெரியும்.

ஒவ்வொரு நாளும் மாலை கனகரத்தினம் அச்சகத்திற்கு வந்ததும் நான் எழுதிய பக்கங்களை அவரிடம் கொடுப்பேன். அதையும் எடுத்துக்கொண்டு பக்கத்து ஹோட்டலில் தேனீர் குடிப்பதற்கு என்னை அழைத்துச் செல்வார். அங்கே, தேனீர் குடித்துக் கொண்டே நான் அன்று எழுதியவற்றை வாசித்து முடிப்பார். பின் இருவரும் அச்சகத்திற்கு வருவோம். தன் அலுவல்களையெல்லாம் முடித்துக் கொண்டு கனகரத்தினம் புறப்படுவார். நானும் அவருடன் சேர்ந்து கொள்வேன். வீடு போய்ச் சேரும்வரை நான் இன்று எழுதியதை விமர்சிப்பார்-கனகரத்தினம். அவர் ஒரு பிரமாதமான இரசிகர். சில சமயங்களில் என் எழுத்தில் எனக்கே தெரியாத சில விஷயங்களை விமர்சித்து இரசிப்பார். இப்படியான ஒரு கனகரத்தினம் கிடைத்தால், எழுதத் தெரியாதவர்கள் கூட நாளடைவில் பெரிய எழுத்தாளர்களாக மாறிவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகரத்தினம் அப்போது 'ஸ்டேஸ்' ரோட்டில் வசித்து வந்தார். வழக்கமாக அவர் வீடுவரை சென்று, அவரை விட்டுவிட்டு மீண்டும் திரும்பி நான் வசித்து வந்த 'கிரேண்ட்பாஸ்' வீதிக்கு வருவதே என் வழக்கம். நான் நாவல் எழுதத் தொடங்கிய சில நாட்களில், கனகரத்தினத்தின் இருப்பிடத்திற்கருகே ஒரு புதிய கட்டிடம் எழும்பிக் கொண்டிருந்தது. அது என்ன கட்டிடம் என்று ஒரு நாள் கனகரத்தினத்தைக் கேட்டேன். ''ஒரு தியேட்டர் கட்டுகிறார்களாம்,'' என்றார். என் நாவலுடன் அந்தக் கட்டிடமும் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. கடைசியில் 'ஜெசீமா' தியேட்டர் என்ற பெயரில் அந்தச் சினிமாக் கொட்டகையின் திறப்பு விழாவும் நடந்தது.

''தியேட்டரும் கட்டி முடித்துவிட்டார்கள். உங்கள் நாவல்தான் இன்னும் முடியவில்லை,'' என்றார் கனகரத்தினம் சிரித்துக் கொண்டு.

இன்றுகூட சில வேளைகளில் அந்தத் திரைப்பட மாளிகையைக் கடந்து செல்லும்போது எனது முதல் நாவல் எனக்கு ஞாபகம் வருவதுண்டு.

ஒருவாறாக நாவலை எழுதி முடித்து, 'பொம்மலாட்டம்' என்ற பெயரும் வைத்தேன்.

என்னைவிட அதிகமாக சந்தோஷப்பட்டவர் கனகரத்தினம் என்றுதான் கூறவேண்டும்.

'மீண்டுமொரு முறை, நாவலை முதலில் இருந்து தொடர்ச்சியாக வாசித்துப் பார்க்கவேண்டும்,' என்று கூறி அதனை எடுத்துச் சென்றார் கனகரத்தினம்.

இரண்டொரு நாட்களில் மீண்டும் அதனை என்னிடம் தந்தவர், ''ஜோர்ஜ், இந்த நாவலுக்கு உங்களுக்குக் கட்டாயம் பரிசு கிடைக்கும் AT LEAST மூன்றாவது பரிசாவது கிடைக்கும்,'' என்றார். அவர் அப்படிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதைத் கேட்பதற்கு மிகவும் சந்தோஷமாகவே இருந்தது. ஆனால் பல இடங்களில் வெட்டித் திருத்தி எழுதப்பட்டிருந்ததால் நாவலை மீண்டும் அழகான கையெழுத்தில் பிரதி பண்ணச் சொன்னார். மிகவும் சிரமப்பட்டு, ஒரு கார்பனும் வைத்துப் பிரதி பண்ணினேன். இரண்டு பிரதிகளையும் அச்சகத்தின் 'பைண்ட'ரிடம் கொடுத்து, இரண்டு புத்தகங்களாகக் கட்டுவித்தார். கனகரத்தினம். ஒன்றைப் போட்டிக்கென அனுப்பி வைத்தேன்.

கனகரத்தினம் எனக்களித்த உற்சாகத்தை நான் சில வேளைகளில் நினைத்துப் பார்ப்பதுண்டு. இது எனக்கவர் செய்த நன்மைதான். இருந்தாலும் அதுவே எனக்கவர் செய்த தீமையாகவும் சில சமயங்களில் தோன்றும்.

ஆரம்ப காலந்தொட்டே கலாநிதி சிவத்தம்பி, கனகரத்தினம் போன்ற பலரது உற்சாகத்தின் பேரிலேயே நான் எழுதிவந்தேன். பின்னர் இப்படியாக உற்சாகமளிக்க யாரும் இல்லாமல் போனதும் என்னால் எழுதவே முடியாமற் போய்விட்டது. செல்வங் கொடுத்து வளர்க்கப்பட்ட குழந்தை போல ஆகிவிட்டேன். இது எழுதுவதை நிறுத்திக் கொண்டதற்கான, நான் கொடுக்கும் கற்பனைக் காரணமாகவும் இருக்கலாம்.

எவ்வளவோ கஷ்டப்பட்டு எழுதி அனுப்பிய 'பொம்மலாட்டம்' என்ற நாவலுக்குப் பரிசு கிடைத்ததா?

போட்டியே நடைபெறவில்லை.

தினகரன் விழாவும் போட்டியும் ரத்துச் செய்யப்பட்டு விட்டன.

## பெரி. சுந்தரலிங்கமும் செய்திப் பத்திரிகையும்

கு. இராமச்சந்திரன் என்றொரு நண்பர். மேடை, வானொலி நடிகர், கவிஞர், வானொலி நாடக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், ஒரு நாள் என்னைச் சந்தித்தார்.

பெரி. சுந்தரலிங்கம் என்ற தனது நண்பர் 'செய்தி' என்ற பெயரில் ஒரு பத்திரிகை வெளியிடப் போவதாகவும், அதற்குப் படங்கள் வரையவும், கதை கட்டுரைகள் எழுதவும், உதவியாசிரியராகக் கடமையாற்றவும் ஒருவர் தேவையென்றும் அதற்கு நானே பொருத்தமானவன் என்று தான் சிபாரிசு செய்திருப்பதாகவும் கூறி எனது சம்மதத்தைக் கேட்டார். நானும் சம்மதித்தேன்.

பெரி. சுந்தரலிங்கத்தைச் சந்தித்தேன். குள்ளமான உருவம், கறுப்பு நிறம். வெள்ளைக் காற்சட்டை, வெள்ளை சேர்ட், சோடா பாட்டில் கண்ணாடி, எப்போதும் முகத்தில் தவழும் அசட்டுச் சிரிப்பு, பழகுவதற்கு மிகவும் இனியவர். சட்டக்கல்லூரி மாணவர். முதல் சந்திப்பிலேயே அவரை எனக்கும், என்னை அவருக்கும் பிடித்துக்கொண்டு விட்டது.

ரெயின்போ அச்சகத்திலிருந்து செய்திப் பத்திரிகை அலுவலகத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். பழைய சோனகத் தெருவில் ஒரு மாடிக் கட்டிடத்தின் மேல் மாடியில் ஓர் அறை. இதுதான் செய்திப் பத்திரிகை அலுவலகம், அச்சுக் கோப்பதும் அந்த அறையில்தான் ஆனால் அச்சிடுவது மட்டும் வேறோர் அச்சகத்தில்.

கதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் படங்களும் தலைப்புகளும் வரைதல், சினிமாப் பக்கம் EDIT பண்ணுதல், கதை கட்டுரைகள் எழுதுதல், புரூப் திருத்துதல் இவற்றுடன் நானாகவே அச்சுக் கோப்பதற்குப் பழகி, சில சமயங்களில் அச்சுக் கோத்தும் இருக்கின்றேன்.

இந்த நாட்களில் கு. இராமச்சந்திரன். குமாரசிங்கம், முத்துராஜன், ஸ்ரனீ கனகரத்தினம் என்ப பல நண்பர்கள் செய்தி காரியாலயத்திற்கு வந்து போவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சடிக்கப்பட்டு வரும் பத்திரிகைத் தாள்களை மடித்து விலாசமெழுதி விநியோகஸ்தர்களுக்கு அனுப்புவதும் இவர்கள்தான். செய்திப் பத்திரிகையின் முன்னேற்றத்திற் காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் நண்பர்கள் அனைவரும் ஒரு முகமாக ஆர்வத்துடன் செயற்பட்டார்கள். பத்திரிகையின் தரமும் நாளுக்கு நாள் உயர்ந்து வந்தது. விநியோகஸ்தர்கள் அதிகம் பிரதிகளை அனுப்பி வைக்குமாறு கேட்டு எழுதத் தொடங்கினார்கள்.

## ராஜாத்தி பதில்கள்

செய்தியில் கேள்வி-பதில் பகுதியொன்றைத் தொடங்க வேண்டுமென்று நண்பர் பெரி. சுந்தரலிங்கம் ஆசைப் பட்டார். அத்துடன் பதில் அளிப்பவர் ஒரு பெண்ணாக இருந்தால் கவர்ச்சிகரமாக இருக்குமென்றும் சொன்னார். உண்மையில் தானே கேள்விகளுக்குப் பதில் கொடுக்கப் போவதாகவும், ஆனால் ஒரு பெண்ணின் பெயரில் அதைச் செய்யவேண்டுமென்றும், ஒரு பெண்தான் பதில் அளிக்கிறாள் என்பதை வாசகர்கள் நம்பும்படி செய்வது எப்படி என்றும் கேட்டார். எனக்கொரு யோசனை தோன்றியது. ''ஒரு பெண்ணின் புகைப்படத்தைப் பிரசுரிப்போம்,'' என்றேன். ''எந்தப் பெண்ணின் புகைப்படத்தைப் பிரசுரிப்பது? இப்படி ஒரு காரியத்திற்கு எந்தப் பெண் தனது புகைப்படத்தைத் தரப் போகிறாள்? அதுவும் பெண்ணைத் தெரிந்தவர்கள் புகைப்படத்தைப் பார்த்துவிட்டால் நாம் மாட்டிக் கொள்வோம்,'' என்றார். ''ஒரு அழகான பெண்ணின் புகைப்படம் போல் நாமே ஒரு படத்தை வரைந்தால் என்ன?'' என்று கேட்டேன் நான். ''அப்படி வரையமுடியுமா?'' என்று கேட்டார் சுந்தரலிங்கம். ''நான் வரைந்து தருகிறேன்.'' என்று கூறி ஓர் அழகான பெண்ணின் புகைப்படம் போலவே ஒரு படத்தை வரைந்து காட்டினேன். சுந்தரலிங்கத்திற்கு சந்தோஷம் பிடிபடவில்லை. உடனே அதை 'புளொக்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து, அந்தக் கற்பனைப் பெண்ணுக்கு ராஜாத்தி என்று பெயரும் சூட்டி, அடுத்த வாரத்திலிருந்தே 'ராஜாத்தி பதில்கள்' என்ற கேள்வி பதில் பகுதியை படத்துடன் ஆரம்பித்தார் சுந்தரலிங்கம். அதன் பின் ராஜாத்தியைப் பார்ப்பதற்காக செய்திக் காரியாலயத்திற்குப் படையெடுத்தவர்கள் பலர்.

செய்தியில் ஒரு தொடர்கதை பிரசுரிக்க வேண்டும் என்று பெரி. சுந்தரலிங்கம் கூறினார். 'பொம்மலாட்டம்' என்ற எனது நாவல் தினகரன் காரியாலயத்தில் இருப்பதாகக் கூறினேன். அதைக் கொண்டு வந்தால் வாராவாரம் தொடர்கதையாகப் பிரசுரிக்கலாம் என்றார். நானும் தினகரன் ஆசிரியர் திரு. சிவகுருநாதனிடம் சென்றேன். போட்டி ரத்துச் செய்யப்பட்டாலும், தினகரனில் தொடர் கதையாகப் பிரசுரிக்கலாம் என்றார். வேண்டாம் என் நாவலைத் திருப்பித் தந்து விடுங்கள், அதுவே போதும் என்றேன். இரண்டொரு வாரங்களில் நாவல் திரும்பவும் என் கைக்கெட்டியது. அடுத்த வாரமே செய்தியில் அது தொடர் கதையாக வெளிவரத் தொடங்கியது.

இப்படியே நான் எழுதிய பல சிறு கதைகளும் கட்டுரைகளும் செய்தியில் வெளிவந்தன.

## தேடிவந்த வேலை

இந்த நாட்களில் என் தந்தையார் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாய் ஆகிவிட்டார். இதைக் கேள்வியுற்று அவர் முன்னர் வேலைபார்த்த தொழிலகத்தின் அதிபர், நான் வீட்டில் இல்லாத சமயம் அப்பாவைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார். அவர் பெரிய பணக்காரர். நிறைய தொழிலகங்களுக்கு அதிபர். சிங்களவர், பெயர் முதலியார் முதலிகே. அவரது திருநாமம் இன்று கொழும்பிலுள்ள தெருக்களில் ஒன்றுக்குச் சூட்டப்பட்டுள்ளது. நான் சிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையனாக இருந்த காலத்திலிருந்தே அவருக்கு என்னைத் தெரியும்.

''இப்போது மகன் என்ன செய்கிறார். வேலை ஏதும் செய்கிறாரா?'' என்று கேட்டதற்கு ஜீ. சி. ஈ. பாஸ் பண்ணிவிட்டு வேலை தேடிக் கொண்டிருக்கிறான்,'' என்று என் அம்மா பதில் சொல்லி இருக்கிறார்.

''உங்கள் மகனை ஒரு முறை வந்து என்னைப் பார்க்கச் சொல்லுங்கள்,'' என்று கூறிவிட்டு அவர் போய்விட்டார்.

அப்போது எங்கள் குடும்பம் வத்தளையில் இருந்தது. நானோ கொழும்பில் செய்திக் காரியாலயத்தில் தங்கி வந்தேன். எனவே ஒரு வாரத்திற்கொரு தடவைதான் நான் வீடு செல்வது வழக்கம்.

மறுவாரம் நான் வீடு சென்றதும் அம்மா மூலம் இதை அறிந்தேன். கட்டாயம் போய் அவரைக் காணும்படி அம்மாவும் அப்பாவும் என்னை வற்புறுத்தினார்கள்.

நானும் போய் அவரைச் சந்தித்தேன்.

மறுநாளே வந்து வேலையைப் பொறுப்பேற்கும் படி சொன்னார்.

## குதிரையோட்டம்

வேலை என்றதும் ஏதோ பெரிய உத்தியோகம் என்று நினைத்துவிடாதீர்கள். கொழும்பு, கோட்டை 'பேலி ஸ்ரீட்' இல் இருந்த New Grand Hotel இல் அவர் சட்ட விரோதமாக நடத்திவந்த Bucket Shop இல் காலையும் மாலையும் வந்து வேலை செய்யும்படி கூறினார். ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்கெல்லாம் New Grand Hotel இல் நிற்கவேண்டும். ஏனென்றால் குதிரைப் பந்தயத்திற்கான சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கான இறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் பிற்பகல் 6 மணிக்குப் பின்னரே எனது வேலை தொடங்கும் அதாவது காலையிலிருந்து Collectors சேகரித்து வரும் பந்தயச் சீட்டுக்களை எல்லாம் சரி பார்த்து, அவற்றிலே குறிக்கப்பட்டுள்ள பணத்தொகையை 'லெட்ஜர் ஷீட்' களில் குறித்து முழுத் தொகையையும் கூட்ட வேண்டும். இது முடிய சுமார் 7½ அல்லது 8 மணியாகும். வேலை முடிந்ததும் 10 ரூபா தருவார்கள்.

மீண்டும் மறுநாள் காலை 6 மணிக்கு வரவேண்டும். வந்து முதல் நாள் பந்தையச் சீட்டுக்களில் எவற்றுக்குப் பணம் உண்டு? எவ்வளவு உண்டு? என்பதைக் கணக்கிட வேண்டும். பதினைந்து இருபது சீட்டுக்களுக்கு ஒன்று அல்லது இரண்டு சீட்டுக்களுக்குத்தான் பணம் இருக்கும். எனவே வேலை சுலபம். ஆனால் பண விஷயம் என்பதால் மிகவும் கவனமாக கணக்கிட வேண்டும். இது 7 - 7½ க்குள் முடிந்துவிடும் போகையில் 5 ரூபா பணம் கிடைக்கும். அதாவது நாளொன்றுக்கு 15 ரூபா கிடைக்கும் அந்த நாள்களில் 5 சதத்துக்கு பஸ் ஓடிய காலத்தில் - 60 சதத்திற்குப் பகல் சாப்பாடு சாப்பிட்ட காலத்தில் 15 ரூபா பெரிய காசுதான்.

காலை எட்டு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை நான் ஒரு சுதந்திர மனிதன். எனவே அந்த நேரம் 'செய்தி' காரியாலயத்தில் மிகவும் உற்சாகமாகச் செலவிடப்பட்டது.

## சுதந்திரம் பறிபோயிற்று

இப்படியே சுமார் மூன்று மாதங்கள் கழிந்தபின் முதலாளி ஒரு நாள் என்னை அழைத்தார் எனது அச்சகத்தில் Proof Reader வேலையொன்று காலியாக இருக்கிறது அதைச் செய்கிறீரா? என்று கேட்டார்.

இந்தக் கேள்வி என் காதுகளில் நாராசம் போல் இறங்கியது. சற்றுத் தயங்கினேன். ''காலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வேலை. மாதச் சம்பளமாக 200 ரூபா தருகிறேன் அத்துடன் 'ரேஸ் - வேலையும் செய்யலாம்,' என்றார்.

எனது குடும்பத்தின் கஷ்டநிலை ஒரு கணம் மனத்திலே தோன்றி மறைந்தது. 'செய்தி' காரியாலயத்தை முற்றாக மறந்துவிடவேண்டி நேருமே, சுதந்திரம் பறிபோய் விடுமே என்று பலவாறாகச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் ''என்ன யோசிக்கிறீர்?'' என்று கேட்டார் முதலாளி, சட்டென்று எனக்கொரு எண்ணம் தோன்றியது. ''வானொலி நிலையத்திலிருந்து திடீர் திடீரென்று நடிப்ப தற்கு அழைப்பு வரும்,'' என்றேன். ''அழைப்பு வந்தால் நீர் தாராளமாகப் போகலாம் நான் மனேஜரிடம் சொல்லி வைக்கிறேன்,'' என்றார் முதலாளி. பணம் அதிகமாகச் சம்பாதிக்கும் திறமை இருந்தாலும், ஆரம்பக் கல்வி இல்லாதவர். வானொலியில் நடிப்பதையெல்லாம் பெரிதாகவும் கௌரவமாகவும் கருதுபவர் அவர். நினைத்துடன் லீவில் போவதற்கு அனுமதி கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் வேலையை ஒப்புக்கொண்டேன்.

அச்சகத்தின் பெயர் **Frewin Printers**. புரூப் பார்ப்பதில் தமிழில் எனக்கு ஓரளவு அனுபவம் இருந்தது. ஆனால் இங்கே எல்லாமே ஆங்கிலத்தில் தான். ஒருவாறு சமாளித்து வந்தேன்.

இப்படியே காலை ஆறு மணிக்கு **Bucket Shop** இல் ஆரம்பமாகி பின் எட்டு மணிக்கு அச்சகத்தில் தொடர்ந்து, பின் மாலை ஆறு மணிக்கு **Bucket Shop** இல் சங்கமமாகி, இரவு ஏழரை, எட்டு மணிக்கு முடிவடையும்.

இப்படியே இரண்டு வாரங்கள் கழிந்தபின் முதலாளி மீண்டும் என்னை அழைத்தார். ''புரூப் ரீடிங் உமக்குக் கஷ்டமாய் இருப்பதாய் அறிந்தேன். அத்துடன் எமது **Store Keeper** விலகிவிட்டார். எனவே நீரே **Store**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Keeper ஆக இரும்'' என்றார். சரியென்றேன். மறுநாளே Frewin Printers இன் Store Keeper ஆகிவிட்டேன்.

## வேலையில்லாத வேலை

அச்சகம், மேல் மாடியில் இருந்தது. கீழே எனக்கென ஒரு தனி அறை. அறை நிறைய பேப்பர் 'ரீம்' கணக்கில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அறைக்கு முன்னால் பேப்பர் வெட்டும் பெரியதோர் இயந்திரம். அதற்குப் பக்கத்தில் அந்த இயந்திரத்தை இயக்கும் ஒரு கிழவர். அறைக்குள் பேப்பர் கட்டுகளின் நடுவே ஒரு சிறிய மேசையும் நாற்காலியும். மேசையில் ஒரு டெலிபோன் - மேலே இருக்கும் அச்சகத்துடன் மாத்திரம் கதைப்பதற்கு.

காலை எட்டு மணிக்கே அச்சகத்திற்குப் போய்விட வேண்டும். மேலே போய் என் அறைக்குரிய சாவியை எடுத்து வந்த அறையைத் திறந்து அமரவேண்டியது. சுமார் அரைமணி நேரத்திற்குப் பின் ஒரு துண்டுக் கடதாசியுடன் ஒரு பையன் வருவான். அதிலே இன்னவகையான இத்தனைப் பேப்பர்கள், பேப்பர் வெட்டும் இயந்திரத்தை இயக்கும் கிழவரிடம் கொடுக்கப்பட வேண்டுமென்று எழுதி இருக்கும். அதன்படி கொடுத்து விட்டால் என் வேலை முடிந்தது. சில சமயங்களில் - அதுவும் எப்போதாவது ஒரு நாள், தான், சில அவசர வேலைகளுக்காக இடையில், டெலிபோனில் சில பேப்பர்கள் தேவைப்படுவதாகச் சொல்வார்கள். மற்ற நேரமெல்லாம் நான் அறையில் சும்மா உட்கார்ந்திருக்க வேண்டியது தான்.

நான் கற்பனையில் எதிர்பார்த்துக் காத்திருந்த வேலை. காலையில் வேலைக்குச் செல்கையில் இரண்டு மூன்று புத்தகங்கள் எடுத்துச் செல்வேன். எழுதுவதற்குப் பேனா மாத்திரம் எடுத்துச் சென்றால் போதும். பேப்பருக்கா பஞ்சம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Frewin Printers, கொழும்பு கோட்டை Belle Street இல் அமைந்திருந்தது. இதற்கு அடுத்த தெருவில் இருந்த Bank of Ceylon Foreign Branch இல் நண்பன் ஜோக்கிம் பர்னாந்து அப்போது வேலை செய்து வந்தான். ஒரு நாள் கோட்டையில் இருவரும் சந்தித்துக் கதைத்தோம். பின் அச்சகத்திற்குக் கூட்டி வந்து எனது தனி அறையைக் காட்டினேன். அன்றிலிருந்து தனக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் ஜோக்கிம் என்னிடம் வந்து விடுவான். எனக்குத்தான் எப்போதுமே ஓய்வாயிற்றே. இருவரும் இருந்து கதைப்போம். பகல் சாப்பாட்டிற்கு இருவரும் ஒன்றாகவே செல்வோம். தனியாக இருக்கும் நேரங்களில் புத்தகங்கள் வாசிப்பதும் கதைகள் எழுதுவதுமாக நாட்கள் சந்தோஷமாகக் கடந்தன. பேப்பர் களஞ்சிய அறை என் சொந்த வீடு போலவே ஆகிவிட்டது.

## ராம் சுந்தரின் பெருந்தன்மை

அச்சகத்தில் நான் வேலைக்குச் சேர்ந்து சுமார் நான்கைந்து மாதங்களுக்குப் பின், ஓர் ஆங்கிலக் கதையைத் தழுவி ஒரு மேடை நாடகம் எழுதத் தொடங்கினேன். நான் ஒவ்வொரு நாளும் எழுதி முடிப்பதையெல்லாம் மறு நாள் வந்து ஜோக்கிம் வாசித்துப் பார்ப்பான்.

நாடகம் எழுதி முடிந்ததும் தானே அதைத் தயாரிக்கப் போவதாகவும் நான் அதை டைரக்ட் செய்யவேண்டும் என்றும் ஜோக்கிம் கூறினான். நானும் ஒப்புக் கொண்டேன்.

நாடகம் எழுதி முடிந்தது. 'இது ஒரு காதல் கதை' என்று அதற்குப் பெயரும் சூட்டினேன். கதாநாயகன் ஜோக்கிம் என்று மட்டும் தீர்மானித்துக் கொண்டேன். ஏனைய பாத்திரங்களுக்கான நடிகர்களைத் தேர்ந் தெடுப்பதில் நானும் ஜோக்கிமும் ஈடுபட்டோம்.

நாடகத்தில் ஒரு வேலைக்காரன் பாத்திரம் - அதுவும் நகைச்சுவைப் பாத்திரம். அந்த நாட்களில் நகைச்சுவைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென்றே இப்படி ஓர் அசட்டு வேலைக்காரப் பாத்திரத்தை உருவாக்குவது மரபு!

இந்தப் பாத்திரத்திற்கு யாரைப் போடுவது என்று யோசித்தோம் ''மாஸ்டர் சுந்தரலிங்கத்திற்கு இது பொருத்தமான ரோல்'', என்றான் ஜோக்கிம். நான் சற்றுத் தயங்கினேன். ''எங்களுக்கு நடிப்புச் சொல்லித் தந்தவராயிற்றே, நான் டைரெக்ட் செய்யும் நாடகத்தில் வந்து நடிக்கும்படி எப்படி அழைப்பது?'' என்றேன். ''மாஸ்டர் அப்படியெல்லாம் யோசிக்கமாட்டார். எதற்கும் கேட்டுப் பார்ப்போம்,'' என்றான் ஜோக்கிம்.

பின்பு ஒரு நாள் ஜோக்கிமும் நானும் ராம் சுந்தரைச் சந்திக்கச் சென்றோம். விஷயத்தைச் சொன்னோம். அவரை நடிப்பதற்கு அழைக்க நான் தயங்குவதையும் ஜோக்கிம் சொன்னான். ''ஜோர்ஜ், நீதானே டைரெக்ட் செய்யப் போறாய்? என்னுடைய மாணவனுடைய டைரெக்ஷனில் நடிக்கிறதை நான் பெருமையாகத்தான் நினைக்கிறேன். நான் கட்டாயம் வந்து நடிக்கிறேன்,'' என்றார். ராம் சுந்தரின் பெருந்தன்மையை வியக்காமல் இருக்க முடியவில்லை. ''ஆனால் ஒன்று, வசனங்களைப் பாடமாக்கறது தான் எனக்குக் கஷ்டம். அப்படி. இப்படி கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்,'' என்றார். நாடகப் பிரதியே இல்லாமல் நாடகம் நடித்துப் பழகிய அவருக்கு வசனங்களைப் பாடமாக்கி நடிக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் என் நாடகத்தில் அவர் நடிக்கச் சம்மதித்ததை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டேன். எப்படியும் அவரை நடிக்கப் பண்ணலாம் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

## வேலையா? நாடகமா?

இப்படியே நடிகர் தேர்வு மிகவும் ஜரூராக நடைபெற்று முடிந்தது. லயனல் வென்ற் தியேட்டரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நாட்களுக்கு 'புக்' பண்ணியும் விட்டான் ஜோக்கிம்.

ஒத்திகை தொடங்க வேண்டும்.

மாலை ஆறு மணி முதல் ஒன்பது மணிவரை ஒத்திகை நடத்துவதே அந்த நாள் வழக்கம். எனக்கோ வேலை முடிய இரவு ஏழெட்டு மணியாகும், என்ன செய்வது?

''உம்மை நம்பித்தான் இதைத் தொடங்கினேன். நீர் தான் நாடகத்தை டைரெக்ட் பண்ண வேண்டும்,'' என்று ஒரே பிடியாய் நின்றான் ஜோக்கிம்.

நாடகமா வேலையா என்ற நிலை.

'காலையில் வேலைக்கு வருகிறேன். பின்னேரம் வர முடியாது,' என்று கூற முடியாதே. ஏனென்றால் முக்கியமான வேலை மாலையில் தான்.

போராட்டம் ஆரம்பமாயிற்று.

மாதமொன்றுக்கு அறுநூறு ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைக்கும் தொழிலா? அல்லது வருமானமற்ற நாடகமா?

அன்று நாடகத்தின் மேல் எனக்கிருந்த பெருங்காதல் காரணமாக மனம் நாடகத்தின் பக்கமே சாய்ந்தது.

வேலை போய் நாடகம் வந்தது டும்...டும்...டும்!

வேலைக்குப் போவதை நிறுத்திக்கொண்டு, முழுநேரமும் நாடகத்தில் ஈடுபடத் தொடங்கினேன். அதாவது காலையில் வேலைக்குப் போவது போல் புறப்பட்டு. விகாரமகாதேவி பூங்காவுக்கு வந்து விடுவேன். மாலை நடைபெறும் ஒத்திகையில் நடிகர்கள் எந்தெந்த வசனங்களைப் பேசும் போது, மேடையில் எந்தெந்த இடங்களில் இருக்கவேண்டும்; என்னென்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் படங்களாக வரைந்து வைத்துக் கொள்வேன். அன்றாடச் செலவுக்கு ஜோக்கிம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் பணம் தருவான். இப்படியே முப்பது நாள்கள் தொடர்ச்சியாக ஒத்திகை நடந்தது.

## நாடகக் கதைச் சுருக்கம்

இந்த இடத்தில் நாடகத்தின் கதையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறி வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

மிகவும் பிரபலமான ஒரு வயதான எழுத்தாளர், மனைவி மக்களோடு வசதியாக வாழ்ந்து வருகிறார். மகளுக்கு வயது பதினெட்டு. கல்விப் பொதுத் தராதர, சாதாரண தரத்தில் சித்தியடைந்துவிட்டு வீட்டோடு இருக்கிறாள். மகனுக்கு வயது இருபத்தொன்று. இவனும் கல்விப் பொதுத் தராதரம் வரை படித்துவிட்டுத் தந்தையின் பணத்தில் வேலைவெட்டி ஏதும் இல்லாமல் ஊரைச் சுற்றி வருகின்றான். அவனுக்கு ஒரு காதலி வேறு.

நாடகம் ஆரம்பமாகும் போது, எழுத்தாளரின் பிறந்த நாளையொட்டி, இலங்கை வானொலி அவரை அழைத்து ஒரு போட்டியை ஒலிப்பதிவு செய்கிறது. எழுத்தாளரின் பிறந்த தினமான மறு நாள் மாலை ஆறு மணிக்கு 'செய்திகள்' ஒலி பரப்பாகும் நேரத்தில், எழுத்தாளரின் பேட்டி ஒலிபரப்பாக இருக்கிறது. ஆனால் எழுத்தாளரின் வீட்டிலோ ரேடியோ இல்லை. ரேடியோவும் டெலிபோனும் எழுத்தாளனின் விரோதிகள் என்பது எழுத்தாளரின் அசைக்க முடியாத நம்பிக்கை. எனவே எழுத்தாளரின் பேட்டியைக் கேட்பதற்கான டிரான்சிஸ்டர் ஒன்றைக் கொண்டு வர மகன் சம்மதிக்கிறான். அதுவும் காரணத்தோடுதான். தன் காதலி வீட்டு டிரான்சிஸ்டரை அவளையே எடுத்து வரச் செய்து, தன் வீட்டாருக்கு அவளை அறிமுகப் படுத்துவதே அவன் நோக்கம்.

பேட்டி ஒலிபரப்பாகும் நாள். ஆறு மணிக்கு இன்னும் இரண்டு நிமிடங்களே இருக்கின்றன. பேட்டியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பதற்காக எல்லாரும் தயாராக உட்கார்ந்திருக்கிறார்கள். எழுத்தாளர், மகள், மகன், டிரான்சிஸ்டருடன் மகனின் காதலி, வீட்டு வேலைக்காரன், எழுத்தாளரின் மனைவி, எழுத்தாளனுக்கு வந்துள்ள வாழ்த்துத் தந்திகளை எல்லாம் ஒரு தாம்பாளத்தில் வைத்து எடுத்து வருகிறான். வீடு அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டு காணப்படுகின்றது. சரியாக ஆறு மணிக்கே வானொலியைப் போட வேண்டும் என்பது எழுத்தாளரின் உத்தரவு.

தன் கைக் கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருக்கும் எழுத்தாளர், சரியாக ஆறு மணியாகியதும் நேடியோவைப் போடும்படி சைகை காட்டுகிறார்.

ரேடியோ போடப்படுகிறது. ஆனால் அதிலிருந்து எந்தவிதமான சத்தமும் வெளி வருவதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவராக எடுத்து முறுக்கிப் பார்க்கிறார்கள். தட்டிப் பார்க்கிறார்கள். பயனில்லை. கடைசியாக பேட்டி முடிவடையும் தறுவாயில் டிரான்சிஸ்டரில் பட்டறிகள் இல்லை என்பது தெரிய வருகிறது. மகனின் காதலி எத்தனையோ சமாதானங்களைச் சொல்கிறாள். எழுத்தாளருக்கு ஆத்திரம் தாங்கவில்லை. எல்லோரையும் விரட்டியடிக்கிறார். எல்லாரும் பயந்து வெளியேறுகிறார்கள்.

இரவு சப்பாடு வேண்டாம் என்று கூறிவிட்டு, மிகுந்த கோபத்தோடு எழுத்தாளர் தனிமையில் அந்த அறையில் அங்குமிங்கும் நடந்தவண்ணமிருக்கிறார். நேரம் கரைகிறது. இரவு 12 மணியாகி விடுகிறது. கோபத்தாலும் பசியாலும் தளர்ந்து போன எழுத்தாளர் சற்றே கண்ணயர்கிறார்.

இந்த நிலையில், அறை ஜன்னலைத் திறந்துகொண்டு, கையில் துப்பாக்கியுடன் ஓர் இளைஞன் உள்ளே நுழைகிறான். எழுத்தாளர் திடுக்கிட்டு விழித்தெழுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீ யார்? இந்த நேரத்தில் துப்பாக்கியுடன் ஏன் இங்கு வந்திருக்கிறாய்?'' என்று கேட்கிறார்.

''நான் உம்மைக் கொலை செய்ய வந்திருக்கிறேன்.'' என்கிறான் இளைஞன்.

''என்னையா இந்த வயதான எழுத்தாளனைக் கொலை செய்வதால் உனக்கென்ன நன்மை ஏற்படப் போகிறது?''

''நன்மை இருப்பதால் தான் இந்த முடிவுக்கு வந்தேன். நானும் ஒரு இளம் எழுத்தாளன்தான். நானும் பல நாவல்களை எழுதினேன். ஆனால் நான் ஒரு பிரபலமான எழுத்தாளனல்ல என்ற காரணத்தால் எந்தப் பிரசுராலயமும் என் நாவல்களை வெளியிட முன்வர வில்லை, எனவே கடைசியாக நான் ஒரு முடிவுக்கு வந்தேன். நான் கடைசியாக எழுதிய நாவலை மட்டும் வைத்துக் கொண்டு, அதற்கு முன் நான் எழுதிய எல்லா வற்றையுமே எரித்துவிட்டேன், பின் என்னிடமிருந்த விலையுயர்ந்த புத்தகங்கள், உடைகள் எல்லாவற்றையும் விற்று, மிகவும் சிரமப்பட்டு இந்தத் துப்பாக்கியை வாங்கினேன். இந்தத் துப்பாக்கியால் யாரைக் கொலை செய்தால் எனக்கு நிறைய 'பப்ளிசிட்டி' கிடைக்கும் என்று யோசித்தேன். உம்மைக்கொலை செய்வதுதான் சரியென்று பட்டது. அதுவும் உம்மைப் போல ஒரு பிரபல எழுத்தாளரைக் கொலை செய்தால் அந்தக் கொலை காரனின் புத்தகத்தை வெளியிட பலர் முன் வருவார்கள். என் புத்தகம் பிரபலமாகும் என் பெயரும் பிரபலமாகும்.''

இதற்காகத்தான் என்னைக் கொலை செய்யத் துணிந்தாயா? என்னை விட ஒரு நாட்டு பிரதம மந்திரியை, ஒரு ஜனாதிபதியைக் கொலை செய்தால் உனக்கு அதிக மான 'பப்ளிசிட்டி' கிடைக்குமே?''

''உம்மைக் கொலை செய்யத் தீர்மானித்ததற்கு இன்னுமொரு காரணமுமுண்டு.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதென்ன காரணமென்று நான் தெரிந்து கொள்ளலாமா?''

''நீர் ஏன் இவ்வளவு பிரபலமான எழுத்தாளராக இருக்கிறீர் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக பொது நூலகத்தில் உமது நாவல்களையெல்லாம் வாசித்துப் பார்த்தேன். அவ்வளவும் வெறும் குப்பை. இப்படியான ஒரு எழுத்தாளன் மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதைவிட அவன் சாவதே மேல் என்று எனக்குத் தோன்றியது. எனவே தான் உம்மைக் கொலை செய்யத் தீர்மானித்தேன்.''

எழுத்தாளருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது.

''என்னைப் பற்றி நீ என்ன வேண்டுமானாலும் சொல், ஆனால் எனது நாவல்களைப் பற்றி மட்டும் கேவலமாகப் பேசாதே. 40 வருடங்களுக்கு மேல் நான் எழுதிக் கொண்டு தான் இருக்கிறேன். உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் எனக்குப் பல்லாயிரக் கணக்கான இரசிகர்கள் இருக்கிறார்கள். சரி...நான் எழுதிய நாவல்கள் எல்லாமே குப்பைகள் என்று உன்னால் நிரூபிக்க முடியுமா?''

''முடியும்.''

''முடியாது. ஆனாலும் உனக்கொரு சந்தர்ப்பம் தருகிறேன். இப்போதுதான் நான் ஒரு நாவல் எழுதி முடித்திருக்கிறேன். நீ ஒரு நாவல் எழுதி வைத்திருப்ப தாகக் கூறினாய் அல்லவா? அதைக் கொண்டு வா. உன் நாவலை என் பெயரிலும், என் நாவலை உன் பெயரிலும் வெளியிடுவோம். அப்போது யார் சிறந்த எழுத்தாளர் என்பது தெரிந்து விடும். உனக்குச் சம்மதமா?

இளைஞன் சம்மதிக்கிறான்.

''உனக்கு டைப் பண்ணத் தெரியுமா?''

''தெரியும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நல்லதாய்ப் போய்விட்டது. வழக்கமாக நான் எழுதும் நாவல்களை டைப் பண்ணித் தருவது என் மகள் தான். இந்த நாவலை நீ வந்து டைப் பண்ணித்தா. நாளைக் காலையிலேயே வந்து விடு. இந்தா, இதில் கொஞ்சம் பணம் இருக்கிறது. நாளை வரும் போது ஒரு நல்ல காற்சட்டையும் சேர்ட்டும் உடுத்துக் கொண்டு 'டீசன்டாக' வா.''

இளைஞன் பணத்துடன் வந்த வழியே திரும்பிச் செல்கிறான்.

எழுத்தாளரும் இளைஞனும் சந்திக்கும் இந்தக் காட்சியைச் சுருக்கமாகவே என் ஞாபகத்திலிருந்து தந்திருக்கிறேன். ஆனால் நாடகத்தில் இந்தக் காட்சி முப்பது நிமிடங்கள் நீடிக்கும்.

## காட்சி நீண்டு விட்டது

நாடகத்தின் Final Rehersal நடந்து கொண்டிருந்தது. நாடகத்தின் ஒளி அமைப்பிற்குப் பொறுப்பான நண்பர் லெனின் மொறாயசும் வந்திருந்தார்.

இந்தக் காட்சியைப் பார்த்த லெனின் என்னை அழைத்தார்.

''ஜோர்ஜ், இந்தக் காட்சி முப்பது நிமிடங்களுக்கு மேல் போகிறது. அதுவும் இரண்டே நடிகர்கள் தான் நடிக்கிறார்கள். இவ்வளவு பொறுமையாக இருந்து இரசிகர்கள் இந்தக் காட்சியைப் பார்க்க மாட்டார்கள். தயவு செய்து இதை அரைவாசியாகக் குறைந்து விடும்,'' என்றார்.

எனக்கு அவர் சொன்னதில் உடன்பாடு ஏற்படவில்லை.

''இரசிகர்கள் அமைதியாக இருந்து இந்தக் காட்சியை இரசிக்கத்தான் போகிறார்கள். இருந்து பாரும்,'' என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அனுபவத்தைக் கொண்டு சொல்கிறேன். கட்டாயம் இந்தக் காட்சியில் விசில் அடிப்பார்கள். காட்சியில் கொஞ்சத்தைக் குறையும்,'' என்றார்.

அவருடன் வந்திருந்த சில நாடகக்கார நண்பர்களும் லெனின் சொன்னதை வலியுறுத்தினார்கள்.

உள்ளூர சிறிது பயம் ஏற்பட்டாலும் நான் விட்டுக் கொடுக்கவில்லை.

மறுநாள் நாடகம் மேடையேறியபோது முதிய எழுத்தாளராக நடித்த மணிவண்ணனும், இளைஞனாக நடித்த ஜோக்கிம் பர்னாந்துவும் தோன்றிய அந்தக் காட்சியில் சில நகைச்சுவை வசனங்களுக்கு இரசிகர்கள் சிரித்தார்களே தவிர மற்றபடி Pin Drop Silence என்று ஆங்கிலத்தில் கூறுவார்களே, அது நிலவியது.

கதையின் தர்க்க ரீதியான ஓட்டம், அதற்கேற்ற வசனங்கள், எந்தெந்த வசனங்களைப் பேசும்போது நடிகர்கள் மேடையில் எந்தெந்த இடங்களில் இருக்க வேண்டும், என்னென்ன செய்ய வேண்டும், எப்படி நடிக்க வேண்டும் என்பவை சீராக அமைந்து விட்டால், அரைமணி நேரமென்ன ஒரு மணி நேரம் வேண்டுமானாலும் இரசிகர்களுக்கு அலுப்புத் தட்டாமல் ஒரு காட்சியை நடித்துக் காட்டலாம் என்பதை இந்த நாடகத்தின் மூலம் நான் உணர்ந்து கொண்டது மட்டுமல்லாமல் நிரூபித்துக் காட்டியும் விட்டேன்.

## மீண்டும் கதைக்கு வருவோம்

மறுநாள் காலை, இளைஞன் தனது நாவலோடு முதிய எழுத்தாளரின் வீட்டுக்கு வருகின்றான். வீட்டு வாசலில் எழுத்தாளரின் மகளைச் சந்திக்கிறான். இன்னார் என்று தெரியாமல் இருவருக்கும் இடையில் ஒரு சிறு மோதல் ஏற்படுகிறது. (காதலுக்கு அத்திவாரம். - திரைப்பட இயக்குநர் ஸ்ரீதர் ஸ்டைல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று முதல் ஒவ்வொரு நாளும் இளைஞன் முதிய எழுத்தாளரின் கையெழுத்துப் பிரதியை டைப் தொடங்குகிறான். அத்துடன் தனது நாவலையும் டைப் செய்து முடித்து விடுகிறான். இப்போது மூத்த எழுத்தாளரின் நாவல் இளைஞனின் பெயரிலும் இளைஞனின் நாவல் எழுத்தாளின் பெயரிலும் உள்ளன. எழுத்தாளர் தனது பிரசுரகர்த்தாவிடம் இளைஞனை அறிமுகப்படுத்தி, நாவல்கள் இரண்டையும் அவரிடம் கொடுக்கிறார். எப்படியும் இளைஞனின் நாவலும் தனது நாவலுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறார். இரண்டு வாரங்களுக்குப் பின் பிரதிகளை வாசித்துப் பார்த்து விட்டு வருவதாகக் கூறிப் பிரதிகளைக் கொண்டு செல்கிறார் பிரசுரகர்த்தா.

இரண்டு வாரங்களுக்குப் பிரசுரகர்த்தா எழுத்தாளரிடம் வருகிறார். அப்போது இளைஞனும் அங்கிருக்கிறான்.

பிரசுரகர்த்தா. எழுத்தாளரின் பெயரில் உள்ள இளைஞரின் நாவலை வெகுவாகப் புகழ்கிறார். ''இதுவரை நீங்கள் இப்படி ஒரு நாவலை எழுதியதே கிடையாது. இலக்கிய உலகிலே இந்த நாவல் உங்களுக்கு ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுத்தரப் போகிறது. உடனடியாக அதைப் பிரசுரிப்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டேன்,'' என்று இன்னும் ஏதேதோ நாவலைப் புகழ்ந்து கூறிக்கொண்டே போகிறார். எழுத்தாளரோ, இளைஞனின் பெயரில் உள்ள தனது நாவலைப் பற்றிப் பேச்சை எடுக்கிறார்.

''அந்த நாவலைப் பிரசுரிக்கும் உத்தேசம் எனக்கில்லை. இவர் இன்னும் நிறைய எழுதிப் பழக வேண்டும். கதை சொல்லும் பாணி ஓரளவு நன்றாக இருந்தாலும் அவர் எடுத்துக் கொண்ட விஷயமோ பத்தாம்பசலித் தனமானது. உங்கள் நாவலிலே நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி இருக்கும் புத்தம் புதிய கருத்துக்களை அவர் கிரகித்து எழுத இன்னும் வெகுகாலம் பிடிக்கும்.''

எழுத்தாளர் பரிதாபமாக பிரசுரகர்த்தாவைப் பார்க்கிறார். 'இளம் எழுத்தாளர். எப்படியாவது நீங்கள் தான் அவரைக் கைதூக்கி விடவேண்டும். அவரது நாவலை எப்படியும் பிரசுரித்து விடுங்கள்'' என்று கெஞ்சுகிறார்.

''இளம் எழுத்தாளர்களை முன்னேற்றி விடும் உங்கள் ஆர்வம் எனக்குப் புரிகிறது. என்றாலும் முதலில் உங்கள் நாவலைப் பரிசுரிப்போம். பின்னர் அவரது நாவலைப் பற்றி யோசிக்கலாம்,'' என்றார் பிரசுரகர்த்தா.

இளைஞன், எழுத்தாளரைப் பார்த்து லேசாகப் புன்னகைத்து விட்டுப் போய் விடுகிறான். எழுத்தாளர் செய்வதறியாது தவிக்கிறார். இறுதியில் திடீரெனப் பேசும் சக்தியைத் தான் இழந்து விட்டதைப்போல நடிக்கிறார்.

இறுதியில் எல்லாமே சுபமாக முடிகிறது. இளைஞன் ஒரு தலை சிறந்த எழுத்தாளன் என்பதை எழுத்தாளர் புரிந்து கொள்கிறார். அவனையே தன் மகளுக்கு மண முடித்தும் வைக்கிறார்.

மூன்று மணிநேரம் காண்பிக்கப்பட்ட நாடகத்தை வெகுவாகச் சுருக்கி இங்கே தந்திருக்கிறேன்.

1965 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமையும், 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், கொழும்பு லயனல் வென்ற் தியேட்டரில் 'இது ஒரு காதல் கதை' என்ற இந்த நாடகம் மேடையேறியது.

இந்த மேடை நாடகத்தில் ஜோக்கிம் பர்னாந்து இளம் எழுத்தாளனாகவும், மணிவண்ணன் முதிய எழுத்தாளராகவும் அவரின் மகனாக எம். வி. பாலனும். மகளாக ஆமினா பேகமும், தாயாக ஜெயகௌரியும், மகனின் காதலியாக ராஜமணியும், வேலைக்காரனாக இராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரும், பிரசுரகர்த்தாவாக சிக்கந்தரும், அவரின் உதவியாளராக பாட்சாவும் நடித்தார்கள்.

நாடகத்தைப் பலர் பார்த்துப் பாராட்டினார்கள்.

நாடகம் மேடையேறி சுமார் இரண்டு வாரங்களுக்குப் பின் சென். பெனடிக்ஸ் கல்லூரியில் எனக்கு ஆசிரியராக இருந்த வ. இராசையா அவர்களைச் சந்தித்தேன். ஏற்கனவே, என்னிடமிருந்து நாடகத்திற்கான டிக்கட் ஒன்றை அவர் வாங்கியிருந்தார்.

''நாடகம் பார்த்தீர்களா சேர்?'' என்று கேட்டேன்.

''ஆம்,'' என்றார் மாஸ்டர்.

''எப்படி இருந்தது?'' என்று மீண்டும் கேட்டேன்.

''பத்து வருடங்களுக்குப் பின் காண்பிக்கப்பட வேண்டிய நாடகத்தை இப்போதே காண்பித்து விட்டீர். அது தான் நீர் விட்ட பிழை,'' என்றார்.

நான் திகைத்துப் போனேன். என்றாலும் அந்த நாடகத்திற்கு எனக்குக் கிடைத்த மிகப் பெரிய பாராட்டு அது என்று, நான் இன்றும் நினைக்கிறேன். அது மட்டுமல்ல, அவர் கூறியதன் முழுக் கருத்தும் சில காலத்திற்குப் பிறகு தான் எனக்குச் சரியாகப் புரிந்தது.

'பத்து வருடங்களுக்குப் பின்' என்ற இந்தச் சொற்றொடரைச் சரியாகப் புரிந்து கொள்வதற்குத் தென்னிந்தியத் திரைப்படம் ஒன்றும் எனக்கு வெகுவாக உதவியது.

திரைப்படத்தின் பெயர் 'அந்த நாள்.'

ஜாவர் சீத்தாராமன் கதை வசனம் எழுதி, வீணை, எஸ். பாலசந்தர் நெறிப்படுத்திய திரைப்படம். கதாநாயகன் சிவாஜி கணேசன். பாடல்களே இல்லாமல் வெளிவந்த முதல் தமிழ்த் திரைப்படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயம், கிங்ஸ்லி தியேட்டரில் 'அந்த நாள்' திரையிடப்பட்ட மறுநாளே ஜோக்கிமும் நானும் போய்ப் பார்த்தோம். அப்போதெல்லாம் தமிழ்த்திரைப்படமென்றால் மூன்று அல்லது மூன்றரை மணிநேரம் ஓடும். 'அந்த நாளோ' இரண்டு மணி நேரத்தில் முடிந்து விட்டது.

ஜோக்கிமும் நானும் 'அந்த நாள்' திரைப்படத்தை வெகுவாக இரசித்தோம். அடுத்த வாரம் மீண்டும் வந்து அதைப் பார்ப்பதென்று சங்கற்பமும் செய்து கொண்டோம். ஆனால் படம் ஒரு வாரம் கூட ஓடவில்லை. கூட்டமில்லை யென்று மாற்றி விட்டார்கள்.

நான் வெகுவாக இரசித்த தமிழ்த் திரைப்படங்களில் அந்த நாளும் ஒன்று.

## அந்த நாள் ஞாபகம்

சுமார் முப்பத்தைந்து நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த 'அந்த நாள்' திரைப்படம் பற்றி உங்களில் பலருக்குத் தெரிந்திருக்காது என்று நினைக்கிறேன். எனவே 'அந்த நாள்' திரைப்படக் கதையைச் சுற்றுச் சுருக்கமாக இங்கு கூறுவது பயனுள்ளதாக இருக்குமென்று நினைக்கிறேன்.

பக்கத்து வீட்டில் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டு பி. டி. சம்பந்தம் பொலிஸ் நிலையத்திற்கு ஓடுகிறார் (பி. டி. சம்பந்தம் குள்ளமாக இருப்பார். அந்த நாள்களில் சிறந்ததொரு நகைச்சுவை நடிகராக விளங்கியவர்.) அவர் தெருவில் ஓடிக் கொண்டிருக்க, முன்னால் ஒரு பொலிஸ் ஜீப் வருகிறது. இவர் ஓடுவதைக் கண்டு பொலிஸ் ஜீப் நிற்கிறது.

''எங்கே ஓடுகிறீர்?'' என்று பொலிஸ்காரர்கள் கேட்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பக்கத்து வீட்டில் ஒரு கொலை நடந்து விட்டது. அதைப் பொலிசில் சொல்லத் தான் ஓடுகிறேன்,'' என்கிறார் சம்பந்தம்.

அவரையும் ஏற்றிக்கொண்டு ஜீப் விரைகிறது.

சிவாஜி கணேசன் கொலையுண்டு கிடக்கிறார். அவர் அருகில் ஒரு கைத்துப்பாக்கி கிடக்கிறது.

கொலையைக் கண்டு பிடிக்க ஒரு துப்பறியும் நிபுணர் வருகிறார். (ஜாவர் சீத்தாராமன்).

சம்பந்தம் விசாரிக்கப்படுகிறார்.

''கொலையை நீர் நேரில் பார்த்தீரா?''

''இல்லை.''

அப்படியானால் கொலையென்று எப்படித் தீர்மானித்தீர்?''

''துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது.''

''துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டால் அது கொலை தான் என்று எப்படித் தீர்மானித்தீர்?''

கொலையுண்டவருக்கும் அவரது சகோதரருக்கும் இடையில் சில காலமாக பண விஷயம் தொடர்பாக தகராறு இருந்து வந்தது...என்று அவர் சொல்லத் தொடங்க அவர் சொல்வது படமாகக் காண்பிக்கப் படுகிறது. (இது Flash Back அல்ல. சம்பந்தம் நினைப்பதே படமாகக் காண்பிக்கப்படுகிறது.)

சகோதரர் இருவரும் வாக்குவாதம் செய்கிறார்கள். இறுதியில் சகோதரன் தனது கைத்துப்பாக்கியை எடுத்து சிவாஜி கணேசனைக் சுட்டு விடுகிறார்.

துப்பறியும் நிபுணர் சிவாஜி கணேசனின் சகோதரரைத் தேடிச் செல்கிறார். அவரோ வேறு ஒரு கதை சொல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி சிவாஜி கணேசனுக்கு ஒரு நாட்டியக்காரியுடன் தொடர்பிருப்பதாகவும் அவள் மேல் தான் தனக்குச் சந்தேகம் என்றும் அதற்கான காரணத்தையும் விளக்குகிறார்.

இதுவும் படமாகக் காண்பிக்கப்படுகிறது. முடிவில் நாட்டியக் காரியாக நடித்த சூரியகலா, கைத்துப்பாக்கியால் சுட சிவாஜி கணேசன் இறந்து விடுகிறார்.

துப்பறியும் நிபுணர் நாட்டியக்காரி சூரியகலாவிடம் செல்கிறார். அவரோ வேறொரு கதை சொல்கிறார். அதுவும் படமாகக் காண்பிக்கப்படுகிறது.

இப்படியே சிவாஜி கணேசன் பலரால் பலமுறை கொலை செய்யப்படுவது காண்பிக்கப்படுகிறது.

இறுதியில் சிவாஜி கணேசனைக் கொலை செய்தவர் அவரது மனைவியே, (பண்டரிபாய்) என்பது தெரிய வருகிறது. படத்தின் முடிவில் சிவாஜி கணேசன் உண்மை யாக பண்டரிபாயால் கொலை செய்யப்படுவது காண்பிக்கப் படுகிறது. (இது ஒன்று தான் Flash Back)

இந்த உத்திமுறையை அன்றைய இரசிகர்கள் புரிந்து கொள்ளவில்லை. 'இதென்ன சிவாஜி கணேசன் எத்தனை முறை சாகிறார்? உண்மையில் யார் அவரைக் கொன்றது?' என்றெல்லாம் பலர் பேசிக் கொள்வதை அப்போது நான் என் காதாலேயே கேட்டிருக்கிறேன்.

ஆனால் பின்நாட்களில் சினிமா நுணுக்கங்கள் பற்றி சினிமாப் பத்திரிகைகளில் வெகுவாக வெளிவரத் தொடங்கின. இரசிகர்களும் இந்த மாதிரியான உத்தி முறைகளைப் புரிந்து கொள்ளத் தொடங்கினார்கள். இந்தக் காலகட்டத்தில் ''அந்த நாள்'' திரைப்படம் வெளி வந்திருந்தால், இரசிகர்களின் பாராட்டை இந்தப் படம் கட்டாயம் பெற்றிருக்கும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே 20 வருடங்களுக்குப் பின்னர் தயாரிக்க வேண்டிய திரைப்படத்தை 20 வருடங்களுக்கு முன்னரே எடுத்து தோல்வி கண்டது எஸ். பாலசந்தர் அவர்களின் பிழைதான்!

இதை இங்கு குறிப்பிடுவதனால் எனது 'இது ஒரு காதல் கதை' நாடகத்தையும் எஸ். பாலசந்தர் அவர்களின் 'அந்த நாளை'யும் ஒப்பிடுவதாக மட்டும் நினைத்து விடாதீர்கள். எஸ். பாலசந்தர் ஒரு ஜீனியஸ்.

'இது ஒரு காதல் கதை' மேடையேறி முடிந்தது. வரவும் செலவும் சரியாகவே இருந்தது. வேலையும் போய் விட்டது, இனி என்ன செய்வது?

அந்த நாட்களில் நான் பட்ட இன்னல்களை இன்று நினைத்தாலும் பயங்கரமாகவே இருக்கிறது. பாரதியின் வார்த்தைகளில் சுருங்கச் சொல்வதானால், 'நாளொன்று போவதற்கு நான்பட்ட பா டனைத்தும், தாளம் படுமோ, தறிபடுமோ யார் படுவார்?'

## தத்துவ விசாரம்

மீண்டும் நண்பர் கனகரத்தினத்தைச் சந்திக்கச் சென்றேன். அவர் அப்போது ரெயின்போ அச்சகத்திலிருந்து விலகி, புறக்கோட்டையில் இருந்த 'குமரன்' அச்சகத்தில் பங்குதாரராகி இருந்தார். குமரன் அச்சகத்தின் உரிமையாளர் இலங்கையில் பிரபல நாவலசிரியராக விளங்கிய செ. கணேசலிங்கன் அவர்கள்.

நண்பர் கனகரத்தினத்தின் உதவியால் குமரன் அச்சகத்தில் Proof Reader ஆக ஆனேன். சொற்பச் சம்பளமே கிடைத்தது. ஆனாலும் அந்த நேரத்தில் அதுவே பேருதவியாக அமைந்தது.

குமரன் அச்சகத்தில் புரூப் பார்க்கும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் நிறையப் புத்தகங்கள், பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுலகத்திலிருந்து எடுத்து வாசிக்கத் தொடங்கினேன். இந்தக் காலக்கட்டத்தில் Dostoevsky, Albert Camus, James Joyce போன்றவர்களின் நாவல்களோடு, Henri Bergson, Descartes, Nietzsche போன்ற தத்துவ மேதைகளின் புத்தகங்களையும் வாசித்தேன்.

Schopenhaure எழுதிய The World as will and Idea என்ற புத்தகம் கிடைத்தது. மனித சங்கற்பத்தாலும் எண்ணங்களினாலும் உலகம் உள்ளது, என்பது இந்த மேதையின் கோட்பாடு. இதனை நிருபிக்க அவர் பல வாதங்களை இந்தப் புத்தகத்தில் முன் வைத்துள்ளார். உதாரணத்திற்கு ஒன்று.

'இந்த உலகத்திலே உயிரினங்கள் யாவும் அழிந்து விட்டது. கடைசியாக உயிர் வாழும் மனிதன் நீ ஒருவன் தான். நீயும் இறந்து விட்டால் உலகம் உண்டா!' இந்தக் கேள்வியைச் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நான் வாசித்தபோது என்னால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. கடைசி மனிதனான நான் இறந்து விட்டால் என் உயிரற்ற உடலைச் சுமந்து கொண்டு உலகம் சுற்றிக் கொண்டு தானே இருக்கும், என்று நினைத்தேன். ஆனால் அப்படி நினைக்கும் என் மனமும், நான் இறந்த பின் இருக்காதே என்ற எண்ணம் பிறந்த போதுதான். உலகம் என்று ஒன்று இருக்காது என்பது புரிந்தது.

இன்னுமோரிடத்தில் 'சதுரங்கம் ஆடுகையில் மரக் காய்களையும் வைத்து ஆடலாம், தங்கக் காய்களையும் வைத்து ஆடலாம், ஆனால் ஆட்டம் ஒன்றுதான்,' என்று கூறுகிறார். உலகம் ஒரு விளையாட்டு மேடை என்று கொண்டால், பணம் படைத்தவனாகவும் வாழ்க்கை ஆட்டத்தை ஆடலாம், பணமற்றவனாகவும் ஆடலாம். ஆட்ட விதிகளைச் சரியாகப் புரிந்து கொண்டவனே வெற்றி பெறுவான், என்ற பெரியதொரு தத்துவத்தை இதன் மூலம் விளக்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே என் அகக் கண்களைத் திறக்கும்; எனக்கு உடன்பாடான பல கருத்துக்கள் இந்தப் புத்தகத்தில் இருந்தன. அத்துடன் அந்நீத் தத்துவ மேதை, தான் பகவத் கீதையை லத்தீன் மொழியில் வாசித்ததாகவும், அதைப் பற்றி மிகவும் சிலாகித்தும் எழுதி இருந்தார். அதுவரை நான் பகவத் கீதை வாசித்தது கிடையாது. எனவே அதைப் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் பிறந்தது. என் ஆசையை நண்பர் கனகரத்தினத்திடம் தெரிவித்தேன். இரண்டு நாட்களாகவில்லை, பென்னம் பெரியதொரு புத்தகத்துடன் வந்தார் கனகரத்தினம். இராமகிருஷ்ண மிஷனிலிருந்து சித்பவானந்தா உரையுடன் கூடிய பகவத் கீதை பிரதி ஒன்றை வாங்கி வந்திருந்தார் கனகரத்தினம்.

வாசிக்கத் தொடங்கினேன். வாசிக்க வாசிக்க என்னுள் ஒரு மாற்றம் ஏற்படுவதை நான் உணர்ந்தேன். நான் அதுவரை வாசித்த தத்துவஞான புத்தகங்களிலெல்லாம் இல்லாத, நிதர்சனமானதொரு தத்துவஞான உண்மை, அதில் இருப்பதாக உணர்ந்தேன்.

ஆனாலும் கீதையில் வரும் கிருஷ்ணபரமாத்மாவையும், கடவுள் தன்மையையும் நான் நம்பவில்லை. வியாசரின் தத்துவ மேதைமையைத்தான் வியந்தேன். கடவுளை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு, கீதை கூறும் தத்துவ சாரத்தை மட்டும் பருகினேன்.

'எவனொருவன் எங்கும் பற்றிலனாய், நலம் தருவதை அடைந்து மகிழாதும், கேடு தருவதை அடைந்து நொந்து கொள்ளாதும் இருக்கிறானோ, அவனே மக்களுள் மேதாவி' என்கிறது கீதை. இந்த நிலையை அடைவதற்குத் தான் எல்லாத் தத்துவ மேதைகளும், உலகம் தோன்றிய நாள் தொட்டு, மனித இனத்திற்கு வழிசொல்லி வந்திருக்கிறார்கள்.

இந்த நிலையை அடைவதெப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுக்கு, மூளை - அதாவது மனம் - வசப்பட்டது. உடல் நலம் சரியாக இருந்தால்தான் மனம் சரியாக இயங்கும். உடல் உபாதைகள் ஏற்படும்போது மனம்- அதாவது மூளை, சரியாக இயங்குவதில்லை. இது நாம் அனுபவத்தில் அறிந்த உண்மை. இதேபோல் உடல் உணவுக்கு வசப்பட்டது. நாம் உண்ணாமற் போனால் உடல் இயங்காது போய்விடும். எனவே உடல் உணவுக்கு வசப்பட்டது. நாம் உண்ணும் உணவால் மூளை அல்லது மனம் பாதிக்கப்படுகிறது.

இவ்வளவு இலகுவாக இதைக் கூறிவிட முடியாது. ஏனென்றால் எல்லோரது உடலும், மனமும், மூளையும் ஒரே மாதிரியானவையல்ல. பிறக்கும் போதே உடலிலும் மூளையிலும் பல தாக்கங்கள் ஏற்பட்டு விடுகின்றன. மனித உயிர் தோன்றிய காலம் தொட்டு, சங்கிலித் தொடர்போல் வந்து கொண்டிருக்கும் மனித விந்தணுக்களில் எத்தனையோ வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. ஒரே உணவு ஒருடலில் ஏற்படுத்தும் அதே தாக்கத்தை எல்லா உடல்களிலும் ஏற்படுத்துவதில்லை. அத்துடன் எல்லா உடல்களிலும் ஒரே அளவு வளர்ச்சியடைந்த மூளையும் இருப்பதில்லை.

ஆனாலும் மாமிசமே சாப்பிட்டு வரும் ஒருவரது மூளையும், மரக்கறியே சாப்பிட்டு வரும் ஒருவரின் மூளையும் ஒரே மாதிரியாக இயங்க முடியாது என்ற நம்பிக்கை கதையில் கூறப்படும் சத்வ, ராஜச, தாமச உணவு வகைகள் பற்றி வாசித்த பின்னர் எனக்கேற்பட்டது.

நானும் பழங்கள், தானியங்கள் சாப்பிடுவதென்று தீர்மானித்தேன். அதன்படி சாப்பிடவும் தொடங்கினேன்.

பகல் உணவாக இரண்டு யானை வாழைப்பழங்களும், அரைச் சுண்டு அளவு கடலையும் சாப்பிடுவேன். ஒரு நாளைக்கு வேர்க்கடலை, மறு நாள் சிந்தாமணிக்கடலை, அடுத்தநாள் கடலைப்பருப்பென்று மாற்றிக் கொள்வேன். இரவில் வீட்டில் சாப்பிடுவதால் ஒரு துண்டு பாண் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடுவேன். தேனீர், கோப்பி, ஏதும் பருகுவதில்லை. காலையில் புளிப் பழங்களென்றால் இரண்டு மூன்று சாப்பிடுவேன். பழங்களின் அளவைப் பொறுத்து நான்கைந்தும் சாப்பிடுவேன்.

கதை வாசித்து முடிந்ததும் விவேகானந்தரின் கட்டுரைகள், சொற்பொழிவுகள், வாழ்க்கைக் குறிப்புகள் என்று விவேகானந்தரின் பத்து வால்யூம்கள் வாங்கி வந்தார் கனகரத்தினம். வாழைப்பழத்தோடும் கடலையோடும் இந்த பத்து வால்யூம்களையும் வாசித்து முடித்தேன்.

சுமார் ஒரு மாத காலம் இப்படியே வாழைப் பழத்தோடும் கடலையோடும் நான் சீவித்திருப்பேன் என்று நினைக்கிறேன். இறுதியில் உடல் சற்று நலிவடையத் தொடங்கியது. ஆனால் மூளையோ, மிகவும் அபாரமாக இயங்கியது.

என்றாலும் உடலில்லாத மூளை எதற்கு? அப்படியொன்று இருக்கத்தான் முடியுமா? எனவே பழையபடி என் வழக்கமான உணவுகளை உட்கொள்ளத் தொடங்கினேன்.

இப்படியே குமரன் அச்சகத்தில் என் வாழ்க்கை தொடர்ந்து, Petty cash 'பெட்டிக்காஷ்' என் கைக்கு வந்தது. மனேஜர் லீவில் யாழ்ப்பாணம் செல்லும் வேளை களில் பொறுப்பு முழுவதும் என் வசமாயிற்று. இப்படியே பொறுப்புக்கள் அதிகரிக்கத் தொடங்கின. நாளடைவில் ஊதியமும் வாழ்க்கையைச் சிரமமின்றி ஓட்டுவதற்குப் போதுமானதாக அமைந்தது.

இடையிடையே 'மாதர் பகுதி' நிகழ்ச்சியில் பங்கு பற்றுவதற்காக இலங்கை வானொலியிலிருந்து அழைப்பு வரும். பங்கு பற்றினால் 15 ரூபா கிடைக்கும். அப்போது பதினைந்து ரூபாய் இன்றைய 150 ரூபாய்க்குச் சமம் என்று கூறினால் அது மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீ. சண்முகம் அவர்கள் குறுக்கிட்டார்

இப்படியாக நாட்கள் நகர்ந்து கொண்டிருந்த வேளையில்தான் சீ. சண்முகம் அவர்கள் என்னைச் சந்தித்தார்.

தான் ஒரு மேடை நாடகம் எழுதி இருப்பதாகவும் அதை நான் நெறிப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அப்போது எனக்கு சீ. சண்முகம் அவர்களுடன் நெருங்கிய தொடர்பேதும் இருக்கவில்லை. வானொலி நிலையத்தில் ஓரிரு தடவைகள் கண்டு கதைத் திருக்கிறேன். அவ்வளவுதான். அத்துடன் அவரிடம் எனக்கு நிறைய மதிப்பும் மரியாதையும் இருந்தது.

நான் பள்ளி செல்லும் நாட்களில், வானொலியில் சீ. சண்முகம் அவர்களின் நாடகங்களைக் கேட்டு மகிழ்ந் திருக்கிறேன். அவரே எழுதி நெறிப்படுத்திய சில மேடை நாடகங்களும் பார்த்திருக்கிறேன். அவரது நாடகங்களில் இழையோடும் நகைச்சுவையையும் நான் வெகுவாக இரசித்திருக்கிறேன்.

இப்படி வானொலியிலும் மேடையிலும் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த ஒருவர் என்னிடம் வந்து தனது மேடை நாடகத்தை நெறிப்படுத்தித்தரும்படி கேட்டுக் கொண்டது, எனக்கும் பெருமையாகவே இருந்தது. நாடக உலகில், அதிலும் நெறியாள்கைத் துறையில் அதிகம் அறிமுகமில்லாத என்னிடம், நாடகத்துறையில் மிகுந்த அனுபவசாலியான சீ. சண்முகம் தனது மேடை நாடகத்தை 'டைரெக்ட்' செய்து தரும்படி கேட்டுக் கொண்டது, அவர், நான் எழுதி நெறிப்படுத்திய 'இது ஒரு காதல் கதை' என்ற நாடகத்தைப் பார்த்ததால் தான் என்பது எனக்குப் பின்னரே அவர் மூலமாகத் தெரிய வந்தது.

சீ. சண்முகம், அப்போது சிறு கைத்தொழில் திணைக் களத்தில் வேலை பார்த்து வந்தார். அவரது அலுவலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலி நிலையத்தின் பின்புறமாக இருந்த கட்டிடத்தில் அமைந்திருந்தது. அங்கு வந்து நாடகப் பிரதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறினார்.

இரண்டு நாட்களுக்குப் பின் நண்பன் ஜோக்கிம் பர்னாந்துவும் நானும் சென்று 'கடவுள் எங்கே?' நாடகப் பிரதியைப் பெற்றுக் கொண்டு, எதிரே இருந்த சுதந்திர சதுக்கத்தில் வந்திருந்து வாசித்தோம். வாசிக்க வாசிக்கப் பகீரென்றது. ''இதையெல்லாம் ஸ்டேஜில் எப்படிக் காட்டுவது,'' என்று ஜோக்கிம் வேறு கேட்கத் தொடங்கி விட்டான். அவ்வளவு சென்டிமென்டலாக நாடகத்தை எழுதியிருந்தார் சண்முகம். ''இப்படியே மேடையேற்ற முடியாது. சற்றுத் திருத்தித்தான் மேடையேற்ற வேண்டும்,'' என்று கூறிவிட்டு நாடகப் பிரதியை வீட்டுக்கு எடுத்துச் சென்று முழுவதையும் வாசித்து முடித்தேன்.

''நாடகத்தை வாசிச்சியா?'' என்று கேட்டுக் கொண்டு மறுநாள் குமரன் அச்சகத்திற்கு வந்து சேர்ந்தார் சண்முகம்.

''வாசித்தேன்,'' என்று கூறிவிட்டு, நாடகத்தைச் சில மாற்றங்களுடன் திருப்பி எழுத வேண்டும் என்று அவரிடம் நாசூக்காகக் கூறினேன். ''திருத்தங்களைச் சொல். திரும்ப டைப்பண்ணித் தருகிறேன்,'' என்று எந்தவித முகச் சுழிப்புமின்றிக் கூறினார் சண்முகம்.

சண்முகம் பேனா பிடித்து எழுதுவது மிகமிகக் குறைவு. எதுவாக இருந்தாலும் டைப்ரைட்டரில் அசுரவேகத்தில் டைப் பண்ணி முடித்துவிடுவார்.

முதற் காட்சியில் செய்ய வேண்டிய திருத்தங்கள், மாற்றங்கள் பற்றி அவரிடம் விரிவாக எடுத்துக் கூறினேன். ''நாளைக்கே திருத்தி அடித்துக் கொண்டு வந்து தருகிறேன்,'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்.

சொன்னபடியே திருத்தங்களுடன் கூடிய முதற் காட்சியைக் கொண்டு வந்து தந்துவிட்டு, ஏனைய காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கான மாற்றங்களையும் திருத்தங்களையும் கேட்டுக் கொண்டு போய்விட்டார். நான் அவர் கொண்டு வந்து தந்த முதற்காட்சியை வாசித்துப் பார்த்தேன். திருப்தி ஏற்படவில்லை.

இப்படியே நாடகக் காட்சிகள் அனைத்தையுமே பலமுறை சளைக்காமல் திரும்பத் திரும்ப டைப் பண்ணித் தந்தார் சண்முகம்.

கடைசியாக ஒரு நாள், ''இதற்கு மேல் என்னால் திருத்த முடியாது. இதை வைத்துக் கொண்டு உன்னால் முடிந்ததைச் செய்,'' என்றார்.

எனக்கும் அவரது கஷ்டம் புரிந்தது. எனவே அதை நெறிப்படுத்த ஒப்புக் கொண்டேன். ஒத்திகைகளுக்காக ஒரு மாதம் ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் மாலை ஆறு மணி முதல் ஒன்பது மணிவரை ஒத்திகை.

திரு. சண்முகம் அந்த நாட்களில் ஒரு பீ. எஸ். ஏ. மோட்டார் சைக்கிள் வைத்திருந்தார். அடிக்கடி அதில் குமரன் அச்சகத்திற்கு வந்து என்னுடன் கதைத்துக் கொண்டிருப்பார். திடீரென்று பகல் மூன்று மணிக்கு வந்து ''ஒரு நல்ல இங்கிலிஷ் படம் போட்டிருக்கிறான். வா போய்ப் பார்ப்போம்,'' என்று அழைப்பார். குமரன் அச்சகத்தில் அப்போதிருந்த மனேஜரிடம் சொல்லி விட்டு நானும் செல்வேன். நான் திடீர் திடீரென்று ஓபிஸ் நேரத்தில் வெளியே செல்வது மனேஜருக்குப் பிடிப்பதில்லை என்பதை என்னால் உணர முடிந்தது. ஆனால் நான், அச்சகத்தின் பங்காளரான திரு. கனகரத்தினத்தின் நண்பன் என்ற வகையில் அவர் என்னிடம் எதுவும் கேட்பதில்லை. ஆனால் நான் அடிக்கடி சண்முகத்துடன் வெளியே செல்வது அவருக்குப் பிடிக்கவில்லை என்பதை நான் புரிந்து கொண்டேன். இது பற்றி நண்பர் கனகரத்தினம் ஒரு நாள் என்னிடம் மெல்லப் பிரஸ்தாபித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ஓர் இரவு முழுவதும் நன்றாக யோசித்து, குமரன் அச்சக வேலையைக் கை கழுவி விடுவது என்ற முடிவுக்கு வந்தேன்.

கை கழுவியும் விட்டேன்.

இரண்டாவது தடவையாக வேலை போயிற்று - நாடகத்திற்காக.

வேலையை விட்டுவிட்டு 'கடவுள் எங்கே?' நாடகத்தை நெறிப்படுத்துவதில் முழு மூச்சாக என் கவனத்தைச் செலுத்தினேன்.

இந்த நாட்களில், சண்முகம் அவர்கள், எனக்குத் தன்னாலான உதவிகளையெல்லாம் செய்தார்.

'கடவுள் எங்கே?' நாடகம், 1966 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதியும் 25 ஆம் திகதியும் லயனல் வென்ற் அரங்கில் மேடையேறியது. முதல் நாள் வரவு, இரண்டாவது நாள் செலவால் அடித்துக் கொண்டு போய் விட்டது.

## இந்த நாடகத்தால் நான் பெற்ற அனுபவங்கள்

ஒன்று நான் ஆரம்பத்தில் கூறியதைப்போல நண்பர் நடராஜசிவத்தை சிவாஜி கணேசனின் பிடியிலிருந்து விடுவித்தது.

இரண்டு, இரண்டாவது தடவையாக வேலையை விட்டது.

மூன்று, நாடகத்தில் நகைச்சுவைப் பாத்திரம் ஏற்று நடித்த நவரத்தினராசா என்ற இளைஞர், பள்ளிக்கூட நாடகங்களில் நடித்துப் பழகியவர். எப்போதும் வசனங்களை இரசிகர்களைப் பார்த்தே பேசிப் பழகியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திகைகளின்போது, தன்னோடு நடிக்கும் நடிகர்களைப் பார்த்து வசனங்களைச் சொல்லாமல், மண்டபத்தை நோக்கியே அதாவது இரசிகர்கள் இருக்கப் போகும் திக்கைப் பார்த்தே வசனங்களைச் சொல்லி வந்தார். நான் இவரது இந்தத் தவறான பழக்கத்தை மாற்றுவதற்கு எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தேன். முடியவில்லை.

சில ஒத்திகைகளின் பின், நான் இந்த நடிகரைத் திருத்தும்போது சண்முகம் என்னிடம் வந்து, ''அவனை அவன் போக்கிற்கே விட்டுவிடு. மேடையில் அவன் நண்பராக நடிப்பான். அவன் வசனங்களைச் சொல்லும் போது எனக்கே சிரிப்பு வருகிறது.'' என்றார்.

''நீங்கள் சிரிப்பீர்கள், நீங்கள் எழுதிய வசனம். ஆனால் மேடையில் பார்க்கும் போது ரசிகர்கள் சிரிக்க வேண்டுமே,'' என்றேன்.

''அதெல்லாம் சிரிப்பார்கள். நீ அவனைத் திருத்தாதே,'' என்றார்.

இதைக் கேட்க எனக்குச் சற்று ஆத்திரமாகவே இருந்தது. ''மேடையில் நவரத்தினராசா பேசும் உங்கள் வசனங்களுக்கு இரசிகர்கள் சிரிக்காவிட்டால் என்னைக் கேட்கக் கூடாது,'' என்றேன். அத்துடன் அதை ஒரு 'செலேஞ்' ஆகவே எடுத்துக்கொண்டு நவரத்தினராசாவை அவரது போக்கிற்கே விட்டுவிட்டேன்.

நாடகம் மேடையேறியபோது தான் சண்முகமும் நவரத்தினராசாவும் தங்கள் தவறை உணர்ந்தார்கள். மற்ற நடிகர்கள் பேசிய நகைச்சுவை வசனங்களுக்கெல்லாம் சிரித்துக் கரகோசம் செய்த ரசிகர்கள், நவரத்தினராசாவின் வசனங்களுக்குச் சிரிக்கவே இல்லை.

நான்கு, நடராஜசிவத்தின் நட்புக் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகத்திற்குப் பின்

'கடவுள் எங்கே?' நாடகம் மேடையேற்றப்பட்ட காலத்தில் நண்பர் சி. சண்முகம் அவர்களுக்கு, கொட்டாஞ் சேனை இராமநாதன் தொடர் மாடி வீடுகளில், மூன்று வீடுகள் இருந்தன. கீழே இரண்டு வீடுகளும், நான்காவது மாடியில் ஒரு வீடும் இருந்தன. கீழே இருந்த இரண்டு வீடுகளிலும் சண்முகம் குடும்பத்தினர் இருந்தனர். நான்காம் மாடியில் இருந்த வீட்டில் சண்முகத்தின் ஒபீஸ் நண்பர் ஒருவர் மட்டும் தனியாக இருந்தார்.

நாடகம் மேடையேறி முடிந்தபின், நான்காம் மாடியில் இருந்த வீட்டில் நானும் தங்கத் தொடங்கினேன்.

நண்பர் நடராஜசிவம் அப்போது பத்தாவது வகுப்புப் படித்துவிட்டு, வீட்டிலே இருந்த சமயம். 'கடவுள் எங்கே?' நாடகத்தில் ஏற்பட்ட நட்பு காரணமாக இவரும் என்னுடன் வந்து தங்கத் தொடங்கினார்.

நண்பர் நடராஜசிவமும் நானும், நான்காவது மாடியில் அமைந்திருந்த சண்முகத்தின் வீட்டில் தங்கியிருந்த அந்த நாட்களை, கவித்துவமான நாட்கள் என்று சொல்லத் தோன்றுகிறது.

இருவருக்குமே வருவாய் தரக்கூடிய தொழில் எதுவும் கிடையாது. ஆனால் நண்பர் நடராஜசிவத்துக்கோ வீட்டில் சாப்பாடு இருந்தது. எனக்கோ வீட்டில் உள்ளவர் களது சாப்பாட்டைக் கவனிக்க வேண்டிய பொறுப்பும் இருந்தது.

மாதர் பகுதியில் அல்லது உரைச்சித்திரங்களில் நடிப்ப தற்காக இலங்கை வானொலியிலிருந்து அழைப்பு வரும். போய் நடித்தால், பதினைந்து ரூபா கிடைக்கும். ஒரு மாதத்திற்கு இரண்டு மூன்று முறை இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்புக்கள் அப்போது வருவதுண்டு. சிறுகதைகளேதும் பத்திரிகைகளில் பிரசுரமானால் இரண்டு மூன்று மாதங்கள் கழித்து பதினைந்து ரூபாய்க்கு ஒரு 'செக்' வந்து சேரும். அதில் பெரும் பகுதியை வீட்டுக்குக் கொடுத்து விடுவேன்.

இப்படியே ஒரு மாதத்தில் ஏழெட்டு நாட்களுக்கே செலவுக்குப் பணமிருக்கும். எஞ்சிய நாட்களெல்லாம் நடராஜசிவமே துணை.

காலையில் நடராஜசிவம் கண்விழிக்க எட்டரை ஒன்பது மணியாகும். நான் சற்று முன்னரே விழித்து விடுவேன்.

முதல் நாள் இரவுச் சாப்பாடு போக பணமேதும் மிகுதியாக இருந்தால், இருவரும் கீழே வந்து, கடையில் கிடைத்ததைச் சாப்பிடுவோம். பின்னர் நடராஜசிவம் தனது பழைய சைக்கிளில் மதிய உணவுக்கு வழிபார்ப்பதற்காகச் சென்று விடுவார். இல்லையென்றால் அன்றைய காலை, பகல், இரவு உணவுக்காகப் பணம் தேடும் வேட்டையில் சைக்கிளில் புறப்பட்டு விடுவார்.

சில வேளைகளில், காலை உணவுக்கு வழியேதும் கிட்டாது போனாலும் பகல் உணவுக்கான பணத்தோடு வருவார் நடா.

பகலெல்லாம் கலை, இலக்கியம், நடிப்பென்று வேறு கவலைகளே இன்றி பேசுவோம். இரவிலும் அப்படியே. சில வேளைகளில்' இரவு பன்னிரண்டு ஒரு மணிக்கு எழுந்து, கொச்சிக்கடை அந்தோனியார் கோயிலுக்கு முன்னால், கஞ்சி விற்பவனிடம் கஞ்சி வாங்கி நடுத்தெருவில் அமர்ந்து குடிப்போம்.

படுப்பதற்கு இருவருக்குமே ''பாய் கீய்'' எதுவும் கிடையாது. தலையணைக்குப் பதிலாக, **German Short Stories** என்ற தடித்த புத்தகத்தைத் தலைக்கு வைத்துக் கொண்டு நான் படுப்பேன். நடராஜசிவமும் வேறு சில புத்தகங்களைத் தலையணையாகப் பயன்படுத்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கால கட்டத்தில், நான் நிறையப் புத்தகங்களை- அதாவது மேலை நாட்டு இலக்கியகர்த்தாக்களின் நூல்களை வாசித்தேன். அவற்றைப் பொது நூலகத்திலிருந்து கொண்டு வந்து தருபவரும் நடராஜசிவம் தான்.

## பணம் படுத்தும் பாடு

ஒரு நாள் காலை சுமார் பத்தரை மணியளவில் நண்பர் நடராஜசிவம் ஒரு கட்டுக் காசுடன் வந்து சேர்ந்தார்.

''ஏது?'' என்று கேட்டேன்.

அவர் அதற்கு நேராகப் பதில் சொல்லவில்லை. ''இந்தப் பணம் நம்மை எப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறது. இன்று நாம் இதை ஆட்டி வைப்போம்,'' என்றவர் அறையின் கதவு ஜன்னல்களையெல்லாம் பூட்டி விட்டு நோட்டுக்களை அறையெங்கும் வீசி எறிந்தார். பத்து ரூபாய், ஐந்து ரூபாய், இரண்டு ரூபாய் என்று நோட்டுக்கள் பறந்து சிதறின. ''நாம் இந்தப் பணத்தை மதிக்கக்கூடாது; இதை மிதிக்கவேண்டும்,'' என்று கூறி பண நோட்டுக்களுக்குமேல் 'டான்ஸ்' ஆடத்தொடங்கிவிட்டார்.

இருவரும் பண நோட்டுக்களின்மேல் படுத்துப் புரண்டோம், அவற்றைக் கசக்கி ஒருவர் மேல் ஒருவர் எறிந்தோம். உதைத்துத் தள்ளினோம். நோட்டுக்களைக் கசக்கி ஒருவர் தலையில் மற்றவர் போட்டுப் பூசை செய்தோம்.

இப்படியே அரைமணி நேரம் கழிந்திருக்க வேண்டும்.

அரைமணி நேர ஆனந்தத்திற்குப் பின் நடராஜசிவம் எழுந்தார். ''நேரமாகிறது, நான் போக வேண்டும். காசையெல்லாம் அடுக்குவோம்,'' என்றார்.

இருவருமாக கசங்கிய நோட்டுக்களையெல்லாம் நன்றாக அழுத்தித் தேய்த்து மீண்டும் பணநோட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக்கி அடுக்கினோம். நடா நோட்டுக்களை எண்ணிப் பார்த்தார். தொகை சரியாக இருந்தது.

''லைட் பில் கட்டுவதற்கு ஒருவர் தந்த காசு. கட்டி விட்டு வந்து விடுகிறேன்,'' என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

அன்று பணத்தின்மேல் எமக்கிருந்த ஆத்திரத்தை நாம் தீர்த்துக் கொண்ட அழகு இன்னும் என் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது.

## முதல் சிகரெட்

வேறு ஒரு நாள் பகல் உணவுக்காக பாணும் பருப்புக் கறியும் வாங்கிக் கொண்டு நடராஜசிவம் வந்து சேர்ந்தார். கூடவே இரண்டு சிகரெட்டுக்களும் வாங்கி வந்திருந்தார். அப்போது நடா 'போர் ஏசஸ்' என்ற ரக சிகரெட் நிறையப் பற்றவைப்பார்.

இருவரும் பாணும் பருப்பும் சாப்பிட்டோம். சாப்பாடு முடிந்ததும் நடா ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்து அனாயாசமாக வாயாலும் மூக்காலும் புகை விட்டார். ஒவ்வொரு நாளும் நடா சிகரெட் பற்றுவதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன். ஆனால் அன்று ஏனோ நாமும் ஒன்றைப் பற்றவைத்துப் பார்த்தாலென்ன என்றதொரு சபலம் தட்டியது.

''நானும் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துப் பார்க்கட்டுமா?'' என்று கேட்டேன். ''தாராளமாகப் பற்றவையும்,'' என்றார் நடா, அதோடு அதுவரை சிகரெட்டைத் தொட்டறியாத எனக்கு எப்படிப் புகையை உள்ளே இழுப்பது, புகையை எப்படிச் சுவாசப் பையில் வைத்திருப்பது, எப்படி வெளியே விடுவது என்றெல்லாம் சொல்லியும் தந்தார். அதன்படி நானும் ஒரு 'போர் ஏசஸ்' சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரெட்டை முழுமையாகப் பற்றவைத்து முடித்து விட்டேன். இரண்டொரு நிமிடங்கள் கழிந்தன. எனக்கு இலேசாகத் தலையைச் சுற்றுவது போலத் தோன்றியது.

நிமிடங்கள் செல்லச் செல்ல, வெயர்த்துக் கொட்டத் தொடங்கியது. தலை வேகமாகச் சுழன்றது. ஏதோ அடிவயிற்றிலிருந்து மேலெழுந்து வருவதைப்போல... என்னால் தாங்கவே முடியவில்லை. நான் சாகப் போகிறேனோ என்றுகூட நினைத்தேன். உடனிருந்த நடராஜசிவம் என்ன செய்வதென்று அறியாது தவித்தார்.

என்னால் அடக்க முடியவில்லை. சட்டென்று வாந்தியெடுத்து விட்டேன். நடராஜசிவம் கீழே ஓடிச்சென்று சுடச்சுடக் கோப்பி கொண்டு வந்து தந்தார். குடித்து விட்டுப் படுத்து விட்டேன்.

நித்திரை விட்டெழுந்த போது மீண்டும் பழைய நிலைக்கு உடல் திரும்பிவிட்டதை உணர்ந்தேன். ஆனால் என் உள்ளத்தில் புதியதொரு போராட்டம் உருவாகி இருந்தது. 'என்னைவிட வயதில் குறைந்தவர்களெல்லாம் பெக்கட் கணக்கில் சிகரெட் புகைக்கும் போது, என்னால் ஒரு சிகரெட் பற்றவைக்க முடியவில்லையே. அப்படி யானால் என் உடம்பில் ஏதாவது கோளாறு உண்டோ?' என்று எண்ணத் தொடங்கினேன். எப்படியும் இந்தச் சிகரெட்டைப் புகைத்தே தீருவதென்று சங்கற்பம் செய்து கொண்டேன்.

என் முதல் சிகரெட் அனுபவம் பற்றி நண்பன் ஜோக்கிடம் கூறினேன். அவன் அப்போது 'ஸ்போட்ஸ்மன்' என்ற ரக சிகரெட் புகைத்து வந்தான். ''ஸ்போட்ஸ்மன் நல்ல **Soft** சிகரெட், அதைப் பற்றவைத்துப் பாரும்,'' என்றான். அதன்படி 'ஸ்போட்ஸ்மன்' சிகரெட் பற்ற வைக்கத் தொடங்கினேன். அன்று தொடங்கிய அந்தப் பழக்கம், இன்றும் என்னைப் பிடித்தாட்டுகிறது. இதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசித்திரம் என்னவென்றால், எனக்குப் புகைபிடிப்பதற்குப் பழக்கிய நண்பர் நடராஜசிவம், இப்போது சிகரெட்டையே தொடுவதில்லை. ஆனால் எனக்கோ அந்தப் பழக்கத்தை விடமுடியாமல் இருக்கிறது.

## வறுமை கொடிது

இப்படியே வறுமையும், கவலையும், இலக்கியமும் கைகோத்து, நாட்கள் நகர்ந்தன.

'கொடிது கொடிது வறுமை கொடிது, அதினிலும் கொடிது இளமையில் வறுமை,' என்று பாடினார் ஒளவையார்.

ஆனால் வறுமையினால் நான் கற்ற பாடங்கள் அதிகம். கலைஞனுடன் வறுமை கைகோத்து வருவது ஏன் என்பதைப் புரிந்து கொண்டேன். அதனால் ஏற்படும் அனுபவங்கள், கலைஞனின் கற்பனைக்கு எப்படி மெருகேற்றுகின்றன என்பதையும் உணர்ந்தேன். வறுமை என்னும் தீ உண்மையான கலைஞனை எவ்வாறு சுத்திகரித்து, அவன் மனத்திலே மனிதாபிமானம் என்ற விதையை எவ்விதம் விதைத்து, அவனது நோக்கைப் பரந்துபட வைக்கிறது என்பதைப் பின்னர் என்னால் உணர முடிந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கம்ப ராமாயணத்தில் வருவதாக ஏதோ ஒரு புத்தகத்தில் படித்த ஒரு பாடலின் கருத்து ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரே வீட்டில் எப்படி இரண்டு பெண்கள் வாழ முடியாதோ அதேபோல லக்ஷ்மியும் சரஸ்வதியும் ஒரே வீட்டில் வாழமாட்டார்கள். ஏனென்றால் இருவருமே பெண்கள் என்று கவித்துவமாக எழுதியுள்ளாராம் கம்பர். எனவே சரஸ்வதியைக் காதலிக்கும் என்னை லக்ஷ்மி கண்ணெடுத்தும் பார்க்கமாட்டாள் என்பதைப் புரிந்து கொண்டேன். எனவே அன்றைய வறுமை நிலை என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் பாதிக்கவில்லை. அன்றைய வறுமையில் ஒரு சுகம் இருந்தது.

இத்துடன் எனது ஆரம்பகால கலை இலக்கிய அனுபவங்களின் முதல் கட்டம் முடிவடைவதாக எனக்குள் ஒரு பிரமை தோன்றுகிறது. இதற்கு இன்னுமொரு காரணம், எனது இருபத்தைந்து வருட வாழ்க்கையில் எனக்கேற்பட்ட கலை, இலக்கிய ரீதியான தாக்கங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்ட திருப்தியாகவும் இருக்கலாம்.

எனவே வசதி கருதி, இது வரை நான் கூறியவற்றை முதற்பாகம் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் விட்ட இடத்திலிருந்து தான் தொடரப் போகிறேன்.

—:★:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

517684

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
LIBRARY
12-11-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-11-2000
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-11-2000
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியர் பற்றி...

1940 ஆம் ஆண்டில் கொழும்பில் பிறந்த ஜோர்ஜ் சந்திரசேகரன், 1968 ஆம் ஆண்டு இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பில் பகுதி நேர அறிவிப்பாளராகச் சேர்ந்து 1971 ஆம் ஆண்டில் நிரந்தர அறிவிப்பாளராக நியமனம் பெற்றார். 1980 ஆம் ஆண்டு முதலாந்தர அறிவிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றார்.

செய்தி வாசித்தல், நேர்முக வர்ணனை, நிகழ்ச்சித் தயாரிப்பு போன்ற பல்வேறு ஒலிபரப்புத் துறைகளிலும் ஈடுபட்டுத் தனக்கென தனி முத்திரையைப் பதித்திருக்கின்றார்.

சுமார் பத்தாண்டுகளாக வானொலி நாடகத் தயாரிப்பாளராகக் கடமையாற்றித் திறமைமிக்க பல எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் உருவாக்கிய தோடு சிறந்த நாடகங்களை எழுதி, நடித்து நெறிப்படுத்தியும் இருக்கின்றார்.

ரூபவாஹினியில் பல தொலைக்காட்சி நாடகங்களை எழுதியதுடன் நடித்தும் இருக்கின்றார். தற்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் அமைப்பாளராகக் கடமையாற்றும் இவர், தயாரித்தளித்து வரும் நிகழ்ச்சிகளில் கலைப்பூங்கா என்ற கலை இலக்கிய நிகழ்ச்சி மிகவும் தரமானதொரு நிகழ்ச்சியாகும்.

இவர் எழுதிய 'பொம்மலாட்டம்', 'ஒரு வாழ்க்கை முடிச்சு அவிழ்கிறது' என்ற நாவல்கள் முறையே செய்தி, மித்திரன் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

''ஜோர்ஜ் சந்திரசேகரனின் சிறுகதைகள்'' என்ற தலைப்பிலான சிறுகதைத் தொகுதியும் சமீபத்தில் வெளி வந்துள்ளது. இவருக்கு சர்வதேச நிறுவனம் ஒன்று ஒலிபரப்புத்துறைக்காக ''உண்டா'' விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. இத்துறையிலே இவர் சிறந்து விளங்க காரணகர்த்தாவாக இருந்தவர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களாவார். இவரது இந்த நூல் வாழ்வின் அனுபவங்களைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

என். எஸ். உதயசந்திரன்

517684
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org